

இமையாக
நானிருப்பேன்...!
உமா பாலகுமார்

## உள்ளே...

1. இமையாக நானிருப்பேன்...! 5

2. உன் பார்வை ஒரு வரம் 134

# இமையாக நானிருப்பேன்...!

## 1

விடியலெனும் பூ, வானில் மலர ஆரம்பித்திருக்க, அதில் ஒற்றை மகரந்தமாய், கம்பீரச் சூரியனின் உதயம்!

வெண்ணிற வண்டுகளாய் மேகங்கள் அங்குமிங்கும் மிதந்து நகர்ந்ததில், வானம் நீலநிறப் பூந்தோட்டமாக விரிந்து தெரிந்தது.

விருதுநகர் ஸ்டேஷனுக்குள் நுழைந்த ரயில், அவ்வளவு நேரம் வேகமாக ஓடிவந்ததில் இரைத்துப் பெருமூச்சு வாங்கி, ஒரு குலுக்கலுடன் தன் இயக்கத்தை நிறுத்தியது.

தங்களது பொருட்களை எல்லாம் சரிபார்த்து தனியே எடுத்து வைத்த 'சக்திவாசினி', தன் தாய் விசாலத்திடம் திரும்பினாள்.

''அம்மா... நீங்க லக்கேஜ் எதையும் எடுக்க வேணாம். கீழே இறங்கி நில்லுங்க... ரெண்டு சூட்கேஸ்தானே... நான் எடுத்துட்டு வரேன்'' மென்மையாகக் கூறினாள்.

''சக்தி... நான் என்ன உன் பேஷண்ட்டா? என்னாலயும் தூக்க முடியும்... ஆளுக்கு ஒண்ணா எடுத்துக்கலாம்... வா!'' எனும்போதே ஜன்னலருகில் அந்தக் குரல் கேட்டது.

''ஒரு நிமிஷம்மா... நீங்க எங்க ஊருக்குப் புதுசா வந்திருக்கற டாக்டரம்மாதானே?... எல்லாத்தையும் வைங்க... நாங்க எடுத்துட்டு வரோம்... ரெண்டு பேரும் கீழே இறங்குங்க...'' என்றபடி உள்ளே ஏறி வந்தார் ஒருவர்.

அவருடன் டிரைவர் போல் ஒருவரும் உடன் வர, சூட்கேஸ்களில் விலையுயர்ந்த பொருட்கள் இருந்ததால், ''நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' சிறு முறுவலுடன் கேட்டாள் சக்திவாசினி.

''நாங்க பெரிய ஐயா வீரபாண்டியன் வீட்டில இருந்து வந்திருக்கோம்மா... நான் அங்கே மேனேஜரா இருக்கேன். ஐயாதான் உங்களை அழைச்சிட்டு வரச் சொல்லி, வண்டி அனுப்பினாங்க... உங்களுக்காக வீடெல்லாம் சுத்தம் பண்ணி வெள்ளையடிச்சித் தயாரா இருக்கும்மா...'' என்றபடி டிரைவரை ஏவினார்.

இருவரும் எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொள்ள, மீதமிருந்த ஹேண்ட்பேகை மட்டும் எடுத்துக் கொண்டவள், ''தேங்க்ஸ்'' என்றபடி அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

டாக்டருக்குப் படித்து முடித்து, ஹவுஸ் சர்ஜன் பயிற்சியையும் முடித்த பிறகு, கிராமத்தில் பணி புரிய வேண்டும் என்ற ஆவலில் அரசாங்க வேலைக்கு மனுப் போட்டு, பிரைமரி ஹெல்த் சென்டரில் பணி புரிவதற்காக, இங்கு அருகில் இருக்கும் கிராமத்திற்கு வந்திருக்கிறாள் சக்திவாசினி.

சென்ற வருடம் அவளுடைய அப்பா இறந்து விட்டதால், ஒரே துணையான அம்மாவுடன் அவள் ரயிலில் கிளம்பி வர, சாமான்களை எல்லாம் லாரியில் ஏற்றி எடுத்து வருகிறார், அவளுடைய சித்தப்பா மனோகரன்.



அவளுக்கென்று, அந்த கிராமத்தில் வீடு ஏற்பாடு செய்திருப்பதாக, மருத்துவமனை நிர்வாகத்திலிருந்து முன்பே கடிதம் வந்திருந்தது.

ஸ்டேஷனுக்கு வெளியே நின்றிருந்த அம்பாஸடர் காரின் பின்புறம், அவளும் அம்மாவும் அமர்ந்து கொள்ளக் கார் கிளம்பியது.

அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வழி முழுவதும், தென்னந் தோப்புகளும் பசுமையான வயல்களும் இரு புறமும் அணிவகுக்க, சில்லென்ற அதிகாலைக் காற்றின் வருடலுடன், கிராமத்துக்கே உரித்தான நெல் மணமும் சேர்ந்து மனதை வேசாக்கின.

அரை மணி நேரப் பயணத்தில் ஊர் வந்துவிட, நகர வாழ்க்கையிலிருந்து மிகவும் வித்தியாசமான சூழலுடன் இருந்தது அந்த இடம்!

ஊருக்குள் நுழைந்ததுமே, தங்கள் கிராமத்தைப் பற்றி விவரித்துக் கொண்டே வந்தார் அந்த மேனேஜர்.

ஆற்றுப் பாலம் தாண்டியதும் தெரிந்த முதல் திருப்பத்தில் காரை விடச் சொல்லி பெரிய தோட்டத்தின் நடுவே அமைந்திருந்த ஒரு வீட்டின் எதிரில் காரை நிறுத்தினார்.

* * *

இருவரும் இறங்கியபோது, சுற்றிலும் முள் வேலியிடப் பட்டு மரங்கள் சூழ்ந்து எதிரில் தெரிந்த அந்தப் பெரிய ஓட்டு வீடு, சக்தியின் மனதை மிகவும் கவர்ந்தது.

வேலிப் படலைத் திறந்து நீண்ட மண் பாதையில் உள்ளே சென்றபோது, முன்புறம் அழகிய தூண்களுடன் பெரிய வெராந்தாவும், அதில் முழுவதும் பெயிண்டினால் வரையப் பட்டிருந்த கோலங்களும், அழகுக்கு அழகு சேர்த்தன.

வாசல் கதவு திறந்தே இருக்க, அப்போதுதான் உள்ளே யிருந்து வந்த ஒரு பெண், அவர்களைக் கண்டதும் கூச்சத் துடன் புன்னகைத்தாள்.

சக்தியிடம் திரும்பிய மேனேஜர், ''டாக்டரம்மா... இவதான் செவந்தி! வீட்டு வேலை செஞ்சி, தோட்டம் பெருக்கி, எல்லாத்துக்கும் உங்களுக்கு உதவியா இருப்பா..! புள்ளே... அவங்களைக் கும்பிட்டுக்க'' என்றார்.

''வணக்கம்மா'' என்றவளுக்குப் பதிலாய் வணக்கம் கூறிப் புன்னகைத்து விட்டுத் திரும்பியபோது, ''சாமா னெல்லாம் எப்பம்மா வரும்?'' என்று கேட்டார் அவர்.

''லாரியில சாமானெல்லாம் ஏத்திட்டு, சித்தப்பாவும் கூடவே வராங்க.. அநேகமா இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க.''

''சரிம்மா... நான் போயி ரெண்டு ஆளுங்களை அனுப்பி வைக்கிறேன். இன்னிக்கு முழுக்க அவங்க உங்க கூடவே இருந்து எல்லாத்தையும் அடுக்கி வைச்சிடுவாங்க.. அப்ப நான் கிளம்பறேன்'' என்றபடி வீட்டுச் சாவியை அவளிடம் ஒப்படைத்தார்.

''செவந்தி! அவங்களுக்கு வீட்டைச் சுத்திக் காமிச்சுடு... அப்புறம் சொல்ல மறந்திட்டேம்மா! இன்னிக்குப் பெரிய வீட்டிலருந்து மூணு வேளையுமே உங்களுக்குச் சாப்பாடு வந்துடும்.. இன்னிக்குதானே வந்திருக்கீங்க... உடனே சமைச்சிக் கஷ்டப்பட வேணாம்னு பெரியம்மா சொல்லச் சொன்னாங்க... நாளையில இருந்து சமையலை ஆரம்பிக் கலாம்!'' என்றபடி விடை பெற்றார்.

தன்னை இதுவரை பார்த்தேயிராத போதும், யாரென்றே அறியாத நிலையிலும், மனிதாபிமானத்துடன் இத்தனை



உதவிகளைச் செய்பவர்களிடம், கட்டாயம் தன் நன்றியைத் தெரிவித்துவிட வேண்டுமென்று நினைத்தபடி வீட்டிற்குள் சென்றாள் சக்தி.

உள்ளே நுழைந்ததுமே தெரிந்த பெரிய ஹாலும், அதைக் கடந்து சென்றால் நடுவில் பெரிதாகத் தெரிந்த கம்பிகளிட்ட முற்றமும் வித்தியாசமாய்...!

முற்றத்தைச் சுற்றிலும் தூண்களுடன் தெரிந்த தாழ்வாரங் களும், ரெட் ஆக்சைடில் பளபளத்த தரைகளுமாய், அந்த வீட்டின் அமைப்பே பழமையான அழகுடன், மனதில் நெருக்கமான ஒரு தோழியைப் போல் உடனே இடம் பிடித்துக் கொண்டது.

தாழ்வாரத்தின் நான்கு புறங்களிலும் அறைகள் இருக்க, அவைகளில் முன்புறமிருந்த இரண்டு அறைகளைப் படுக்கையறைகளாக உபயோகப்படுத்திக் கொள்ளலா மென்று தோன்றியது.

பின்புறமிருந்த அறைகளில் ஒன்று சமையலறை என்பதால், மற்றொன்றை முன்பிருந்தவர்கள் பூஜையறை யாகப் பயன்படுத்தினார்கள் என்ற விபரத்தை செவந்தி கூறினாள்.

அடுத்திருந்த வெராந்தாவில் பாத்ரூமும், டாய்லெட்டும் இருப்பது தெரிய, அங்கும் சமையலறைத் தொட்டிக்கும் மட்டும், தண்ணீர்க் குழாய்கள் இணைக்கப்பட்டிருந்தன.

அவர்கள் இருவருக்குமென்று பார்த்தால், அது பெரிய வீடாகத் தோன்றினாலும், நகர்ப்புற சூழ்நிலைக்கு நேர் மாறாய், வித்தியாசமாக இருந்தது அந்த வீடு!

''என்னம்மா... உங்களுக்கு வீடு பிடிச்சிருக்கா? அட்டாச்டு பாத்ரூம் வசதியெல்லாம் இங்கே எதிர்பார்க்க முடியாது போலிருக்கு... இல்லம்மா?'' என்று கேட்டாள் சக்தி.

''ஆமாம் சக்தி... ஆனா எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடிச்சிருக்கு... விஸ்தாரமா எவ்வளவு இடம் பாரு! சென்னையில இருந்த என்னை மாதிரி ஆளுங்களுக்கு இது சொர்க்கம் மாதிரி! அப்படியே எங்களோட கிராமத்து வீட்டை நினைவு படுத்துது'' மகிழ்ச்சி பொங்கக் கூறினார் விசாலம்.

சக்தி அவருடைய தோளில் செல்லமாக முகம் பதித்தாள்.

''உங்களுக்குதாம்மா பிடிச்சிருக்கணும். ஏன்னா நீங்க தானே முழுநேரமும் இங்கே இருக்கப் போறீங்க..?'' என்றவள், பிறகு எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தோட்டத்திற்கு வந்தபோது, அங்கு எல்லாவித மரங்களும் இருந்தன.

குளிர்ச்சியாய் நிழலுடன் இருந்த தோட்டத்தில், வேலியோரத்தில் தெரிந்த மகிழம்பூ மரமும், பவள மல்லி மரமும் அந்தப் பிராந்தியமெங்கும் வாசனையைப் படர விட்டுக் கொண்டிருந்தன.

அந்த இடமே நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டிருப்பது தெரிய, இந்தக் காலத்தில் சுத்தமான காற்றும் தண்ணீரும் கிடைப்பது, ஒரு பரிசென்றே தோன்றியது.

ஓவியம் போல் அழகாக, அமைதியாக இருந்த அந்த இடம் சக்திக்கு மிகவும் பிடித்திருந்தது.

பிறகு அவள் குளித்துவிட்டு வந்தபோது, பெரிய வீட்டிலிருந்து டிபன் வந்திருந்தது.



உடனே லாரியும் வந்துவிட, சித்தப்பா குளித்துவிட்டு வந்தவுடன், பால் காய்ச்சிக் குடித்தனர்.

பிறகு சாப்பிட ஆரம்பித்தபோது, இட்லி, பொங்கல், கேசரி என்று சுத்தமான நெய் மணத்துடன் டிபன் ருசியாக இருந்தது.

லாரியில் வந்தவர்களுக்குப் பணம் கொடுத்தனுப்பி விட்டு, அவர்கள் தோட்டத்தில் இறக்கி வைத்த சாமான் களைப் பெரிய வீட்டிலிருந்து வந்திருந்த வேலையாட்களை வைத்து, உள்ளே அடுக்கினர்.

கடைசியாக வெளி வெராந்தாவிலிருந்த உத்திரத்தில், சங்கிலியுடன் இணைக்கப்பட்டிருந்த பிரம்பு ஊஞ்சலை மாட்டிவிட்டு நிமிர்ந்தபோது, மணி இரண்டாகியிருந்தது.

ஒரு மணிக்கே சாப்பாடு வந்திருக்க, விசாலமும் செவ்வந்தியும் எல்லோருக்கும் பரிமாற, சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்தபோதுதான், விசாலம் மெதுவாக அவளிடம் வந்தார்.

''சக்தி... சந்துருவுக்கு நாம இந்த ஊருக்கு வந்துட் டோம்னு ஒரு லெட்டர் போட்டுடலாமா?''

''அதுக்கு ஏம்மா என்னைக் கேக்கறீங்க? எழுதிப் போடுங்க'' என்றபடித் திரும்பிப் படுத்துக் கொண்டாள் சக்தி.

பிறகு விசாலம் அனுப்பில் உறங்கிவிட, தூக்கமின்றிப் பின் நோக்கிச் சென்ற மனதில் பழைய நினைவுகள் மெதுவாய் சரம் கோர்த்தன.

வானில் பறக்கும் ஒற்றைப் பருந்தாய் சந்துருவைச் சுற்றியது, அவள் நினைவு!

## 2

சக்தி, மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருந்த புதிது!

ஒரு நாள் மாலை, பேருந்தில் பயணம் செய்த அலுப்புடன், அவள் வீட்டுக்குள் நுழைந்தபோதுதான், அவளுடைய அப்பா சுந்தரத்தின் குரல் கோபமாகக் கேட்டது.

உள்ளே சென்றால், சுந்தரத்திற்கு எதிரில் அவளுடைய அண்ணன் சந்திரகுமார்,கோபத்துடன் நின்று கொண்டிருந்தான்.

அவளுக்கும் சந்துருவிற்கும் நான்கு வயது வித்தியாசம். அவன் அப்போது எம்.காம். படித்துக் காண்டிருந்தான்.

வீட்டில், அடிக்கடி சுந்தரத்திற்கும் அவனுக்கும் கருத்து வேறுபாடுகள் நிகழ்வது சகஜம் என்பதால், கேலிப் புன்னகையுடன் உள்ளே வந்தாள் அவள்.

''என்னப்பா... இன்னிக்கு என்ன ப்ரச்னை...?'' கேட்டபடி வந்த மகளைப் பார்த்தவர், ''இவன் என்ன சொல்றான்னு கேட்டியா சக்தி? இவனோடக் கூடப் படிக்கிற பொண்ணை விரும்பறானாம்'' என்றார் கோபமாக.

ஆச்சர்யத்துடன் நிமிர்ந்தவள், ''என்னண்ணா... நல்லா மாட்டிக்கிட்டியா?'' குறும்புடன் கண் சிமிட்டிக் கேட்டபோது, அவன் அவளைக் கோபத்துடன் முறைத்தான்.

''சக்தி..!'' அப்பாவின் குரல் சீற்றத்துடன் ஒலித்தது.

பதறிப் போய் அவள் திரும்பியபோது, ''அது மட்டுமில்லை... அந்தப் பொண்ணு அவங்க வீட்டுக்கு ஒரே



பொண்ணாம்... அதனால இந்த துரை, அவங்க வீட்டோட மாப்பிள்ளையாப் போகப் போறாராம்... இவன் இன்னும் படிப்பையே முடிக்கலை.. ஒரு தங்கச்சி வேற இருக்கா.. அப்படி என்ன வயசாயிடுச்சி இவனுக்கு..?'' எனும்போதே அவர் கண்களில் பெரும் வலி தெரிந்தது.

அவர் கூறியதின் பொருள் புரிந்து திடுக்கிட்டு நிமிர்ந்தவள், என்ன சொல்வதென்றே புரியாமல் திரும்ப, விசாலம் கண்ணீருடன் கதவைப் பிடித்தபடி நின்றிருந்தார்.

''எல்லாம் இவ குடுக்கற செல்லம்.. அதான் இப்படி நடந்துக்கறான்... இப்ப அழுது என்ன ப்ரயோஜனம்?''

இரைந்த சுந்தரத்தை சமாதானப்படுத்த அவள் முயன்றபோது, சந்துரு விசாலத்திடம் சென்றான்.

''அம்மா... என்னைக் கண்டாதான் எப்பவுமே அவருக்குப் பிடிக்காதே! தொலைஞ்சி போயிட்டேன்னு நிம்மதியா இருக்கச் சொல்லுங்க... சுகந்தி வீட்டில அவங்களோட எக்ஸ்போர்ட் பிசினஸை நானே பாத்துக்கறதா முடிவெடுத்துட்டேன்...

''எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. அத தயவு செஞ்சு கெடுத்திட வேணாம்னு உங்க வீட்டுக்காரர்கிட்டச் சொல்லிடுங்க...'' என்றபடி சட்டையை மாட்டிக் கொண்டு வேகமாக வெளியேறினான்.

''அண்ணா! ஏன் இப்படிப் பேசறே..? கொஞ்சம் பொறுமையா இரு!''

தடுத்தவளை விலக்கி நிறுத்திவிட்டு அவன் கோபத்துடன் செல்வதைக் கண்ணீருடன் செய்வதறியாமல் பார்த்துக் கொண்டு நின்றார் விசாலம்.

''போடா... இனிமே உனக்கு யாருமே இல்லை... உங்க அப்பா செத்துட்டாருன்னு நினைச்சிக்க..?'' கோபமாகக் கத்திவிட்டுத் தன் அறைக்குள் சென்றார் சுந்தரம்.

அதன் பிறகு, சந்துரு வீட்டிற்கு வரவேயில்லை!

ஒரு முறை சுந்தரம் அலுவலகத்திற்குச் சென்றிருக்கும் போது, வீட்டிற்கு வந்து தன் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, விசாலத்திடம் ஆசீர்வாதம் வாங்கிச் சென்றவன்தான்!

விசாலம் எவ்வளவோ கெஞ்சியும், அவன் தன் தந்தையிடம், சமாதானமாகப் போக உடன்படவில்லை... சுந்தரமும், அவனைப் பற்றிய பேச்சே வீட்டில் இனி எடுக்கக் கூடாதென்று தீர்மானமாகக் கூறிவிட்டார்.

பிறகு, யாருக்கோ அனுப்புவது போல் தபாலில் வந்த திருமண அழைப்பிதழைக் கிழித்துப் போட்ட சுந்தரம், அவர்கள் இருவரும் எவ்வளவோ கெஞ்சியும், திருமணத்திற்கு அனுப்பவும் மறுத்து விட்டார்.

அன்று முழுவதும் அவர்களின் வீடு சோகக் களை கட்டியிருக்க, சுந்தரமும் அலுவலகம் செல்லாமல் அறைக்குள்ளேயே முடங்கியிருந்தார்.

பிறகு மனைவியுடன் வெளிநாட்டிற்குச் சென்று, அங்கு தன் மாமனாரின் தொழிலைப் பார்த்துக் கொண்டவன், கடிதம் மூலமாக மட்டுமே அரிதாகத் தொடர்பு கொண்டான்.

போன வருடம் சுந்தரம் இறந்தபோது, மலேசியாவிலிருந்து வந்திருந்து காரியங்களை முடித்துவிட்டுச் சென்றவன்தான்!

இப்போது, அபூர்வமாய் வரும் கடிதங்கள் மட்டுமே இணைக்கும் பாலமாய்..!

* * *



நினைவுகள் சிறகு விரித்துத் தரையிறங்க, அருகில் படுத்திருந்த விசாலத்தைப் பார்த்தபோது, என்ன இருந்தாலும், ஒரு தாய்க்கு மட்டும் பிள்ளைப் பாசம் மனதை விட்டு எந்த நாளும் விலகுவதில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் விழிகளை மூடி, மெதுவாகக் கண்ணயர்ந்தாள் சக்தி.

பிறகு அவள் விழித்தெழுந்தபோது, வானம் இருட்டத் தொடங்கி இருந்தது. நிலவுக்கு தூது விட்டு, வானம் இரவுக்காகத் தவமிருந்தது.

சூரியன் மெல்ல விடைபெற்றுக் கொண்டிருக்க, பறவைகள், 'குக் குக்' என்று கூவியபடி, கூடுகளைத் தேடிப் பறந்து கொண்டிருந்தன.

சிறிது நேரம் தோட்டத்தில் நின்று விட்டு, முகம் கழுவி அவள் உள்ளே வந்தபோது, செவந்தியும் விசாலமும் சமையல் சாமான்களைக் கொட்டி வைத்து, ஷெல்ஃபில் அடுக்கிக் கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும், ''நல்லாத் தூங்கினியா சக்தி? நைட்கூட நீ ரயில்லே சரியாவே தூங்கலை.. இந்தா காபி எடுத்துக்க!'' டம்ளரை அவளிடம் நீட்டினார் விசாலம்.

பிறகு தன் அறையிலிருந்த புத்தகங்களையும், பொருட்களையும் அடுக்கிவிட்டு வந்தபோது, பெரிய வீட்டிலிருந்து இரவு டிபன் வந்திருந்தது.

சாப்பிட்ட பிறகு, சித்தப்பா ஊருக்குக் கிளம்பிச் செல்ல, புது இடமென்பதால், சக்திக்கு உறக்கம் இமை தழுவ மறுத்தது.

வெகு நேரம் கழித்தே, நித்திரையைத் தழுவினாள் அவள்.

காலையில் செவந்தி வந்துவிட, அனைவரும் சேர்ந்து செய்ததில், எல்லாப் பொருட்களும் அந்தந்த இடத்தில் அடுக்கப்பட்டு, வீடே நேர்த்தியாய் மாறியது.

முற்றத்தைச் சுற்றிலும் நிறைய பூந்தொட்டிகள் வைத்து, அடியில் தாம்பாளங்களை வைக்கச் செய்த பிறகு நிமிர்ந்து பார்த்தால், வீடே பசுமையான அழகுடன் மிளிர்ந்தது.

மாலையானதும் சக்தி, செவந்தியுடன் வீரபாண்டியனின் வீட்டிற்குக் கிளம்பினாள்.

இருவரும் ஊரைச் சுற்றிப் பார்த்தபடியே மெதுவாக நடந்து சென்றனர்.

பெரிய மதிற்சுவருக்குள், பழங்கால அரண்மனை போன்றிருந்த பிரம்மாண்டமான ஒரு வீட்டிற்குள், அவளை செவந்தி அழைத்துச் சென்றாள்.

பிரமிப்புடன் அந்த வீட்டையே பார்த்தபடி, பெரிய கதவுகளைக் கடந்து உள்ளே நுழைந்தபோது, வாசலிலேயே அவளை வரவேற்ற மேனேஜர், பெரிதாகத் தெரிந்த ஹால் சோபாவில் அவளை அமர வைத்துவிட்டு, உள்ளே சென்றார்.

பிறகு உள்ளிருந்து அவருடன் வந்தவனைப் பார்த்ததும், குழப்பமும் சங்கடமுமாக எழுந்து நின்றாள் அவள்.

அவனுடைய முகத்திலும், சக்தியைப் பார்த்தவுடன் அதிர்ச்சியும் சந்தோஷமும் கலவையாகத் தெரிந்தன.

''சக்தி... நீங்க?'' என்றபடி அருகில் வந்தவனைப் பார்த்தவுடன், பழைய நினைவுகள் காற்றில் கலையும் மெல்லிய மேகம் போல், கலங்கலாய் அவளுக்குள் மிதந்தன.



அதற்குள், ஒரு வயதான பெண்மணி அந்த வீட்டுக்கே உரிய கம்பீரத்துடன் வரவும், அவரை வணங்கினாள் சக்தி.

''வணக்கம்மா... நான் டாக்டர் சக்திவாசினி... உங்களையும் சாரையும் பார்த்து, நன்றி சொல்லிட்டுப் போகலாம்னுதான் நான் வந்தேன்.. எங்களுக்காக ரொம்ப சிரமப்பட்டிருக்கீங்க.. உங்க உதவிக்கு ரொம்பத் தேங்க்ஸ்மா!'' மென்மையாகப் புன்னகைத்தபடி கூறினாள்.

''இதுக்கு ஏம்மா நன்றியெல்லாம்...? எங்க ஊருக்குப் புதுசா வர டாக்டருங்களுக்கு, எப்பவுமே ஐயா இந்த மாதிரி ஏற்பாடெல்லாம் செஞ்சிடுவாங்க! தர்மம் தலை காக்கும்பாங்களே... அதனாலயாவது எங்க குலம் தழைக்காதாங்கிற ஆசைதான்!''

ஒரு பெருமூச்சுடன் அவர் நிறுத்தியபோது, சக்தியின் பார்வை கேள்வியாய் உயர்ந்து இளங்கோவை நோக்கியது.

அவன் உதடுகளிலும் ஒரு விரக்திப் புன்னகை தெரிய, அவளருகில் வந்து கைப்பிடித்து அமர வைத்தார் அவர்.

''ஐயா வெளியில போயிருக்காங்க... நாளையில இருந்து நீங்க ஆஸ்பத்திரிக்குப் போகப் போறதா அவங்க சொன்னாங்க! உங்ககூட அம்மா மட்டும்தான் வந்திருக்காங்களாமே... மேனேஜர் சொன்னாரு! பால் காய்ச்சிக் குடிச்சி, எல்லாம் அடுக்கியாச்சா?'' கனிவுடன் கேட்டார்.

''நேத்து காலையிலேயே செஞ்சிட்டோம்மா.. சார்தான் ஆளனுப்பி இருந்தாங்க... வீடெல்லாம் செட் பண்ணியாச்சு... சார் வர நேரமாகுமா? நான் அப்ப கிளம்பறேம்மா!'' மெல்ல எழுந்தாள்.

''இரும்மா! நம்ப வீட்டுக்கு வந்துட்டு எதுவுமே சாப்பிடாமப் போனா எப்படி? காபி சாப்பிட்டுப் போகலாம்'' என்றபடித் திரும்பி அங்கிருந்த வேலைக்காரப் பெண்ணிடம் கண்களாலேயே ஜாடை செய்ய, அவளும் உள்ளே சென்றாள்.

பிறகு எதிரில் அமர்ந்திருந்த இளங்கோவிடம் திரும்பியவர், ''இவர்தான் எங்க வீட்டு மாப்பிள்ளை.. என் பொண்ணு சித்தரஞ்சனியோட வீட்டுக்காரங்க'' என்றார்.

தன்னை, அவன் முன்பே அறிந்தது போல் காட்டிக் கொள்வானா மாட்டானா என்பது புரியாமலே, மெதுவாக முறுவலித்து வணங்கியபோது, ''எப்படி இருக்கீங்க சக்தி?'' என்றவன் அவரிடம் திரும்பினான்.

''அத்தை... எனக்கு இவங்களை முன்னாடியே தெரியும்... ஆனா, இன்னிக்கு வரப் போற டாக்டர் இவங்கதான்னு தெரியாது! சென்னையில நம்ம வீடு இருந்ததே, அந்தத் தெருவிலதான் இவங்களும் இருந்தாங்க'' என்றான் அவன்.

அவளிடம் திரும்பிய மணிமேகலை தன் எதிரில் நல்ல உயரத்தில், அளவான உடல்கட்டுடன், சலவைக் கல்லில் செதுக்கிய சிலை போல் திருத்தமான முகத்துடன், அழகின் அர்த்தமாக உயிரோவியமாய் நின்றிருந்தவளையே இமைக்காமல் பார்த்தபடி ஏதோ யோசனையுடன், ஒரு கணம் அசைவற்று நின்று விட்டார்.

பிறகு, ''எனக்கென்னவோ இவங்களைப் பாத்தவுடனே ரொம்ப நாள் பழகின மாதிரி உடனே மனசிலப் பதிஞ்சிட்டாங்க'' என்று கூறினார்.

உடனே அவள் யாரென்று தெரிந்தால் இதே வார்த்தைகளைக் கூறுவாரா என்ற பயம் வந்தது இளங்கோவிற்கு!



காபி வந்துவிட, மௌனமாக அதை அருந்திவிட்டு அவள் எழுந்தாள்.

''ஒரு நிமிஷம் சக்தி! நம்ம வீட்டிலயும் ஒரு பேஷண்ட் இருக்காங்க... அவங்களைப் பாத்து உங்க ஒபீனியனைச் சொல்லணும்.. உங்களுக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லையே?'' இளங்கோ கேட்டான்.

'இல்லை' என்பதுபோல் தலையசைத்துவிட்டுத் திரும்பிய போது, அந்த அம்மாவின் முகம் வேதனையில் சுருங்கி, விழிகள் கண்ணீரில் பளபளத்தன.

''அழைச்சிட்டுப் போங்க மாப்பிள்ளை! நன்றி சொல்ல வந்த இடத்திலே நோயாளியப் பாக்கச் சொல்றாங்களேன்னு நினைச்சிக்காதீங்கம்மா.''

''அது மாதிரி நிச்சயமா நினைக்க மாட்டேன்மா... என் ட்யூட்டி அது தானே?'' என்றபடி இளங்கோவைப் பின் தொடர்ந்தாள் சக்தி.

பெரிய வரவேற்பறையைக் கடந்து அந்த அறைக்குள் நுழைந்தபோது, தான் எதிர்கொள்ளப் போகும் பேரதிர்ச்சியை அவள் அறியவில்லை.

உள்ளே சென்றதும், அங்கு அமர்ந்திருந்த ஒருவன் வெளியேற, கட்டிலின் அருகே சென்றாள்.

அந்தக் கட்டிலின் நீளத்திற்கு கம்பீரமாய்ப் படுத்து, கண் மூடியிருந்த அந்த உருவத்தைப் பார்த்தபோது, அவள் விழிகளில் அதிர்ச்சியும், மனதில் ஒருவித விதிர்ப்பும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

## 3

''**சி**பி...'' அவளறியாமல் சக்தியின் உதடுகள் முணுமுணுத்தன.

''ஆமாம்... சிபியேதான்! இதுக்கு யார் காரணம் தெரியுமா சக்தி... நீங்கதான்!'' என்றான் இளங்கோ ஆழமான குரலில்!

மனது துடித்ததில் விழியோரங்கள் கசிய, ''நானா..?'' என்றபோது, தூய வெள்ளை நிறத்தில் ஜிப்பாவும் குர்த்தாவும் அணிந்து, சுத்தமாக சவரம் செய்யப்பட்ட முகத்துடன், தன் கம்பீரம் தொலைக்காமல் படுத்திருந்த சிபிவர்மனின் விழிகள், மெல்லத் திறந்தன.

முதலில் விட்டத்தில் நிலைத்த பார்வை, பிறகு இளங்கோவிடம் சென்று, சக்தியிடம் முடிவடைந்தது.

ஒரு கணம் மூச்செடுக்க முடியாமல் தவிப்புடன் நின்றிருந்தவளுக்கு, உணர்ச்சிகளைத் தொலைத்த அந்த முகமும், வெறிச்சிட்ட பார்வையும், ஆயிரம் கதைகளைக் கூறின.

அடுத்த நிமிடம் அந்த அறையை விட்டு வேகமாக வெளியே வந்தவள், எதிர்ப்பட்டவர்களை யாரென்றே அறிமுகம் செய்துகொள்ள விருப்பமின்றி, வெளியில் சென்றபோது தான் சித்தரஞ்சனி அவளை முதன் முதலாகப் பார்த்தாள்.

வாசலில் நின்றிருந்த செவந்தி, சக்தியைக் கண்டதும் ஓடி வந்து, ''கிளம்பலாமாம்மா?'' என்றாள்.

''ம்... போகலாம்! வீட்டுக்கு வேண்டாம்... வேற ஏதாவது ஒரு இடத்துக்கு... கொஞ்ச நேரம் அமைதியா காத்தாட உக்காந்திருந்துட்டுப் போகலாமே...!'' பதட்டத்தை மறைத்தபடிக் கூறினாள்.



''வாங்கம்மா! நம்ப வீட்டுக்குப் பின்னாடி பெரிய ஆறு ஒண்ணு ஓடுதுல்லே.. அந்த ஆத்தங்கரை மண்டபம் கொஞ்ச தூரத்துலதான் இருக்கும்மா.. உங்களை அங்கே விட்டுட்டு, அம்மாவைப் போய் அழைச்சிட்டு வந்திடறேன்.. வாங்க'' என்றபடி அவளை அழைத்துச் சென்றாள்.

சக்தியின் மனம் தறி கெட்டு ஓடும் 'பரி'யின் நிலையில் இருந்தது.. மூச்சுக் காற்றை வேண்டி நெஞ்சம் தத்தளித்தது!

சிபியின் இந்த நிலைக்குத் தான் எப்படிக் காரணமாக முடியும் என்ற கேள்வி, மனதைக் கூறு போட, போர்க்களமானது மனது.

ஆற்றங்கரையில் அவளை அமர வைத்துவிட்டு, செவந்தி வீட்டிற்குச் சென்றாள்.

மணலில் அமர்ந்ததுமே, ஈரம் உலராத ஆற்று மணற் பரப்பாய், சிபியின் நினைவுகள் மனதில் நிறைந்தன.

நதியலைகளின் வேகச் சுழற்சியில், மன ஓட்டம் மிதவையாய் சுழல ஆரம்பித்து, பின்நோக்கிச் சென்றது.

* * *

**ச**ந்துரு வீட்டை விட்டுப் பிரிந்து சென்று திருமணமும் செய்து கொண்டு விட, சுந்தரம் அவளை மட்டுமே தன் உயிராய் நினைத்து, டாக்டருக்குப் படிக்க வைத்துக் கொண்டிருந்த நேரம் அது!

சுந்தரம் அரசாங்கத்தில் உயரதிகாரியாகப் பணி புரிந்ததால், சொந்த வீடும், காரும் பணத்திற்கும் வசதிக்கும் பஞ்சமில்லாத நிலைமையுமே, அங்கிருந்தது.

எம்.பி.பி.எஸ். முதல் வருடம் முடியப் போகும் நேரம்!

ஒரு நாள் சக்தியும் அவள் தோழி அபிநயாவும் கல்லூரி பஸ் ஸ்டாப்பில் இறங்கி நடக்க ஆரம்பித்தபோதுதான், அவள் காதருகில் மெல்லக் கிசுகிசுத்தாள் அபி.

''சக்தி... மெதுவா உன்னோட வலது பக்கமாப் பாரேன்.. ரெண்டு பேரு நம்மளையேப் பாத்துக்கிட்டு அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் வாசல்லே நிக்கறாங்க பாரு! நானும் இவங்களைக் கொஞ்ச நாளாப் பாக்கறேன்! அவங்க நம்ம ரெண்டு பேரையும்தான் வாட்ச் பண்ற மாதிரித் தெரியுது...

''ஆனா யாரைன்னுதான் தெரியலை! அது நீயா... இல்லை நானா?'' ராகத்துடன் முடித்தாள்.

அந்த வயதிற்கேயுரிய தெரிந்து கொள்ளும் ஆர்வமும், குறும்பும் அவள் விழிகளில் தெரிந்தன!

''ஏய்... அபி! சும்மாவே வர மாட்டியா? உதைக்கணும்டி உன்னை! எப்பப் பாரு கலாட்டா பண்ணிக்கிட்டு... ரோட்டுல ஆயிரம் பேர் போவாங்க... அவங்க எல்லாரும் நம்மையே பாக்கிற மாதிரி தோணிச்சின்னா, உனக்கு ஏதோ ஆயிடுச்சின்னு அர்த்தம்!''

''ஓஹோ... நீங்க மட்டும் ரொம்ப நல்லாருக்கீங்களோ! இரு! இந்தப் புதிருக்கான விடையை நான் கண்டு பிடிக்கிறேன்'' யோசனையுடன் கூறினாள்.

''ஆமாம்.. இது ரொம்ப முக்கியம்! சி.பி.ஐ ஆபீசரை வரவழைச்சிக் கண்டுபிடிக்கலாம்... வாடி! டைம் ஆச்சு!'' வேகமாக முன்னே சென்றாள் சக்தி.

மாலையில் திரும்பி வரும்போது, அபி அவர்கள் நிற்பதைப் பற்றிக் கிசுகிசுத்ததால், சீற்றமானது சக்தியின் மனது.



அந்தக் கோபத்துடன் வேகமாகத் திரும்பியபோது, எதிர்ப்புறம் இருந்த இருவரும் அவர்களையே பார்ப்பது தெரிந்தது.

ஒருவன் சாதாரண உயரத்திலிருக்க, மற்றொருவன் அசாதாரண உயரத்தில், கம்பீரம் கலந்த அலட்சியத்துடன் நின்றிருந்தான்.

அவள் பார்வையை உயர்த்தியபோது அவன் கண் களிரண்டும் வெகு கூர்மையாய் அவளை உரச, ஒரு நிமிடம் நெஞ்சக் கூட்டுக்குள் குளிர் பிறந்து, இதயம் குலுங்கியது.

அவளைத் தவிர, இந்தப் பூமியில் ஒரு அணுவும் இல்லாதது போன்ற ஒரு சிவீரிடும் பார்வை!

வேகமாகத் திரும்பியவளை, அபியின் கிண்டல் புன்னகை எதிர்கொண்டது.

''என்ன.. நான் சொன்னது உண்மைதானே? ஆனா, எனக்கென்னவோ அவன் உன்னைப் பாக்கத்தான் தினமும் தவமிருக்கறதாத் தோணுது'' குறும்புடன் கூறினாள்.

''ப்ச்... சும்மா வாடி!'' அவளை இழுத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறி அமர்ந்தபோது, ஏனோ சக்தியின் விழிகள் மீண்டும் அவனிடம் சென்றன.

அப்போதும் அவன் பார்வை நீங்காமல் அவளிடமே பதிந்திருந்த விதம் மனதில் சிறு பயத்தை விதைத்தது.

அந்தப் பார்வை...!

பலர் பார்வைகள் பொருளின்றி இருக்கும்.. அரிதாய் சில பார்வைகள் மட்டுமே மனதுக்குள் ஊடுருவும்... உள்ளத்தை அசைத்துப் பார்க்கும்!

அவன் பார்வையும் அந்த வகைதான் என்றாலும், அது ஒரு வேட்டைப் பார்வையாய்...!

தன் இரையிலிருந்து நொடிகூட அகற்றாமல், பார்வையின் மையத்தைக் குவித்து, விலகாதிருக்கும் விழிகளாய்...!

* * *

**வீ**ட்டிற்குச் சென்றவுடன் மற்றதெல்லாம் மறந்து போக, சுந்தரமும் அவளும் சாப்பிட்ட பிறகு மொட்டை மாடிக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தனர்.

''சக்தி! உன் அம்மா இன்னிக்கு அவனைக் கோவில்ல பாத்தாளாம்... உடனே மகனோடயும் மருமகளோடயும் கொஞ்சிட்டு வந்திருக்கா... எவ்வளவு சொன்னாலும் அறிவு கிடையாது!'' சீற்றத்துடன் கூறினார்.

மெதுவாக அவருடைய கையைப் பிடித்தவள், ''அப்பா... விட்டுடுங்க! அம்மாவுக்கும் அண்ணனைப் பாக்கணும், பேசணும்னு ஆசையிருக்காதா... பாவம்! நீங்கதானே சொல்வீங்க... எப்பவுமே நம்மோட விருப்பங்களை வலுக்கட்டாயமா மத்தவங்க மேல திணிக்கக் கூடாதுன்னு! டென்ஷனாகாதீங்கப்பா!'' மென்மையாகக் கூறினாள்.

''சக்தி! உன்கிட்ட சில விஷயங்கள் பேசணும்னுதான் உன்னை மாடிக்குக் கூப்பிட்டேன்... நீயும் சந்துரு மாதிரிப் பொறுப்பில்லாம இருக்கக் கூடாது. படிப்பை முடிக்கற வரைக்கும் மனசை அலை பாயவும் விடக் கூடாது... படிக்கற காலத்துல, காதல் அது இதுன்னு மனசு மாறிடுச்சின்னா, அப்புறம் நாம எடுத்துக்கிட்ட ஒரு காரியத்தை வெற்றிகரமா முடிக்க முடியாது, இல்லையா?



''நல்ல வேளையா, நமக்கு ஆண்டவன் பண விஷயத்துல எந்தக் குறையும் வைக்கலை! அதனால, நீ கிராமங்கள்லே போய் அங்க இருக்கறவங்களுக்கு எல்லாம் நல்லா வைத்தியம் பண்ணனும்கறதுதான் என்னோட ஆசை!

''உன் பாட்டி இறந்து போனப்போ, எனக்கு அஞ்சு வயசு! எங்க ஊரில சரியான மருத்துவ வசதி இல்லாததாலே, இரண்டாவது பிரசவத்தில அவங்க இறந்திட்டாங்க.

''இப்ப டாக்டருக்குப் படிக்கிற நிறைய பேரு ஃபாரினுக்குப் போக ஆசைப்படற அளவு, கிராமங்களுக்குப் போக விரும்பறதில்லை! அதனாலதாம்மா சொல்றேன்..! அப்பா ரொம்ப அட்வைஸ் பண்றேனாடா?'' மெதுவாகக் கேட்டார்.

நிலவின் வெளிச்சம் அவர் முகத்தில் மஞ்சளாகப் படிய, கண்கள் ஒரு வித எதிர்பார்ப்புடன் பளபளத்தன.

அவருடைய தோளில் சாய்ந்து ஆதரவாய் முகம் பதித்தவள், ''எனக்குத் தெரியும்ப்பா! டாக்டருக்குப் படிக்கறதுங்கறது ஒரு விளையாட்டில்லை. என் மனசை வேற எதிலயும் செலுத்தாமப் படிச்சி, உங்க விருப்பப்படி கிராமங்கள்லே இருக்கற மக்களுக்கு நல்லபடியா சர்வீஸ் செய்வேன்ப்பா!'' கண்களில் கனவுடன் கூறினாள்.

அந்த நிமிடம், தன் வாழ்க்கைப் பாதையையும், துணையையும் தீர்மானிக்கும் பொறுப்பை அப்பாவே ஏற்றுக் கொள்ளட்டும் என்ற முடிவு, மனதில் உறுதியாய் நிலை பெற்றது, சக்தியின் மனதில்!

''அப்பா! அப்புறம்.. ஒரு சின்ன ரிக்வெஸ்ட்! அண்ணாவ மன்னிச்சிடுங்களேன் ப்ளீஸ்! உடம்பால அடிபடறதை விட, மனசுல பட்ட அடிதான் ரொம்ப வலிக்கும்னு நீங்கதானே

சொல்லித் தந்தீங்க! அம்மாவுக்கு இப்படித்தானே இருக்கும்... அண்ணான்னா அவங்களுக்கு உயிர்.. பாவம்ப்பா!''

''இத விட்டுடும்மா! என் மனசு மாறாது... உங்கம்மாவும் நீயும் வேணும்னா, அவனோடக் கூட்டணி வச்சிக்கங்க... என்னால முடியாது'' பிடிவாதத்துடன் கூறியவர், மெதுவாக எழுந்து படிகளில் இறங்கினார்.

மறுநாள், கல்லூரிக்குச் சென்றபோது, அபி ''சேம் பின்ச்'' என்று கிள்ளும்போதுதான், தான் உடையணிந்திருந்த அதே நிறத்திலேயே அவனும் உடுத்தியிருப்பது தெரிந்தது.

செல்வத்தின் செழிப்பு அவனுடைய நடை உடை பாவனைகளில் கண்ணாடியாய் பிரதிபலித்தன.

''அபி... சும்மா வா'' கடித்த பற்களிடையே சீறியபடிக் கல்லூரிக்குள் சென்றபோது, ஏன் இவன் தன்னை இப்படித் தொடர்கிறான் என்ற வெறுப்பு மனதில் துளிர் விட்டது.

பிறகு வந்த நாட்களிலும், இதுவே தொடர்கதையாகியது.

தான் அணிந்து வருகின்ற உடையின் நிறம், அவனுக்கு எப்படித் தெரிகிறது என்ற மண்டை குடையும் கேள்விக்கு ஒரு நாள் அவளுக்கு விடை கிடைத்தது.

அன்று மாலை கோவிலுக்குச் செல்லும்போது, அவர்களுடைய தெருவின் கடைசி வீட்டிலிருந்து வெளியே வந்த அவனுடைய நண்பனைப் பார்த்தபோதுதான், விபரம் புரிந்தது.

அவன் இங்கிருந்துதான் தன்னைப் பார்த்து அதே நிறத்தில் உடுத்தி வருகிறான் என்பது தெரியக் கசப்பானது, மனம்!



ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் காதலிப்பது... அவளைப் பின் தொடர்வது... அதே மாதிரி நிறத்தில் உடுத்துவது... அதனாலேயே ஒரு பெண்ணின் மனதை அடைந்து விடலாமென்று எதிர்பார்ப்பது... ஏன் இந்தக் காலத்து இளைஞர்கள் சிலர் இப்படி இருக்கின்றார்களோ என்ற வேதனையும், விரக்தியும் உள்ளே சூழ்ந்தன.

## 4

**கா**லம் இப்படியே செல்ல, அவன் அவளைத் தொடர்வது மட்டும் விடாமல் தொடர்ந்தது.

இடையில் சில நாட்கள் அவனைக் காணவில்லையென்று, அபிதான் தவித்துப் போனாள்.

ஆனால் ஒரு வாரம் கழித்து, அவன் பஸ் ஸ்டாப்பிற்கு அருகிலிருந்த கம்ப்யூட்டர் நிறுவனத்தின் மாடியிலிருந்த பால்கனியில், அந்த நேரத்திற்கு நிற்பதைக் கண்டுபிடித்தும் விட்டாள்.

சக்திக்கு அவனைப் பார்க்கும்போதெல்லாம், நேராக அவனிடம் சென்று 'நீ உன் நேரத்தை வீண் செய்கிறாய்' என்று பட்டென்று கூற வேண்டும் போலிருக்கும்.

தான் புதிய உடை வாங்கி அணியும்போது மட்டும், இந்த நிறத்தில் அவனிடம் உடை இருக்காதே என்ற திருப்தியும், அவனை இப்படியாவது பழி வாங்க முடிகிறதே என்ற உணர்வும், ஊற்றாய்ப் பீறிட்டெழும்.

அன்றும் அதுபோல், புதிதாய் வாங்கியிருந்த இளம் வயலட் நிறச் சுரிதாரில் செல்லும்போது, எதையோ வெற்றி கொண்டதுபோல், நெஞ்சம் முழுவதும் குதூகலமாய்!

அபியும் ''எங்கேடி உன் ஹீரோவைக் காலையிலக் காணோம்?'' கிண்டலாகக் கேட்டாள்.

''ம்... இந்தக் கலர்லே ட்ரெஸ் இருந்திருக்காது... அதான்! வருத்தமா இருக்கு அபி! அப்பா அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பணம் அனுப்பினா, அதை வேஸ்ட் பண்ணி.. இப்படிப் பொண்ணுங்க பின்னாடி சுத்தி... அதே மாதிரி ட்ரெஸ் பண்ணினா, அவங்களை இம்ப்ரெஸ் பண்ணிடலாமின்னு நினைச்சி, இதெல்லாம் எனக்கு சுத்தமாப் பிடிக்கலை அபி!

''பாவம் அவங்க அப்பாவும் அம்மாவும்... இவரைப் பத்தி எத்தனை கனவுகளை மனசில சுமந்திட்டுருப்பாங்க! நினைச்சாலே கஷ்டமா இருக்கு!'' படபடவெனப் பொரிந்தாள் சக்தி!

''சரி... அவரே சம்பாதிச்சி இது மாதிரி வேஸ்ட் பண்ணினா, உனக்கு ஓகேயா?'' குறும்புடன் கேட்டாள் அபி.

''உன்னைத் திருத்தவே முடியாதுடி! ஆனா, இது மாதிரிக் கிண்டல் பண்றதை எல்லாம் இதோட நிறுத்திக்க அபி! நான் இங்க வந்திருக்கறது படிக்கறதுக்காக... அதோட, என் அப்பாவோட வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கறவ நான்! எனக்குன்னு சில லட்சியங்கள் இருக்கு'' கோபத்துடன் கூறினாள்.

''நல்ல வேளை... அவன் இது வரைக்கும் உன் கிட்டப் பேசினதில்லை! பேசியிருந்தான்னா, சரியான ஒரு அட்வைஸ் பார்ட்டிகிட்ட மாட்டிக்கிட்டோம்னு, தப்பிச்சி ஓடியிருப்பான்'' மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் அபி.

''ஏய்... என்ன உனக்குள்ளேயே பேசிக்கறே...?'' என்றபடி நிமிர்ந்தபோது, இளம் வயலட்டில் 'டி சர்ட்' அணிந்து அவன் எதிர்பால்கனியில் நிற்க, அவள் மனதிற்குள் பெரும் ஆயாசம் வந்து சூழ்ந்தது.



இவனுக்கு என்ன சொல்லித் தன்னைப் புரிய வைப்ப தென்ற ஆதங்கம்... பெரிதாய்!

இதுவரை அவன் பெயர்கூடத் தனக்குத் தெரியாதே என்ற உண்மை மனதில் அப்போது தான் உறைத்தது.

தன்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், ஒதுங்கியிருந்து பார்வையால் மட்டுமே தன்னைத் தொடர்வது, ஏனோ அவன் மேல் ஒரு வித மரியாதையைக் கூட சில சமயங்களில் வரவழைத்தது.

பிறகும் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் இறுதியாண்டு வரை தொடர, அவள் கவனம் முழுவதும் படிப்பிலேயே சென்றது.

சந்துரு மலேசியாவிலிருந்து தனக்குக் குழந்தை பிறந் திருப்பதாகக் கடிதம் எழுதி, போட்டோவும் அனுப்பி யிருந்தான்.

போட்டோவிலிருந்த சிறு குழந்தை வர்ஷினியைப் பார்த்துவிட்டு விசாலம் கண் கலங்க, சுந்தரம் மட்டும் வீம்பாகவே இருந்தார்.

சக்திக்கும் அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும்... தூக்கிக் கொஞ்ச வேண்டும் என்ற ஆர்வம் மனதில் இயல்பாய் எழுந்தது... விசாலத்தைப் பார்த்தால் பரிதாபமாகவும் இருந்தது.

* * *

ஒரு நாள், இது பற்றித் தன் தந்தையிடம் பேசினாள் அவள்.

''அப்பா! சந்துருவை வரச் சொல்லி நீங்களே ஒரு லெட்டரோ, போனோ பண்ணினீங்கன்னா, அம்மா ரொம்ப

சந்தோஷப்படுவாங்க... சந்துருவும் நிச்சயமா வருவான்.. ஏம்ப்பா இன்னும் அவனை மன்னிக்க மாட்டேன்கறீங்க?''

''அவன் வேற ஜாதிப் பெண்ணை விரும்பினதாலே, நான் அவனை வெறுக்கறதா நீ கூட நினைக்கிறியா சக்தி? என் கோபமெல்லாம்.. படிப்பை முடிக்காம, ஒரு தங்கை வீட்டில இருக்கும்போது, சுயநலமா எந்தப் பொறுப்புமில்லாமக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு, அதுவும் அவங்க வீட்டோடவே போறேன்னு சொல்லிட்டுப் போனதோட, மூணாவது மனுஷனுக்கு பத்திரிகை அனுப்பற மாதிரிப் பெத்தவனுக்கே தபால்லே அனுப்பினான் பாரு... அதைத்தான் என்னாலே ஜீரணிக்கவே முடியலை'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினார்.

''சரிப்பா! ஏதோ தப்பு நடந்து போச்சு.. அதை மறந்து மன்னிச்சிடுங்கன்னுதான் சொல்றேன்.''

''என்னால முடியாதும்மா... அதான் நீயும் அம்மாவும் அவன்கிட்டப் பேசறீங்களே?''

காலம், அவருடைய பிடிவாதத்தைக் குறைக்க முயன்று தோற்றிருப்பது புரிந்தது.

பிறகு அவள் இதுபற்றி அவரிடம் பேசுவதில்லை! விசாலம் மட்டும், எப்போதாவது கடிதங்கள் அல்லது தொலைபேசி மூலமாக, சந்துருவுடன் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.

அந்த வருடம், அவள் தன் படிப்பை முடித்து விடை பெறும் நாள்!

கல்லூரிப் படிப்பு முடிந்து, ஒரு வருடம் ஹவுஸ் சர்ஜன் பயிற்சி மட்டும் இருந்தது.

எல்லோரும் இணைந்து போட்டோக்கள் எடுத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் ஆட்டோகிராஃப் போட்டுக் கொடுத்துக் கொள்ள, பிரிவின் துயரம் அங்கு மௌன விடைபெறுதலாய்!



வெளிப்படுத்த முடியாத, கனத்துப் போன மனதின் சஞ்சலங்கள், அமைதிப் பரிவர்த்தனையாய்.. இயலாமை யோடு விழிகளில் கண்ணீராய்க் கசிய... அந்த மாலை நேரம், இறுக்கம் மிகுந்ததாய்..!

ஜூனியர்ஸ் அவர்களுக்கு ஃபேர்வெல் பார்ட்டி கொடுத்து முடிக்க, சோகம் சுமந்த முகங்களுடன் விடை பெற்று வெளியில் வந்தனர்.

அவளறியாமலே பார்வை அந்தக் கட்டிடத்திற்குச் செல்ல, முதன் முதலாய் அந்த இடம் வெற்றிடமாய்.. அவனைக் காணவில்லை!

மனதில் தோன்றிய சிறு எதிர்பார்ப்பு விடைபெற்றுச் செல்ல, தலையைக் குலுக்கித் திரும்பியபோது, அபி மௌனமாக வந்து கொண்டிருந்தாள்.

கடைசி நாளென்பதால், மனதில் சோகம் கனமாய் மையம் கொண்டிருக்க, எதிர்காலத்தின் நிதர்சனம் முகத்தில் மோத நிமிர்ந்தபோது, எதிரில் அவனுடைய நண்பன் நின்றிருந்தான்.

''எக்ஸ்க்யூஸ் மீ! ஒரு நிமிஷம் நான் உங்களோடத் தனியா பேசணும்... பேசலாமா?'' புன்னகையுடன் கேட்டான்.

ஏனோ, உடனே மனம் படபடத்தது.

''என்ன விஷயம்? அபி என் க்ளோஸ் ஃப்ரெண்ட்! அவ முன்னாடியே நீங்க சொல்ல வந்ததைச் சொல்லலாம்'' மனம் பெண்டுலமாகத் துடித்தாலும், குரல் தைரியமாகவே வந்தது.

''நான் இளங்கோ... என் ஃப்ரெண்ட் சிபிவர்மனை உங்களுக்குத் தெரியும்...''

"சிபிவர்மனா... யாரது?" புரியாதது போல் கேட்டாள் சக்தி.

"ம்.. தினமும் எதிர்லே பாப்பீங்களே.. அவன் தான்! சிபி பெரிய பணக்காரன்.. பி.இ. முடிச்சிட்டு அந்த நிறுவனத்துல, சீனியர் சா.ஃ.ப்ட்வேர் இன்ஜினியரா இருக்கான்... உங்க தெருவிலதான் நாங்க இருக்கோம்."

"சரி.. இதப் பத்தி எல்லாம் ஏன் என்கிட்ட வந்து சொல்றீங்க..?" சிறு கோபத்துடன் கேட்டாள் அவள்.

"சக்தி.. அவன்.. உங்களை மனசார விரும்பறான்! ஆனா உங்ககிட்ட வந்து நேரா சொல்ல முடியாம, ஏதோ ஒண்ணு அவனைத் தடுக்குது... அது ஈகோன்னுதான் நான் நினைக்கிறேன்.. இந்த வருஷம் ஹவுஸ் சர்ஜன் பயிற்சி முடிஞ்சப்புறம் பேசறேன்னு அவன் சொன்னான்.

"நான்தான், இன்னிக்கு உங்களோட இதப்பத்திப் பேசப் போறேன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்... என்னடா, இவன் நண்பனுக்காகத் தூது வந்திருக்கானேன்னு தப்பா நினைக்காதீங்க! இத்தனை நாள், பொறுமையா காத்திருந்த அவனோட காதல் நிறைவேறாமப் போயிடக் கூடாதேங்கற ஆதங்கத்துலதான் வந்திருக்கேன்" தவிப்புடன் வந்தன வார்த்தைகள்!

அபி உறைந்து நின்றிருந்தாள்.

"மிஸ்டர் இளங்கோ! நான் சொல்றேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க... உங்க ஃப்ரெண்ட் வேணும்னா, லவ் அது இதுன்னு ஒரு ஃபேண்டஸி உலகத்துல இருக்கலாம்! நான் அந்த மாதிரி டைப் இல்லை. டாக்டராகி கிராமங்கள்லே சர்வீஸ் பண்ணணும்கிறது என்னோட லட்சியம்... அதை யாருக்காகவும் நான் விட்டுத் தர முடியாது!"



உடனே அவன் குரல், அவளை இடைமறித்தது.

"நீங்க எதையுமே விட்டுத் தர வேணாம். நீங்க விரும்புனீங்கன்னா, அவங்க கிராமத்துலேயே ஒரு ஹாஸ்பிடல் கட்டிக் கொடுத்து, உங்களை அதிலேயே சர்வீஸ் பண்ண வைக்க அவனால முடியும்."

"சாரி... எனக்குன்னு சில விருப்பங்கள் இருக்கு! அதோட என் அப்பா அம்மாவோட விருப்பங்கள்தான் எனக்கு முக்கியம்... அவங்க பாத்து யாரை செலக்ட் பண்றாங்களோ, அவரைத்தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன்.. ஆனா அதுக்கு இன்னும் வருஷங்கள் ஆகலாம்...

"அதனால... உங்க ஃப்ரெண்டை தன் மனசை மாத்திக்கிட்டு, அம்மா அப்பா சொல்ற பொண்ணாப் பாத்து கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்க... வா அபி.. போகலாம்."

முடிவாகக் கூறிவிட்டு வேகமாகச் சென்றவளின் பின்னே, இளங்கோவின் பார்வை ஒரு இயலாமையுடன் தொடர்ந்தது.

பிறகு, வீட்டிற்கு வந்து அப்பா அம்மா இருவரிடமும் ஆசீர்வாதம் வாங்கிவிட்டுக் கோவிலுக்குச் சென்று தன் எதிர்காலத்தைப் பற்றிப் பிரார்த்தித்தவள், அந்தக் கணமே சிபியை மறந்தும் போனாள்.

அதற்குப் பிறகு, அவள் இளங்கோவையும் சிபியையும் சந்திக்கவேயில்லை.

இளங்கோவிடம் அவள் பேசியபிறகு, தன் வாழ்க்கையிலிருந்து அவன் ஒதுங்கி விட்டதாகவே சக்தி நினைத்திருந்தாள்.

எப்போதாவது, அபூர்வமாய் வருகின்ற ஆலங்கட்டி மழையாய், அவன் நினைவுகள் சில சமயங்களில் சடசட வென்று மனதில் பரவும்.

ஆனால், காதலெனும் ரசவாதம் மனதில் மாயங்கள் செய்யாததால், அவனை மெல்ல மெல்ல மறந்தது, மனது.

## 5

சக்தி, ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெற ஆரம்பித்திருந்தாள்.

ஒரு நாள் தூக்கத்திலேயே ''மாஸிவ் ஹார்ட் அட்டாக்'' வந்து சுந்தரம் திடீரென்று இறந்து விட, அந்தத் துக்கம் தாங்காமல் நிலை குலைந்து போனது, அந்தக் குடும்பம்!

அம்மாவையும் தேற்றி, தானும் மனதை ஆற்றிக் கொள்வதற்கு அவளுக்குப் பல நாட்களாயின.

அந்தத் துயரத்திலிருந்து மீண்டு வருவாளா என்பது போல் இருந்தவளை, விசாலம்தான் தேற்ற வேண்டியதாயிற்று!

மரணம் என்னும் மந்திரக்கோல் அவள் தந்தையை மாயமாக்கி, அவளைத் தனித் தீவாக்கி இருக்க, உடைந்து போனாள் அவள்.

மலேஷியாவிலிருந்து வந்து எல்லாக் காரியங்களையும் எடுத்துச் செய்த சந்துருவும் தொழிலைப் பார்க்கத் திரும்பிச் சென்று விட்டான்.

சுந்தரத்தின் மரணம் அவனையும் மாற்றியிருந்தாலும், வாழ்க்கையின் எதார்த்தங்கள், மாற்றங்கள் அனைவருக்கும் பொது நியதியாய்!



அவரவர் எதிர்காலமும், காலத்தின் வேகச் சுழற்சியும், சோகங்களை மறக்கச் செய்வதாய்...!

தந்தையின் இழப்பு, சக்தியை வெகுவாகப் பாதித்திருக்க, ஒரு நல்ல தோழமையை, அறிவுத் துணையை, வழி காட்டியை, அன்பைச் சொரிந்த ஒரு அற்புதமான மனிதரை இழந்ததில் ஓய்ந்து போனாள் அவள்.

உயிரோடிருந்தபோது அவர் அவளுடைய மனதில் செதுக்கிய வார்த்தைகளும், படிப்பிலிருந்த ஆர்வமும் மட்டுமே, பிறகு அவளை வழி நடத்தின.

இப்போது படித்து முடித்து, அரசாங்க உத்தரவு கிடைத்து, மூன்று வருடங்கள் இங்கு டாக்டராகப் பணியாற்ற வந்திருக்கிறாள்.

சிபியின் நினைவுகளுடன், சுந்தரத்தின் இழப்பும் சேர்ந்து மனதை ஆக்கிரமித்தன.

நதியலைகளில் கால்களை நனைத்தபடி நின்றிருந்த போது, ''சக்தி!'' என்று காதோரம் கேட்ட குரலில், மன மிதவை தன் சுழற்சியை நிறுத்திக் கரை சேர்ந்தது.

* * *

மெதுவாகத் திரும்பினால், விசாலமும் செவந்தியும் அங்கு நின்றிருந்தனர்.

''என்ன சக்தி... அப்பாவோட ஞாபகம் வந்திடிச்சாடா?'' என்றபடி, மெல்ல அவளை அணைத்துக் கொண்டார் அவர்.

ஒரு பெருமூச்சுடன், ''ம்.. ஆமாம்மா! அதோட நிறைய பழைய நினைவுகள்'' எனும்போதே, மனம் சிபியைப் பற்றிய யோசனையில் மிதந்தது.

அவனுக்கு எதனால் இப்படி நேர்ந்திருக்கும் என்ற குழப்பமும் தவிப்பும் உள்ளே பெரிதாய் எழுந்தன.

வானம் இருட்டத் தொடங்கி இருக்க, நட்சத்திர மின்மினிகள் புகை படிந்தது போல் கலங்கலாகக் கண் சிமிட்டின.

மனம் சோர்வுற நிமிர்ந்தபோது, ஒரு அரசகுமாரியைப் போல், அந்த நதி கம்பீரமாக ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்காமல், சலசலத்துச் சென்ற அதன் ஓட்டத்தைப் பார்த்தபோது, நதிகள் ஒரு நாளும் உறங்குவதில்லையெனத் தோன்றியது.

வேகம் சுமந்த அதன் சுழிப்பும், போக்கும், நம் பிக்கையையும், தைரியத்தையும் ஏனோ நெஞ்சுக்குள் அறிமுகப்படுத்தின... சோகம் நீக்கி மெல்லிய மகிழ்ச்சியை கைவசப்படுத்தின!

விசாலமும் ஏதோ யோசனையுடன் நின்றிருக்க, அவரை அழைத்துச் சென்று ஆற்றங்கரை மணலில் அமர வைத்து விட்டு, செவந்தியுடன் பேச்சுக் கொடுத்தாள் சக்தி.

''செவந்தி! உன்னோட கணவர் எங்கே வேலை பாக்குறாரு?''

''நம்ம ஆஸ்பத்திரியிலதாம்மா.. நர்ஸா இருக்காரு! இவரு... எனக்கு ரெண்டாவது புருஷன்மா! முதல்லே கல்யாணமாகி ஒரு பையன்கூட இருக்கான்'' அவள் வெகு இயல்பாகக் கூறத் தூக்கி வாரிப் போட்டது.

''ஏன்.. உன் முதல் புருஷன் எங்கே செவந்தி?'' என்றார் விசாலம்.



''அவரு இறந்துட்டாரும்மா! கட்சியில இருந்தாரு... கட்சிக்காகவும் தலைவருக்காகவும் உயிரையே கொடுக்கணும்பாரு! அதே மாதிரி ஒரு நாள் மண்ணெண்ணெயை ஊத்தித் தன்னையே எரிச்சிக்கிட்டாரு.''

கண்ணீருடன் செவந்தி கூறியபோது, சக்திக்கு மனதில் திராவகத்தை வீசியது போல் ஒரு வலி வந்தது.

பாவம் இந்த அப்பாவிகள்! விளக்கால்தான் தன் அழிவு என்றறியாது சுற்றும் விட்டில் பூச்சிகளாய், தலைவனுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ளும் தொண்டர்களை நினைத்தபோது, பரிதாபமாய்!

செவந்தியின் குரல் நினைவுகளைக் கலைக்க, அவள் விசாலத்திடம் தன் வாழ்க்கையைப் பற்றிக் கூற ஆரம் பித்திருந்தாள்.

''எங்க வீட்டுக்காரரு இறந்துபோய் ஒரு வருஷம் கழிச்சி எனக்கு அவரோடத் தம்பியையே கட்டி வைச்சிட்டாங்கம்மா'' என்றபடி அவள் தர்மசங்கடத்துடன் அமர்ந்திருந்தாள்.

''இதுக்கு ஏன் தலை குனியறே செவந்தி? இது ஒரு ஆரோக்கியமான விஷயம்! கிராமத்துல கூட இப்படி ஒரு முற்போக்கு சிந்தனையான்னு ஆச்சர்யமா இருக்கு!''

சக்தி கூறும்போதே, மனதிற்குள் அந்த விதவைப் பெண்ணிற்கு மறுவாழ்வு அளித்தவர்களின் மீது இனம் புரியா மதிப்பும், மரியாதையும் வந்தன.

பிறகு வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு விட்டுப் படுத்த போது, சிபியின் உருவமும், இன்றைய அவன் பார்வையும் மனதை வெகுவாக சஞ்சலப்படுத்துவதாய்!

ஏதோ ஒருவிதக் குற்றவுணர்வும், தவிப்பும் உள்ளே ஊடுருவி, இளங்கோவிடம் இது பற்றிக் கேட்க வேண்டும் என்ற உத்வேகத்தை மனதில் வரவழைத்தன.

* * *

மறுநாள் காலையில் மருத்துவமனைக்குச் சென்று வேலையில் சேர்ந்து பொறுப்பேற்றபோது, அங்கு நர்ஸிங் அசிஸ்டெண்டாகப் பணியாற்றி வரும் இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, வணங்கினர்.

அந்த சாந்தியையும், மருதுவையும் பார்த்தபோது, அவளுக்கு உடனே செவந்தியின் நினைவு வந்தது.

இனி வரும் நாட்கள் நன்றாக அமைந்து, தான் ஒரு கைராசியான டாக்டர் என்று பெயரெடுக்க வேண்டுமென்று கடவுளிடம் வேண்டிக் கொண்டாள் சக்தி!

பொறுப்பேற்ற முதல் நாளே, நோயாளிகளைப் பரி சோதித்தபோது, அவளுடைய கனிவான பேச்சும், பொறுமை யும் மென்மையான அணுகுமுறையும் ஊர்க்காரர்களைப் பெரிதும் கவர்ந்து, அவளிடம் ஒரு மதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்தின.

அந்த மருத்துவமனை, மேலே ஓடுகள் வேயப்பட்டு எளிமையாக இருந்தாலும் எல்லா வசதிகளுடனும் பெரிதாக இருந்தது.

மொத்தமிருந்த நான்கு அறைகளில் ஒன்றில் நோயாளிகள் அமர்ந்து காத்திருந்தனர்.

ஒரு அறை டாக்டருக்கெனவும், நர்ஸுகளின் உபயோகத் திற்கும் மருந்துகளை வைப்பதற்கென்று ஒரு அறையும், பின்புறமிருந்த அறையில் ஒரு படுக்கையும் போடப்பட் டிருந்தது.



பிரசவத்திற்கும், அவசர சிகிச்சை என்று வந்தாலும், அந்த அறையைப் பயன்படுத்தினர்.

மதியம் செவந்தி சாப்பாடு எடுத்து வர, அவள் சென்ற வுடன் மருதுவை அழைத்துப் பேசினாள் சக்தி.

"மிஸ்டர் மருது! செவந்தி நேத்துதான் உங்களைப் பத்திச் சொன்னா! உங்க பெருந்தன்மை எனக்கு ரொம்பப் புடிச்சிருந்தது... இது நிறையப் பேருக்கு வராது! அவ நல்ல பொண்ணு... நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்."

"தேங்க்ஸ்மா" என்றபடி அவன் உள்ளே சென்றபோது, வாசலில் சில குரல்கள் கலவரமாகக் கேட்டன.

நெருப்பினால் எரிந்து, தற்கொலைக்கு முயன்ற ஒரு இளம் வயதுப் பெண்ணைத் தூக்கி வந்திருந்தனர்.

ஆனால் வரும்போதே அவள் உயிர் பிரிந்திருக்க, உடனே போலீஸுக்குத் தகவல் கொடுத்து டவுனிலிருக்கும் மருத்துவமனைக்குப் போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பிய போது, மனம் தகித்துப் போயிருந்தது.

ஒரு மனிதன் எல்லாவற்றையும் விட, உயிரைத்தான் பெரும் பொக்கிஷமாக மதிக்கிறான். ஆனால், சில சமயங்களில் மரணத்தை வலியச் சென்று அவனால் எப்படிச் சுலபமாக ஏற்றுக் கொள்ள முடிகிறதென்று வேதனை, கேள்வியாய் நெருடியது.

மரணத்தை எதிர்கொள்ளும் மன தைரியத்தை, வாழ்வதில் காட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றும் தோன்றியது.

'துக்கத்தைத் தாங்கிக் கொள்ளாமல், தற்கொலை செய்து கொள்பவன் தைரியசாலி என்றால், அந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொள்கிறவனே பெரும் வீரன்.' ஒரு அறிஞரின் வரி கள் நினைவுக்கு வர, சக்தி இறுகிப்போய் அமர்ந்திருந்தாள்.

* * *

முதல் நாள் முடிந்துவிட, மாலையில் வீட்டிற்கு வந்து குளித்துவிட்டு முன்னறைக்கு வந்தபோது, விசாலம் டிபனுடன் காத்திருந்தார்.

வாசலில் யாரோ அழைப்பு மணியை அழுத்த, யாரென்று பார்த்தால், சிபியின் வீட்டிலிருந்து மேனேஜர் வந்திருந்தார்.

''டாக்டரம்மா! பெரியம்மா உங்களை உடனே கையோட அழைச்சிட்டு வரச் சொன்னாங்க... சின்னய்யாவுக்குக் காய்ச்சலாம்.. மருந்து குடுத்தும் குறையலையாம்.. காரெடுத்துட்டு வந்திருக்கேம்மா'' பவ்யமாகக் கூறினார்.

''அம்மா! எனக்கு காபி மட்டும் போதும்'' என்று கூறிவிட்டு, அவசரமாக உடை மாற்றிக் கிளம்பினாள் சக்தி.

அவள் உள்ளே நுழைந்ததுமே வரவேற்ற சிபியின் தாய் மணிமேகலை, தன் கணவர் வீரபாண்டியனை அவளுக்கு அறிமுகம் செய்தார்.

அப்படியே சிபியின் மறுபதிப்பாய்... மாநிறத்தில், ஊடுருவும் கண்களுடன் உயரமாக நின்றிருந்தவரை வணங்கியபோது, மனதில் ஏதோ ஒரு பயம் கலந்த மரியாதை வந்தது.

''வாங்க டாக்டர்! எங்க ஊர் உங்களுக்குப் பிடிச்சிருக்கா? பட்டணத்துல இருந்தவங்களுக்கு இந்த கிராமம் பிடிக்குமோ என்னவோ... வீடுகூட அவ்வளவா வசதி பத்தாதுதான். ஆனா இங்கே இது மாதிரி வீடுங்கதான் அதிகம்!'' முறுவலுடன் கூறினார்.

அவர் குரல் கணீரென்றிருக்க, சிபியின் குரலும் இப்படித்தான் இருக்குமோவென்ற யோசனையுடன், ''எனக்கும் அம்மாவுக்கும், இந்த ஊரும் எங்க வீடும் ரொம்பப் புடிச்சிருக்கு சார்... ரொம்பத் தேங்க்ஸ்!'' மெல்லிய குரலில் கூறினாள்.



''உக்காரும்மா... காபி டிபன் சாப்பிடலாம்'' அவர் கூறினார்.

''இல்லை சார்... இப்பதான் காபி குடிச்சேன்.. பேஷண்டைப் பார்க்கலாம்'' என்றதும், மணிமேகலை அவளை உள்ளே அழைத்துச் சென்றார்.

சிபி, அன்று போலவே இன்றும் அமைதியாகக் கண்களை மூடிப் படுத்திருந்தாலும், அவனுடைய முகம் சிவந்து காய்ச்சலின் வேகத்தைத் தெரியப்படுத்தியது.

ஒரு டாக்டராக 'மெடிக்கல் கிட்'டுடன் அவனருகில் சென்று பரிசோதித்தபோது, காய்ச்சல் மிக அதிகமாக இருப்பது தெரிந்தது.

அவள் 'பாராசிட்டமால்' இன்ஜெக்ஷனை அவன் கைகளில் போடும்போது, அவன் விழிகள் மெல்லத் திறந்தன.

## 6

சிபியிடமிருந்து, மீண்டும் உணர்ச்சிகளைத் துடைத்த பார்வை!

அந்த விழிகள் அவளுக்குள் பெரும் சலனத்தை ஏற்படுத்த, அதை உணராமலே சிலை போல் படுத்திருந்தான் அவன்.

மணிமேகலையிடம் திரும்பியவள், ''ஃபீவர் குறைஞ்சிடும்! நாலு மணி நேரத்துக்கு ஒரு தடவை, இந்த மாத்திரையைக் குடுங்க... காலையில நார்மலாயிடு வாரு! நான் நாளைக்கு வந்து பாக்கறேன்'' என்றபடி கிளம்பினாள்.

பிறகு திரும்பியபோதும், சிபியின் பார்வை விலகாமல் அவளிடமே பதிந்திருப்பது புரிந்தபோது, மனதிற்குள் ஏதோ ஒரு இனம் புரியாத வலி!

வரவேற்பறைக்கு வந்தபோது, இளங்கோ வந்திருந்தான்.

அவளைக் கண்டதும், ''நானே உங்களை வீட்டில விட்டுடறேன்'' என்றபடி அவன் உடன் வர, அவனும் தன்னைப் போலவே சிபியைப் பற்றிப் பேச விரும்புவது புரிந்தது.

பெரியவர்களிடம் விடைபெற்றுக் காரில் ஏறியபோது, வேறு திருப்பத்தில் திரும்பி எதிர்ப்பாதையில் கார் சென்றது.

மரங்களடர்ந்த ஒரு தோப்பு வீட்டில் காரை நிறுத்தினான் இளங்கோ.

புரியாமல் பார்த்தவளிடம், ''சக்தி... ம்..! சிபியைப் பத்தி உங்க கிட்டே மனசு விட்டு நிறையப் பேசணும்! இங்க யாரும் வரமாட்டாங்க... அதனால நாம நிம்மதியாப் பேசலாம்'' என்றபடித் திரும்பி அமர்ந்தான்.

ஒரு நொடி மவுனமாக இருந்தவன் 'நானும் சிபியும், ஸ்கூல்லே இருந்தே ஒண்ணாப் படிச்சோம் சக்தி! ரெண்டு பேருமே ஹாஸ்டல்தான்! அப்ப ஆரம்பிச்ச ஃப்ரெண்ட்ஷிப் எங்களுது! என் ஊரு திருச்செந்தூருக்குப் பக்கத்துல ஒரு கிராமம்! நாங்க மிடில் கிளாஸ்தான்...

''இஞ்சினியரிங் சேரும்போது, நான் கெமிக்கல் லைன்லயும், அவன் கம்ப்யூட்டர்லயும் சேர்ந்தபோது, என்னைத் தன்னோடவே அவங்க வீட்டுல தங்க வச்சிக் கிட்டான் சிபி!



அவங்கப்பா அவனுக்காக ஒரு ஃப்ளாட்டை வாங்கி சமையலுக்கு ஒரு ஆளையும் போட்டிருந்தாரு.. உங்க தெருவில கடைசியில நாங்க இருந்தோமே, அதான்! எங்க நட்பு ரொம்ப ஆழமானது சக்தி!'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, ''உங்களை நான் கடைசியாப் பாத்த அன்னிக்கு, நான் உங்ககிட்டே பேசிட்டுப் போனேன் இல்லையா? அதுக்கப்புறம் எந்தத் தகவலும் இல்லியேன்னு நினைச்சிருப்பீங்க...

''ஆனா, சிபிக்கு அன்னிக்குத்தான் அந்த ஆக்சிடெண்ட் நடந்தது!'' என்றவனுக்குப் பழைய நினைவுகள் கனவாய் கண் முன் விரிந்தன.

* * *

அன்று, வாசலில் பைக்கை நிறுத்திவிட்டு நுழைந்த இளங்கோவை, விழிகளில் பெரும் எதிர்பார்ப்புடன் வரவேற்றான் சிபி.

''என்னடா ஆச்சு... அவகிட்டப் பேசினியா? என்ன சொன்னா?'' தவிப்புடன் வந்தது அவன் குரல்.

''நான் பேசினேன். ஆனா அவ ரொம்பப் பிடிவாதமா இருக்கா சிபி!'' அவள் பேசியவற்றைக் கூறினான்.

அனைத்தையும் பொறுமையாகக் கேட்டவன், ''என் மேல வெறுப்பு இருக்கற மாதிரி எதுவும் சொல்லலை... இல்லை!'' இறுக்கத்துடன் வினவினான்.

''இல்லை தான்.. ஆனா விரும்பற மாதிரியும் பேசலையே சிபி! உன்னை, உங்க வீட்டிலப் பாக்கற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாளே?''

"ஓஹோ! நான் இப்பவே போறேன் இளா! அவகிட்ட முதல்லே எல்லா விஷயமும் பேசிட்டு, அப்புறமா அவங்க வீட்டிலப் போய் பேசறேன். நான் அவளை உயிராய் விரும்பறதையும், எத்தனை வருஷம் வேணாலும் காத் திருப்பேங்கிறதையும் சொல்றேன்!"

கண்களில் கூர்மையுடன் பேசிய அவனிடம் தெரிந்த பரபரப்பு, புதிதாய்!

படிக்கின்ற காலத்திலும் சரி... பிறகும், எந்தப் பெண் ணாலும் ஈர்க்கப்படாதவன்.. ஒருவித இறுக்கத்துடன் அழுத்தமாக இருப்பவன்... ஒரு பெண்ணிற்காக இப்படிப் பரிதவிப்பது... பெரும் ஆச்சர்யமாய்!

காதல், வீரர்களைக் கூட அனாயாசமாய் சரிப்பது புரிந்தது.

உடனே பைக்கில் கிளம்பிச் சென்றவனைப் பிறகு மருத்துவ மனையில்தான், இளங்கோவால் பார்க்க முடிந்தது.

மெயின் ரோடின் திருப்பத்தில், கார் ஒன்று இடித்ததில், பின் தலையில் அடிபட்டு விழுந்தவனை, யாரோ எடுத்துச் சென்று, மருத்துவமனையில் சேர்த்தனர்.

அவர்கள், இளங்கோவை 'செல்'லில் அழைத்து விபத்து பற்றிக் கூறியபோது, அவனுக்குப் பாதி உயிர் போனது போலானது.

பிறகு, ஊரிலிருந்து வந்த வீரபாண்டியன் சிபியை பெரிய மருத்துவமனையில் சேர்த்துவிட சுய நினைவின்றி இருந்தவனைக் காப்பாற்றி சிறு அறுவை சிகிச்சை செய்து, இந்த நிலைக்குக் கொண்டு வந்திருந்தனர்.



சிபியின் நிலைமை மெதுவாகத்தான் சரியாகும் என்று கூறி மருந்து மாத்திரைகள் கொடுத்து அனுப்பி இருந்தனர்.

அவன், பிரமை பிடித்தவன் போல் அப்படியே படுத் திருப்பான்... ஊட்டி விட்டால் சாப்பிடுவான்... பாத்ரூமிற்கு ஒருவர் கொண்டு விட வேண்டும்!

எல்லோரையும் பார்த்தாலும், அதில் அவர்களைத் தெரிந்து கொண்ட உணர்ச்சி இருக்காது.

எதிலும் ஈடுபாடு இல்லாத ஒரு நிலை!

இளங்கோ, இருபத்து நாலு மணி நேரமும் சிபியுடனே துணையிருந்தான்.

வீரபாண்டியனும், மணிமேகலையும் மிகவும் நொறுங்கிப் போயினர். அவன் நிலைமை பேரிடியாய் விழ, இருவரின் மனமும் உடைந்து போனது.

மருத்துவமனையிலிருந்து, சிபியை டிஸ்சார்ஜ், செய்து வீட்டிற்கு அழைத்து வந்தபோது, இது பற்றி சக்தியிடம் பேச வேண்டும் என்ற தீர்மானத்துடன், அவள் வீட்டிற்குச் சென்றான் இளங்கோ.

ஆனால் அவள் வீட்டில் ஷாமியானா போடப்பட்டு ஒரே கூட்டமாக இருந்தது.

என்னவென்று பார்த்தபோது, சக்தியுடைய தந்தை இறந்து போயிருப்பது தெரிந்தது.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு துக்கம் விசாரித்துவிட்டு, வீடு வந்தபோது, இந்த நிலையில் அவளிடம் எதுவும் பேச முடியாதென்று புரிய, சிபியுடன் ஊருக்குக் கிளம்பினான் அவன்.

கம்பெனியில் மேலும் ஒரு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு, சிபியின் அருகிலிருந்து கவனித்துக் கொண்ட

வனை, பிறகு வீரபாண்டியன் தனது மாப்பிள்ளையாக்கிக் கொண்டார்.

அவர்களின் குடும்பச் சூழ்நிலை புரிந்தவனே மருமகனாக வந்தது, அவருக்குப் பெரிதும் நிம்மதியாய்!

தன் பண்ணையையும், கெமிக்கல் ஃபேக்டரியையும் நிர்வகிக்கும் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தார்.

பிறகும், அழுகையிலேயே தங்களின் நாட்களைக் கழித்த இருவரையும் சமாதானப்படுத்திய பின்னர், மெதுவாக ஒரு நாள் சிபி விரும்பிய பெண்ணைப் பற்றிக் கூறினான் அவன்.

சிறு வயதிலிருந்தே முரட்டுத்தனமான கோபத்துடன், எளிதில் உணர்ச்சி வசப்படாதவனாகவே சிபியைப் பார்த்திருந்தவர்களுக்கு, நான்கு வருடங்களாகவே ஒரு பெண்ணை அவன் விரும்பி இருக்கிறானென்பது தெரிந்த போது, நம்பவே முடியவில்லை.

அவன் நன்றாக இருந்தாலாவது, போய்ப் பெண் கேட்கலாம்... இந்த நிலையில் என்ன செய்ய முடியும் என்ற தவிப்புடன் அவர்கள் குறுகிப் போய் இருந்தபோது, ரஞ்சனிதான் மிகவும் கோபப்பட்டாள்.

''என்னங்க!.. கிளம்புங்க! அந்தப் பொண்ணைப் பாத்து நாலு கேள்வி நறுக்குன்னு கேட்டாத்தான் என் மனசு ஆறும்... அவ என்ன பெரிய ரம்பையா?''

''எங்கண்ணனை இந்த நிலைமைக்கு ஆளாக்கிட்டு, அவ மட்டும் நிம்மதியா இருக்கக் கூடாது! அப்பா! கிளம்பலாம்!'' கோபத்துடன் இரைந்தவளை அமைதிப் படுத்தினான் இளங்கோ.



''ரஞ்சனி! முதல்லே அமைதியா இருந்து நான் சொல்றதக் கேளு! அந்தப் பொண்ணு இவனை விரும்பலை... அவ ஒரு டாக்டர்! அவளுக்குன்னு சில லட்சியங்கள் இருக்குன்னு சொல்லி இவன் காதலை மறுத்திட்டா... ஏத்துக்கலை!

''இவன்தான் அவளை மனசுக்குள்ளே உயிரா விரும்பிட்டிருந்தான்... நீ நினைக்கிற மாதிரி ரெண்டு பேரும் காதலிச்சி ஊர் சுத்தலை! தினமும் அவளைக் காலேஜுக்குப் போறப்ப பாக்கறதோட சரி!

''சிபியும் அவளும் இதுவரைக்கும் ஒரு வார்த்தைகூடப் பேசினது கிடையாது... இவன் தன் மனசைப் பத்தி சொல்லத் தயங்கினப்ப கூட நான்தான் அவகிட்டப் பேசினேன்...

''இவன்பேர் கூட, நாலு வருஷம் கழிச்சி அன்னிக்குத் தான் 'சிபிவர்மன்'னே அவளுக்குத் தெரியும். காதல், அது இதுங்கற கற்பனை உலகத்தில தான் சஞ்சரிக்க விரும் பலைங்கறதை, அவ தெளிவா சொல்லிட்டா.. அவங்க வீட்டுல சொல்ற மாப்பிள்ளையைத் தான் கல்யாணம் பண் ணிப்பேன்னும் முடிவா சொல்லிட்டா'' என்று முடித்தான்.

பெரியவர்கள் யோசனையுடனிருக்க, ரஞ்சனிதான் ஆர்ப்பாட்டம் செய்தாள்.

மணிமேகலை அவனிடம், ''ஏன் மாப்பிள்ளை... அந்தப் பொண்ணு என்ன கல்நெஞ்சக்காரியா? என் பிள்ளைக்கு இது மாதிரி ஆயிடுச்சின்னு தெரிஞ்சும் ஒரு மரியாதைக்குக் கூட வந்து பாக்கலை... ஒரு பொண்ணால எப்படி இந்த மாதிரி இருக்க முடியும்?'' அரற்றத் தொடங்கினார்.

''அத்தை... ஒரு விஷயத்தை நீங்கள்லாம் தெளிவாப் புரிஞ்சுக்கணும்! அந்தப் பொண்ணு இவனைக் காதலிக்கலை!

படிப்பு முக்கியம்.. தன் பெற்றோர்களோட விருப்பம்தான் முக்கியம்... அவன் எவ்வளவு பணக்காரன்னாலும் தன்னோட லட்சியத்தை விட்டுத் தர முடியாதுன்னு உறுதியா சொன்ன ஒரு பொண்ணு, எப்படி அத்தை கெட்டவளா இருக்க முடியும்..?

''ரஞ்சனியை அந்த இடத்துல நிறுத்திப் பாருங்க... புரியும்! இவ அந்த மாதிரிச் சொல்லி இருந்தா, என் பொண்ணு எப்படி இருக்கா பாருன்னு பெருமைப் பட்டிருப்பீங்க!

''அந்தப் பொண்ணு ரொம்ப நல்லவளாயிருக்கணும்னு தான், எனக்குத் தோணுது.. நமக்கு தான் குடுத்து வைக்கலை! இவனுக்கு விபத்து நடந்ததுகூட அந்தப் பொண்ணுக்குத் தெரியாது...

''ஒரு மாசம் கழிச்சி சிபியை டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிட்டு வந்த அன்னிக்கு, அவ கிட்டப் பேசலாம்னு நான் போனப்பதான், அவங்க அப்பா இறந்து போயி சடங் கெல்லாம் நடந்துட்டு இருந்தது...

''நான் எதுவுமே பேசாம மௌனமாத் திரும்பிட்டேன்... இதுதான் நடந்தது!''

அவன் கூறியபோது, அனைவருக்குமே உண்மை புரிந்தாலும், அவர்களின் கண்ணீர் மட்டும் குறையவே இல்லை!

வீரபாண்டியனின் முகத்திலிருந்து எதுவுமே கண்டு பிடிக்க முடியவில்லை என்றாலும் மணிமேகலை மட்டும் புரிந்து கொண்டார்.



ரஞ்சனி மட்டும், மன ஓரத்தில் சிறிதளவாவது வெறுப்பைச் சுமந்திருந்தாள்.

இப்போதெல்லாம், இருபத்து நான்கு மணி நேரமும் சிபியுடன் நர்ஸிங் பயிற்சி பெற்ற ஒரு இளைஞன் வாசு, துணையிருக்கிறான்.

வீரபாண்டியனும், இளங்கோவும் தொழிலைப் பார்த்துக் கொள்கின்றனர்.

கனவுப் பெட்டகம் மெதுவாய் மூடிவிட, நிகழ்காலம் எதிரில் தெரிந்தது இளங்கோவிற்கு!

எல்லாவற்றையும் சக்தியுடன் பகிர்ந்து கொண்டதில், அவனுடைய மன பாரம் பெரிதும் குறைந்தது போலிருந்தது.

## 7

**ச**க்தியின் விழிகளில், நீரின் பளபளப்புடன் சொல்லொணாத உணர்ச்சிகள் கலவையாகத் தெரிந்தன.

''சாரி!... முதல்லே இப்படி ஒரு ஆக்சி டெண்ட் நடந்ததும், என்னையறியாமலே ஆனா என்னால இப்படி ஒருத்தர் பாதிக்கப் பட்டிருக்கறதும், சத்தியமா எனக்குத் தெரியாது! கேக்க ரொம்பக் கஷ்டமா இருக்கு...

''ஆனா ரொம்பத் தேங்க்ஸ்... என்னைப் புரிஞ்சிக்கிட்ட துக்கும்... என்னோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்த துக்கும்... எனக்காக அவங்ககிட்டப் பேசினதுக்கும்!

''எங்கண்ணாகூட எனக்காக இப்படிப் பரிஞ்சு வந்த தில்லை... ரொம்பத் தேங்க்ஸ் இளங்கோ!'' உணர்ச்சிகளால் கம்மிய குரலில் கூறினாள் அவள்.

எவ்வளவு அற்புதமான பெண் இவள் என்ற பெருமிதத்துடன், இவளும் சிபியும் இணைய முடியவில்லையே என்ற ஆதங்கமும் வந்தது, இளங்கோவிற்கு!

''அம்மா கவலைப்படுவாங்க... நாம கிளம்பலாமா?''

அவள் கேட்டவுடன், மௌனமே அங்கு வார்த்தைகளாக, இருவரும் கிளம்பினர். வழியெங்கும் சிபியின் நினைவுகளே அவளை அதிகம் ஆக்கிரமித்தன.

அவளை வீட்டு வாசலில் இறக்கி விட்டவன், ''இன்னிக்கு, நீங்கதான் சிபி விரும்பின அந்தப் பொண்ணுன்னு வீட்டிலே சொல்லப் போறேன் சக்தி?'' மெல்லிய குரலில் கூறினான்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சக்தி.

''வேண்டாம்... என் மேல இருக்கற அன்பும், மதிப்பும் போய், ஒரு வெறுப்பு வந்துடும்... ப்ளீஸ்!'' கெஞ்சல் தெரிந்தது அவள் குரலில்.

''உங்க பயம் இதுதான்னா, அதுக்கு அவசியமேயில்லை சக்தி! நான் அவங்க கிட்டப் பேசி எப்படியாவது கன்வின்ஸ் பண்ணிடறேன்! அதோட இன்னொரு கோரிக்கை...

''சில நேரங்கள்லே மருந்துகளாலே முடியாதது, மனத் தூண்டுதல், மெல்லிய உணர்வுகளோட தாக்கம், மறக்க முடியாத காதல் உணர்வுகள், இது மூலமா ஒரு 'மிராக்கிள்' மாதிரி சில சமயங்களிலே வெற்றியடையலாம் இல்லையா?

''எனக்காக இல்லைன்னாலும், அந்த வயசானவங்களுக்காக... வேணாம்.. சிபிக்காகவே இருக்கட்டுமே..! தினமும் எங்க வீட்டுக்கு வந்து அவனோட கொஞ்ச நேரம் இருந்தீங்கன்னா, அவன் நல்லாகறதுக்கு வாய்ப்பு இருக்குமே...



''ஒரு டாக்டரா, இதை நீங்க செய்யணும்கறது என் விருப்பம்!'' என்று கூறிவிட்டு, அவன் விடைபெற்றுச் செல்ல, உள்ளே வந்தாள் சக்தி.

வாசல் வெராந்தாவிலேயே அவளுடைய அம்மாவும், செவந்தியும் காத்திருந்தனர்.

செவந்தி கிளம்பிவிட, ''நீ போன விஷயம் என்னாச்சி சக்தி? அங்கு யாருக்கு உடம்பு சரியில்லை?'' கேள்விகளை அடுக்கினார் விசாலம்.

''அவங்க பையன் சிபிக்கு உடம்பு சரியில்லைம்மா... ஹைஃபீவர்! அதான் ஊசி போட்டுட்டு வந்தேன்... நீங்க சாப்பிட்டீங்களா?'' கேட்டபடி உள்ளே சென்று உடை மாற்றி வந்தாள்.

பிறகு, சாப்பிட்டுவிட்டு இருவரும் படுத்தபோதும், சக்திக்கு உறக்கமே வரவில்லை.

மனதில் பெரும் குற்றவுணர்ச்சி, சூறாவளியாய் மையம் கொள்ள, தான் தவறே செய்யவில்லை என்றாலும், தன்னால் ஏதோ ஒரு விதத்தில் சிபி பாதிக்கப்பட்டிருப்பது புரிய, நித்திரை தள்ளுபடி செய்யப்பட்டது.

தன்னால் ஒருவன் இப்படி உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கும்போது, அதைப் பற்றி அறியாமலே தான் ஒரு வருடத்தும் மேல் இருந்திருப்பது, பெரும் சஞ்சலத்தை அளிப்பதாய்..!

இளங்கோ கூறியதுபோல், இதில் தான் ஏதாவது செய்தாக வேண்டுமென்ற ஆவலும், எப்படியாவது அவனைக் குணப்படுத்த வேண்டுமென்ற வேகமும் எழுந்தன.

அவனுடைய பெற்றோர், தங்கை என்ற முறையில், அவர்களுடைய உணர்வுகளும் நியாயமானதென்று புரிய, மனம் பெரும் சோகத்தைத் தத்தெடுத்தது.

* * *

மறுநாள் காலையில் அவள் தயாராகிக் கிளம்பும் நேரம், வீட்டு வாசலில் பெரியவரின் கார் வந்து நிற்க, ஏனோ மனம் பதறியது.

அதை மறைத்தபடி வாசலுக்குச் சென்று அவர்களை வரவேற்றபோது, பழங்களும் பூக்களும் வைத்து எடுத்து வந்த பையை அவளிடம் தந்தார் மணிமேகலை.

''உள்ளே வாங்க!'' மெல்லிய குரலில் கூறி அவர்களை அழைத்துச் சென்று அமர வைத்தபோது, சப்தம் கேட்டு வெளியே வந்த விசாலத்தை இருவரும் வணங்கினர்.

அவள் அறிமுகம் செய்தவுடன் ''ரொம்ப அருமையான ஒரு பொண்ணைப் பெத்திருக்கீங்கம்மா... உங்ககிட்டே ஒரு உதவி கேட்கத்தான் நாங்க வந்திருக்கோம்... எங்க பையன் சிபிக்கு போன வருஷம் நடந்த ஒரு விபத்துலத் தலையில அடிபட்டு பிரமை பிடிச்ச மாதிரி இருக்கான்...

'தினமும், டாக்டர் சக்தி கொஞ்ச நேரம் எங்க வீட்டுக்கு வந்து என் மகனுக்கு சிகிச்சை செஞ்சு பாக்கட்டும்... அவனை மட்டும் அவங்க குணப்படுத்திட்டா, எங்க ஆயுசு உள்ள வரைக்கும், நாங்க மறக்க மாட்டோம்!''

கலங்கிய விழிகளுடன் மணிமேகலை கேட்டபோது. விசாலம் அப்படியே ஆடிப் போனார்.

''ஏம்மா... இதுக்கு இவ்வளவு தூரம் வந்து என்கிட்ட கேக்கணுமா? டாக்டர்ங்கிறது புனிதமான ஒரு தொழில்!



தெய்வத்துக்கு அடுத்ததா, ஒரு மனிதனோட உயிரை பூமிக்குக் கொண்டு வரதிலயும், அவனைக் காப்பாத்தறதிலயும், அவங்க பங்குதான் அதிகம்னு இவங்கப்பா சொல்லுவாங்க...

''சக்தி, நிச்சயமா உங்க பையனை குணப்படுத்துவாங்கற நம்பிக்கை எனக்கிருக்கு! ஒரு நிமிஷம் இருங்க... நான் பால் எடுத்திட்டு வரேன்!'' அவர் கையைப் பிடித்து ஆறுதல் கூறிவிட்டு உள்ளே சென்றார்.

தர்மசங்கடத்துடன் நின்றிருந்த சக்தியைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டவர், ''அம்மாவுக்கு நடந்ததெல்லாம் தெரியுமா?'' மெதுவாகக் கேட்டார்.

வேகமாக நிமிர்ந்த சக்தி, ''ம்ஹூம்... தெரியாதும்மா'' என்றாள் பதட்டத்துடன்.

''எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு... மாப்பிள்ளை எல்லாத்தையுமே சொன்னாரு! பணத்துக்கு மட்டும் மதிப்பு கொடுக்கற பல பெண்களுக்கு மத்தியில, உன் அம்மா, அப்பாவோட ஆசைங்களுக்கு மதிப்புக் கொடுத்து, உன்னோட லட்சியமும் கெடக்கூடாதுன்னு உறுதியா இருந்திருக்கியே! அதுதான் உன்னை எங்களுக்கு இன்னும் ரொம்பப் பிடிச்சிருக்கும்மா!''

அவளைப் புரிந்து கொண்டதைக் கனிவுடன் அவர் கூறும்போதே, விசாலம் வந்துவிட, பால் அருந்திவிட்டு இருவரும் விடைபெற்றுச் சென்றனர்.

அன்று மாலை, டிரைவர் வந்து அவளை அழைத்துச் சென்றபோது தான், அந்த ரஞ்சனியைத் தான் இதுவரை பார்த்ததில்லை என்ற நினைவு வந்தது சக்திக்கு...!

வீட்டினுள் நுழையும்போதே, கையில் சிறு குழந்தையுடன் ஹாலில் அமர்ந்திருந்த அந்தப் பெண், மேலிருந்து கீழ்வரை அவளை ஆராய்வதுபோல் பார்த்து விட்டு எழுந்தாள்.

''சக்தி! இவதாம்மா எங்க பொண்ணு ரஞ்சனி... குழந்தை பிறந்து ஒரு மாசம்தான் ஆகுது'' என்றவர் அவளிடம் திரும்பி ''ரஞ்சனிம்மா... இவங்க டாக்டர் சக்தி!'' என்று அறிமுகப்படுத்தினார்.

சிறு புன்னகைக்குக் கூடப் பஞ்சமாய், மெல்லத் தலை யசைத்துவிட்டு, அவள் உள்ளே சென்றபோது, சக்திக்கு அவளுடைய கோபமும் வெறுப்பும் புரிந்தன.

''நீ வாம்மா!'' என்று அவர் அழைத்துச் சென்றபோது, இளங்கோவும் சிபியின் அறையில் அவளுக்காகக் காத்திருந்தான்.

* * *

அவள் உள்ளே வந்தவுடன், அனைவரும் வெளியேற, அவனை பரிசோதித்து நிமிர்ந்தபோது, அவன் விழிகள் சலனமின்றி அவளையே நோக்கிக் கொண்டிருந்தன.

ஏனோ, அவன் பார்வை சில்லென்று அவளுடைய நெஞ்சக் கூட்டுக்குள் சிலிர்ப்பாய் ஊடுருவியது.

அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தவள். ''சிபி... நான் சக்தி வந்திருக்கேன்... உங்களுக்கு ஞாபகமிருக்கா?'' என்றபோது, அவனிடமிருந்து பொருளில்லாப் பார்வை ஒன்றே பதிலாய்!

அவனிடம் குனிந்து, ''என்னை நீங்க பார்த்திருக்கீங்க சிபி... ஆனா என்கூடப் பேசினதில்லை... என்னை உங்களுக்கு நல்லாத் தெரியும்... என்னை ஞாபகம் இருக்கா?''



மென்மையான குரலில் அவள் பேசப் பேச, அவன் விழிகள் செருகின.

அவள் பேசிய மொழியே புரியாதது போன்ற ஒரு வித மௌனத்துடன், விழிகள் மூடி இருக்க, உறங்குவது போல் சுவாசம் சீராய் வர, ஒரு பெருமூச்சுடன் எழுந்து வந்தாள் அவள்.

வெளியே ஆவலுடன் காத்திருந்த இளங்கோவிடம், சிபியின் மெடிக்கல் ரிப்போர்ட்டைக் கேட்டு வாங்கிப் பார்த்தவள், ''அவரோட ஹெல்த் நார்மலாதான் இருக்கு... ஆனா மூளையில இருக்கற செல்கள் புதுப்பிக்கப்பட்டு சரியானபடி நினைவுகள் திரும்பி வரணும்... அதுக்குத்தான் மருந்து கொடுத்திருக்காங்க! நல்லவேளை ஆக்சிடெண்ட் ஆகி ரொம்ப நாள் ஆகலை... மெதுவா அவரைக் குணப்படுத்திடலாம்னுதான் தோணுது...

''நாம சொல்றதைப் புரிஞ்சிக்கற அளவுக்கு, ஒரு இன்வால்வ்மெண்ட் வந்தாக்கூடப் போதும்.. சீக்கிரமே சரி பண்ணிடலாம்...'' யோசனையுடன் கூறினாள்.

''எனக்கு நம்பிக்கை இருக்கு சக்தி! நீங்க வந்திட்டீங்க இல்லே, சிபி சீக்கிரமே குணமாயிடுவான்!'' உறுதியுடன் கூறினான் அவன்.

ஒரு பெருமூச்சுடன், ''அப்புறம்... அவரோட ரூம் முன்புறம் தோட்டத்துப் பக்கமா இருக்கற மாதிரி, அவரை மாத்த முடியுமா?'' என்று கேட்டாள் சக்தி.

''ஏன்?'' என்று அவன் வினவியபோது, ''ஏசி ஓடுறதால எல்லா ஜன்னலும் மூடி இருட்டடிச்ச மாதிரி இருக்கு... அவர் வெளி உலகத்தை பாக்கற வாய்ப்பே இல்லாம!

''உங்க வீட்டுக்கு முன்னாடி பெரிய கார்டன் அழகா இருக்கறதால, அதை பாத்த மாதிரி ஏதாவது ரூம் இருந்தா அங்கே 'ஷிப்ட்' பண்ணிடுங்களேன்!''

''ஜன்னலெல்லாம் திறந்து வச்சி, அங்கே ஒரு நாற் காலியப் போட்டு, அவரை காலையிலயும், சாயந்திரத் திலயும் கொஞ்ச நேரம் உக்கார வைங்க... நான் நாளைக்கு வரேன்!'' விடைபெற்றாள் அவள்.

வாசல் வரை வந்து வழியனுப்பிய அந்த வயதான தம்பதியைப் பார்த்தபோது, இவர்களுக்காகவாவது அவன் குணமடைய வேண்டும் என்று இதயம் பிரார்த்தித்தது.

புதிதாய் ஒரு தவிப்பும் சஞ்சலமும், மனதிற்குள் கேள்வியாய் மொட்டுவிட, அதற்கு விடை தேடி அலைந்தது நெஞ்சம்!

## 8

**கா**ரில் செல்லும்போது, பிரிந்திருக்கும் தன் அண்ணனை நினைத்து, தன் தாய் படும் வேதனையும் துயரமும், மறவாமல் மனதில் வந்தன.

கம்பீரமாக வளைய வந்த மகனை, கண் முன்னால் இப்படி ஒரு கோலத்தில் தினமும் பார்க்கும்போது, சிபியின் பெற்றோருக்கு எவ்வளவு வேதனையாக இருக்குமென்று நினைக்கையிலேயே, சஞ்சலமானது உள்ளம்!

வீட்டிற்குச் சென்று சிபியைப் பற்றி அம்மாவிடம் கூறிய வளுக்கு, அவருக்கு வேறெந்த உண்மையும் தெரியாம லிருப்பதே நல்லதென்று தோன்றியது.



வாழ்க்கை தெள்ளிய நீரோடையைப் போல் செல்ல, சில சமயங்களில் கல் விழுந்த சிற்றலையாய், சிபியின் நினைவுகள் மனதில் கலங்கலாகப் பரவ ஆரம்பித்தன.

இப்போது அந்தக் கிராமமும், மருத்துவமனையும், மக்களும் நன்கு பழகிவிட்டனர்.

தினமும் ஏதாவது பொருட்களை எடுத்து வந்து அந்த மனிதர்கள் பாசத்துடன் அளிக்கும்போது, எவ்வளவு மறுத்தாலும், கடைசியில் வேறு வழியின்றி, சக்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளவே நேர்ந்தது.

'நாட்டுக்கோழி முட்டை உடம்புக்கு நல்லதும்மா' என்று தரும்போதும்... 'பிஞ்சு சோளக் கதிரு, சாப்பிட்டுப் பாருங்க' என்று பாசத்துடன் அளிக்கையிலும்... கம்பு, பயிறு, உளுந்து என்று ஏதாவது தானியங்களைத் தங்கள் வயலில் விளைந்ததென்று கொடுக்கும்போதும்... அவர்களின் வெள்ளந்தியான அன்பினால், முகத்திலடித்தாற்போல் மறுக்கத் தோன்றாது.

அது போல், தினமும் மாலையில் சிபியின் வீட்டிற்குச் சென்று வருவதும் வாடிக்கையாகி இருந்தது.

ஜன்னலோரம் அமர்ந்து மாலை நேரம், தோட்டத்தில் பார்வையைப் பதித்தபடி இருப்பவனிடம், என்றாவது ஒரு சிறிய மாற்றமாவது வராதா என்று, சக்தியின் மனதிற்குள் ஏக்கமாக இருக்கும்.

ஒரு நாள் இளங்கோவிடம் வந்தவள், ''இந்த ரூமிலே ஒரு 'சிடி ப்ளேயர்' கொண்டு வந்து வச்சா, மென்மையான பாட்டுக்களை அப்பப்ப போட்டு விடலாமே... எதுக்குமே ஆட்படாத மனசு கூட சில சமயம் இசைக்கு வசப்படும்...

''அவருக்குப் பிடிச்ச மாதிரிப் பாட்டுக்களா, தினமும் கேட்டுட்டே இருந்தா, ஏதாவது ஒரு மாற்றம் வரலாம் இல்லையா? அதுக்கு ஏற்பாடு செய்ங்க இளங்கோ!'' எனும்போதே ரஞ்சனி அங்கு வந்தாள்.

''இங்கே என்ன செஞ்சிட்டிருக்கீங்க..? அப்பா உங்களைத் தேடினாங்க... ஏதோ பேசணுமாம்'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, உள்ளே வந்தாள்.

''டாக்டரெல்லாம் பொதுவா நோயாளிகளை குணப் படுத்தித்தான் நான் பாத்திருக்கேன்... ஆனா நீங்க வித்தி யாசமானவங்க போலருக்கு! எங்கண்ணாவை பைத்தியமா இல்லை ஆக்கிட்டீங்க! போதும்... இதோட நிறுத்திக்கங்க.

''பொண்ணுன்னா, அவங்க மனசுல கொஞ்சமாவது ஈரம், இரக்கம், இதெல்லாம் இருக்கணும்.. கல் மனசா, உங்களை நாலு வருஷமா விரும்பின எங்க அண்ணனைத்தான் இப்படி ஆக்கிட்டீங்க! பேசாம இருந்து அவரை இப்படி ஜடமாக்கின மாதிரி, பேசிப் பேசியே எங்க வீட்டுக்காரரையும் பைத்திய மாக்கிடாதீங்க'' சீற்றத்துடன் கூறிவிட்டு, விருட்டெனத் திரும்பிச் சென்றாள்.

சக்தி, அப்படியே ஓய்ந்து போய், தொப்பென்று அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

விழிகளில் நீர் துளிர்க்க, மனம் குறுகி நிமிர்ந்தபோது, ஏன் இந்த ஊருக்கு வந்தோம் என்று தோன்றிக் குழப்பமானது.

பிறகு சிறிது நேரம் சிபியின் அருகிலேயே இருந்து, அவன் உறங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, மனம் கனத்துப் போயிருந்தது.

மணிமேகலையிடம் விடைபெற்றுக் கிளம்பியவள், நேரே வீட்டிற்குச் செல்ல விருப்பமின்றி, ஆற்றுப் பாலத்தருகில் இறக்கி விடச் சொல்லி, கரையோரமாக நடக்க ஆரம்பித்தாள்.



* * *

**அ**ந்த ஆற்றங்கரை மணல்வெளியில், சிறு பறவைகள் தங்கள் முகவரிகளைக் காலடிகளாய்ச் செதுக்கி வைத்து விட்டுச் சென்றிருந்தன.

அவற்றை நதியலைகள் அழிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை, மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தது.

தங்கள் வீட்டிற்குப் பின்புறமிருந்த மணற் பரப்பில் அமர்ந்தபோது, தன்னுடைய மனதைப் பற்றி அவளாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

''எதிர்காலம், லட்சியம், பெற்றோரின் விருப்பம், இவைகளுக்காகத்தான் ஒரு வேளை என் மனதில் வேறு எந்த உணர்வுகளும் நுழைந்து விடாதபடி, மூடி மூடி வைத்துக் கொண்டேனோ?''

''இயல்பான காதல் உணர்வுகளுக்கும், மென்மையான சில பகிர்தல்களுக்கும் என்னைத் தர நான் தயாராக இல்லையோ?''

''எனக்குள்ளேயே பனிப் பாறையாய் இறுகிப் போய், ரஞ்சனி கூறுவது போல் ஒரு நல்ல மனிதரின் மிருதுவான மன உணர்வுகள், ஏக்கங்கள் மற்றும் காதலைப் புரிந்து கொள்ளாமல் பொய் முகமூடி அணிந்திருந்தேனோ''வென்ற சுயத் தேடல் அவளை ஆக்கிரமித்தது.

ஆனால் இதுவரை தன்னுள் காதலென்ற உணர்வு நுழைந்ததில்லை என்பது மட்டும், நிச்சயமான ஒன்றாய்...!

பருவ வயதில் வருகிற சிறு சிலிர்ப்புகள், கிளர்ச்சிகள் கூடத் தன்னைத் தீண்டியதில்லை என்ற நிஜமும், இன்று புரிந்தது.

தனக்குள்ளேயே புதைக்கப்பட்டு விட்ட உணர்வுகளுக்கு, சந்துருவும் ஒரு காரணமென்பதும், அவன் காதலால் தன் வீட்டில் வீசிய புயல், தன்னை உறைய வைத்திருப்பதும் புரிய, ஏனோ அபியிடம் உடனே பேச வேண்டும் போலிருந்தது.

இரவு, அபிக்கு 'செல்'லில் தொடர்பு கொண்டபோது, சரியாக 'சிக்னல்' கிடைக்காததால், சக்தி வெளியில் வந்து ஊஞ்சலில் அமர்ந்து பேச ஆரம்பித்தாள்.

''அபி... எப்படி இருக்கே?''

''என்னம்மா... போய் ரெண்டு மாசமாச்சு.. தகவலே காணோம்... இப்பதான் என் ஞாபகம் வந்துதா? அப்புறம்... அந்த ஊர் எப்படி இருக்கு?''

''ம்... நல்லாருக்கு! அப்பறம்... நான் இங்கே.. சிபியைப் பார்த்தேன்'' மெல்லிய குரலில் கூறினாள் சக்தி.

''வாட் எ சர்ப்ரைஸ்! அவருக்குக் கல்யாணமாயிடுச்சா?''

அபி ஆர்வத்துடன் கேட்க, 'இல்லை'யென்றாள் சக்தி.

''ஹேய்... அப்புறம் என்ன.. உன் விருப்பப்படி கிராமத்துக்குப் போயாச்சு! இனிமே என்ன ஒரே ரொமான்ஸ் தானா?'' குறும்புடன் கேட்டாள்.

பிறகு, சிபிக்கு நடந்த விபத்தைப் பற்றியும், இப்போது அவனிருக்கின்ற நிலைமையைப் பற்றியும் சக்தி கூறியபோது, சிறிது நேரம் அவள் பேசவேயில்லை.



''ஸாரி சக்தி! ஏன் இப்படி..? நீ ஒண்ணு பண்றியா? அவரோட மெடிக்கல் ஃபைலை ஜெராக்ஸ் பண்ணி குரியர்லே என் அட்ரசுக்கு அனுப்பு! அடுத்த மாசம் நியூரோ சர்ஜன்ஸ் மாநாடு ஒண்ணு இருக்கு! அதுக்கு ஃபாரின்லேருந்தெல்லாம் நிறைய சீஃப் டாக்டருங்கெல்லாம் வராங்க...

''நான் இந்தக் கேஸைப் பத்தி அப்பாகிட்ட முதல்லே பேசறேன்.. அப்புறம் அவரை விட்டே, சிபி விஷயத்துல ஏதாவது செய்ய முடியுமான்னு மத்த டாக்டர்ஸ் கிட்டப் பேசச் சொல்றேன்... அம்மாவை ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு!

''அப்புறம்... சொல்ல மறந்திட்டேன்... என்னோட கஸின் பிரதர் ஆனந்த், அங்கே டவுன் ஹாஸ்பிடல்லேதான் சீஃப் டாக்டரா இருக்காரு! உனக்கு எதுவும் உதவி தேவைன்னா அவரைக் காண்டாக்ட் பண்ணிக்க... நானும் அவர்கிட்ட உன்னைப் பத்தி சொல்லிடறேன்... பை சக்தி! டேக் கேர்!'' என்று வைத்தாள்.

* * *

திடீரென்று காற்று சிலுசிலுக்க, எங்கிருந்தோ வந்த மண் வாசனை நாசியில் சுகமாய்ப் புகுந்து.. பூமியின் மேல் புதையலாய், பூத்தூவலாய் மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன.

மண்ணிற்கும் தாகம் வந்ததால், மழை நீரைப் பருக ஆரம்பித்தது.

சிறு வயதில், மழை நீரில் காகிதக் கப்பல் செய்து மிதக்க விட்டதும், அது கவிழ்ந்து விடும்போது, மனமே சோகத்தில் மூழ்கியதும், நிழற் படமாய் மறக்க முடியாமல் நினைவு வர, மழையை ரசித்தபடி நின்றிருந்தாள் அவள்.

தோளில் பதிந்த ஒரு கையின் தொடுகை, அவளை நினைவுலகுக்கு மீட்டு வந்தது.

''யாரோட பேசிட்டிருந்தே சக்தி!'' என்று கேட்ட விசாலத்திடம், ''அபியோட தாம்மா! உன்னை ரொம்ப விசாரிச்சா?'' என்றாள்.

''அபி நல்லாருக்காளாம்மா? மேலே படிக்கறா இல்லை?''

''ஆமாம்மா! அவங்கப்பா 'நியூராலஜிஸ்டுங்கிறதாலே, அவளும் அதையே செலக்ட் பண்ணிப் படிக்கறா!'' யோசனையுடன் கூறும்போதே மின்சாரம் நின்று போனது.

''வா சக்தி... உள்ளே போயிடலாம்! சாரல் காத்து அடிக்குது... உனக்கு ஒத்துக்காது!''

விசாலம் அவளை உள்ளே அழைத்துச் சென்றபோது, மனதிற்குள் ஏனோ சிபியைப் பற்றின நினைவு!

மறுநாள் நோயாளிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தபோது, செவந்தி வந்திருந்தாள்.

''என்ன செவந்தி... உடம்பு சரியில்லையா?'' என்று சக்தி கேட்கும்போதே, முகம் வெட்கத்தில் பூரிக்கத் தலை குனிந்து நின்றாள் அவள்.

''எனக்கு நாள் தள்ளிப் போயிருக்குதும்மா... அதான் உங்க கிட்டக் காட்டலாம்னு வந்தேன்'' என்றவுடன் அவளைப் பரிசோதித்துவிட்டு, சில டெஸ்ட்களை எழுதிக் கொடுத்து, மறுநாள் ரிசல்ட்டுடன் வரும்படிக் கூறினாள் சக்தி.

மதியம் வீட்டிலிருந்து சாப்பாடு வந்திருக்க, அவளும் சாந்தியும் பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.



அந்த வெயிலிலும் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைப் பார்த்தபோது, இவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் தங்கள் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்களே என்ற பரிதாபமும், கவலையும் வந்தன.

## 9

**அ**ன்று மாலை சிபியின் வீட்டிற்குச் சென்றிருந்தபோது, இளங்கோவிடம் சிபியுடைய மெடிக்கல் ஃபைலை ஜெராக்ஸ் எடுத்துத் தரும்படிக் கேட்டாள் சக்தி.

''ஏன் சக்தி திடீர்னு கேக்கறீங்க?''

''என் ஃப்ரெண்ட் அபி தெரியுமில்லே. அவ அப்பா நியூராலஜிஸ்ட்! அவர்கிட்டே இவரோட கேஸைப் பத்தி சொல்லி ஏதாவது செய்ய முடிமான்னு அபி கேக்கறேன்னா... அதான்!

''அப்புறம் இன்னொரு விஷயம்! நம்ம ஹாஸ்பிடலுக்கு எதிரே இருக்கற இடத்துல நிறைய சின்னப் பசங்க விளையாடிட்டு இருக்காங்க! அவங்கள்லாம் ஸ்கூலுக்குப் போக மாட்டாங்களா?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''இங்கே கொஞ்சம் பேர் தான் ஸ்கூலுக்குப் போறதே! சில பசங்க இப்படித்தான் திரிஞ்சிட்டிருப்பானுங்க! பாதிப் பசங்க தீப்பெட்டி செய்யற வேலைக்குப் போறாங்க... ஆனா நம்ம பண்ணையிலயும், பேக்டரியிலயும் 'சைல்ட் லேபர்' கிடையவே கிடையாது.. மாமா அந்த விஷயத்துல ரொம்ப ஸ்ட்ரிக்ட்...''

''இளங்கோ! ஒரு ஏழை மாணவனுக்கு நியாயமா கிடைக்க வேண்டிய கல்வி மறுக்கப் படறது கொடுமையில்லையா..? படிக்கிற வயசுல வேலைக்கு அனுப்பி, பிஞ்சிலேயே தடியால அடிச்சு முதிர்ச்சியடைய செய்யறது பாவமில்லையா..?''

''நாம அந்தப் பசங்க பொழப்புல மண் அள்ளிப் போட முடியாது... ஆனா, நம்ம தொழிலாளர்களோட பசங்களை கண்டிப்பா ஸ்கூலுக்கு அனுப்புங்கன்னு வேணா சொல்லிப் பாக்கலாம்... அதான் என்னால முடியும்!''

புன்னகையுடன் கூறியபோது, இளங்கோவின் மீது சக்திக்கு ஒரு வித மரியாதை வந்தது.

அவள் சொல்கிறாளென்று தலையாட்டாமல், தன்னால் இதுதான் முடியும் என்று நேரடியாகக் கூறிய அந்த நேர்மை, அவனிடம் ஒரு தோழமை உணர்வை ஏற்படுத்த, பதிலுக்கு முறுவலித்தபோது, ரஞ்சனியின் நினைவு வந்தது.

இங்கு, ஆண் பெண் இருவரின் தூய்மையான நட்பு கூட அபாயச் சின்னமாய்... சுயநலமில்லா ஆத்மார்த்த சிநேகிதம் கூட, கொச்சைப் படுத்தப்படுமோவென்ற பயமும் கூடவே வந்தன.

ஒரு பெருமூச்சுடன், ''சிபி எப்படி இருக்காரு..?'' அவள் கேட்டாள்.

''அதை, டாக்டர்.. நீங்கதான் வந்து பார்த்துச் சொல்லணும்'' என்று இளங்கோ கூறும்போதே, மணிமேகலை வந்து விட்டார்.

பிறகு, சிபியின் அறைக்குச் சென்றபோது, அங்கு மெல்லிய ஓசையுடன், 'பங்கஜ் உதாஸின்' கஜல் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

அவளைக் கண்டதும் வாசு புன்னகையுடன் வெளியேற, இளங்கோவிடம் திரும்பியவள், '''பங்கஜ் உதாஸ்' கஜல் உங்களுக்குப் பிடிக்குமா?'' ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

''சிபிக்குப் பிடிக்கும்! அவனுக்கு எப்பவுமே மெலோடியஸ் இசைன்னா ரொம்பப் பிடிக்கும்... இளைய ராஜாவோட பாடல்களை விரும்பிக் கேப்பான்... நீங்க சொன்னப் புறம்தான் அவனோட கலெக்ஷன் எல்லாம் தேடி எடுத்து, அப்பப்ப வாசுவைப் போடச் சொல்லி இருக்கேன்'' என்றான்.



அவனுடைய ரசனைகள், இசையின் விஷயத்தில் தன்னுடன் பெரும்பாலும் ஒத்துப் போவது தெரிந்தபோது, மனதின் ஓரம் சிறு சிலிர்ப்பு!

''இன்னிக்குப் பாட்டு கேக்கட்டும்.. நாளைக்கு நீங்க பேக்டரியிலருந்து சீக்கிரம் வந்துட்டீங்கன்னா, வாசுவோட துணையோட மெதுவா சிபியத் தோட்டத்துல வாக்கிங் அழைச்சிட்டுப் போகலாம்னு நினைக்கிறேன்.''

''சரி சக்தி! நாளைக்கு நான் சீக்கிரமே வந்திடறேன்.. அப்புறம்... ஒண்ணு சொல்லணும்.. சிபி ரொம்ப நல்லவன்மா! கடவுள் பக்தியே இல்லாதவன்னாலும், உங்களைப் பாத்த பிறகு, நீங்க அவனுக்குக் கிடைக்கணும் அப்படின்னு ஒரே ஒரு தடவை, வரப்பிரசாதியான மைலாப்பூர் சிவன்கிட்ட வேண்டினதாச் சொல்லுவான்...

''சிக்னல்லே யாராவது பிச்சைக்காரங்க ஊனமா நின்னாப் போதும்... எவ்வளவுன்னு பாக்காம பணத்தை அள்ளிக் கொடுப்பான். அவனுடைய மென்மையான பக்கம் எனக்கு மட்டும்தான் தெரியும்... நிறைய கவிதை கூட எழுதுவான்...

''இப்போ உங்க விஷயத்தையே எடுத்துக்கங்க! மாசத்துக்கு ஒரு பொண்ணோட சுத்தி, கழட்டி விடற எத்தனையோ ஆண்களை நான் பாத்திருக்கேன்! ஆனா உங்க நினைவை மனசுல வருஷக் கணக்கா சுமந்து, அதை பூஜிச்சி, நேரா வந்து சொன்னா நீங்க மாட்டேன்னுடுவீங்களோன்னு தயங்கி, உங்க படிப்பு முடியட்டும்னு காத்திருந்த அந்த உயர்ந்த மனசை, எனக்கு ரொம்பப் பிடிக்கும் சக்தி...

''நான் சாதாரண மிடில் கிளாஸ்தான்! நட்புங்கற ஒரே காரணத்துக்காக, என் கிட்டப் பணம் எதுவுமே வாங்காமத் தன்னோடத் தங்க வச்சு, அப்படிப் பாத்துக்கிட்டான்!

''எனக்கு ஒரு வேலையும் வாங்கித் தந்தான்... அன்னிக்கு நான் அவனோடப் போயிருந்திருக்கணும். தப்பு பண் ணிட்டேன்! எனக்கு ஏதாவது ஆகியிருந்தாக்கூடப் பரவா யில்லை. அவனை இப்படிப் பாக்கறப்ப, என்னாலத் தாங்க முடியலை சக்தி!''

விழிகள் கசிய, தூரப் பார்வை பார்த்தபடி அவன் கூறியபோது, அவளுக்கும் உயிர் வேதனையாய்!

''கவலைப்படாதீங்க.. உங்க மாதிரி வெல் விஷர்ஸ் நிறையப் பேரு, அவர் குணமாயிடணும்னு விரும்பறப்போ, அந்த எண்ணங்களே அவரைக் கூடிய சீக்கிரம் நலமாக்கிடும்னு எனக்குத் தோணுது!''

மென்மையான குரலில் ஆதரவுடன் கூறி விட்டு நிமிர்ந்த போது, அறை வாசலில் ரஞ்சனி நின்றிருந்தாள்.

அவளுடைய விழிகள் தீக்கங்குகளாய் சக்தியை எரித்தன.

அவள் பார்வை இடம் மாறியதை உணர்ந்த இளங் கோவும், திரும்பினான்.

வாசலில் நின்றிருந்த ரஞ்சனியைப் பார்த்ததும், அவளிடம் சென்றான்.

அவர்களிருவரும் பார்வையிலிருந்து மறைந்ததும், ஒரு பெருமூச்சுடன் அமர்ந்தவளுக்கு, இளங்கோ மிகவும் நல்லவன் என்று தோன்றியது.

இவனை நண்பனாக அடைய சிபி கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று எண்ணும்போதே, அவனிடம் இனம் புரியாத ஒரு பாசம் வந்தது.



சிறிது நேரம், மென்மையாகக் கசிந்த கஜல் பாடல்களைக் கேட்டபடி மெய்மறந்து அமர்ந்திருந்தபோது, இசைக்கு மொழி ஒரு தடையில்லை என்பது புரிவதாய்!

மயிலிறகாய் மனதை வருடிய அந்தக் குரல், மனதை மாயம் செய்ய, உள்ளுக்குள் ஏதோ ஒரு மாற்றம் புதிதாய்!

சிபி உறங்குவது போல் கண் மூடி இருக்க, வாசுவிடம் கூறிவிட்டு வெளியில் வந்தபோது, அவளுக்காக ரஞ்சனி அங்கு காத்திருந்தாள்.

''ஒரு நிமிஷம்! நான் அன்னிக்கே உங்ககிட்ட சொன்னேன். என்ன சொக்குப் பொடி போட்டீங்க..? அண்ணா இப்படி மயங்கிக் கிடக்காரு. என் வீட்டுக்காரரு என்னடான்னா, நீங்க பெரிய மகாராணி மாதிரி உங்களை சப்போர்ட் பண்றாரு! உங்க தகுதி என்னங்கிறதை மறந்து டாதீங்க!''

கோபத்துடன் பொரிந்தவளைக் கையமர்த்தி நிறுத்தினாள் சக்தி.

''ரஞ்சனி! நான் ஒரு டாக்டர்! உங்க வீட்டுக்கு வரதாலே, யாரை வேணும்னாலும் என்ன வேணாப் பேசலாம்னு நினைக்காதீங்க! என் தகுதி என்னன்னு எனக்குத் தெரியும்! நான் யார் பின்னாடியும் சுத்தி, காதலிச்சு ஊர் சுத்தி ஏமாத்தலை...

''ஒண்ணு புரிஞ்சிக்கங்க! எனக்கு இளங்கோவும், எங்கண்ணா சந்துரு மாதிரி தான்! என் மேல தப்பே இல்லைன் னாலும், என்னால ஏதோ ஒரு விதத்தில உங்கண்ணா பாதிக்கப்பட்டிருக்காரேன்னுதான், நான் அவரை குணமாக்க முயற்சிக்கிறேன்... இது மாதிரி இன்னொரு தடவை

பேசினீங்கன்னா, நான் இந்த வீட்டுக்கு வரவே மாட்டேன்'' உறுதியாகக் கூறிவிட்டு, வேகமாக வெளியேறினாள்.

மனம் எரிதழலாய் தகித்தது!

'நாம் செல்கின்ற வழி முழுவதும் மலர்ப்பாதைகள் தான் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நம் தவறென்று தோன்ற, சில முட்பாதைகளைக் கடந்தேயாக வேண்டும்' என்ற உண்மையும் புரிந்தன.

* * *

**வீ**ட்டிற்கு வந்தபோது, சந்துருவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

அடுத்த வருடம், கட்டாயம் இந்தியாவிற்கு வருவதாக எழுதியிருந்தான். இன்று அம்மா மிகவும் சந்தோஷமாக இருப்பது தெரிந்தது.

ரஞ்சனியின் பேச்சால் மனம் அனலாய்க் கொதிக்க, தலை குளித்துவிட்டு வந்தவுடன், ''அம்மா... கோவிலுக்குப் போய்ட்டு வரலாமா?'' என்றாள் சக்தி.

பிறகு இருவரும் சிவன் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்து முடித்து பிரகாரத்தில் அமர்ந்தபோது, தன் வாழ்க்கைப் பாதையை எதிர் வரும் காலமே தீர்மானிக் கட்டும் என்று தோன்ற, மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

கோபுரத்தில் புறாக்களின் சிறகடிப்பும், ஓம்காரமாய் ஒலித்த கோவில் மணியும், வேத மந்திரங்களும், புண்பட்ட மனதை மாயக்கரம் கொண்டு வருடின.



அன்றிரவு உறக்கம் வராமல் புரண்டபோது, ஜன்னல் வழியே வீசிய குளிர்த் தென்றலின் வருடலுடன், மகிழம் பூவின் மணமும் நாசியில் சுகமாய் நுழைந்து சிலிர்க்கச் செய்தன.

ஜன்னலருகே சென்று பார்த்தால் வானில் பிறை நிலவு தெரிந்தது.

நிலவு வருந்துவதில்லையே... தேய்ந்து போகிறோமென்று! மீண்டும் வளர்கிறதே என்று தோன்ற, மனதில் ஒரு தெளிவு வந்தது.

மறுநாளே, இளங்கோ ஒரு ஆள் மூலம் மெடிக்கல் ரிப்போர்ட்களைக் கொடுத்துவிட, உடனே அதைக் குரியரில் அபிக்கு அனுப்பினாள் சக்தி!

அன்றிலிருந்து வாசுவின் உதவியுடன், சிபியைத் தோட்டத்தில் மெதுவாக வாக்கிங் அழைத்துச் செல்வது வழக்கமானது.

ஜன்னல் வழியே இருவரும் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலை, தன் கணவரை அழைத்தார்.

''ஏங்க... சிபி சீக்கிரமே குணமாகி, இதுபோல அவங்க ரெண்டு பேரும், தம்பதிகளா ஒத்துமையா சந்தோஷமா இருக்கணும்னு ரொம்ப ஏக்கமா இருக்குங்க!''

கண்ணீருடன் அவர் கூற, மனம் முழுக்க ஆசை இருந்தும் பதில் மட்டும் இல்லை, வீர பாண்டியனிடம்!

தன் மகனையே இமைக்காமல் நோக்கியவருக்கு, மனதில் பெரும் சோகம் சூழ்ந்தது.

## 10

மறுநாள் மதியம் மருத்துவமனைக்கு வந்த செவந்தியின் ரிப்போர்ட்டில், அவள் கர்ப்பம் என்பது உறுதியானது.

சந்தோஷத்துடன் அவளை வாழ்த்திய சக்தி, விட்டமின் மாத்திரைகளை எழுதிக் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

நாட்கள் வாரங்களாகி விட, இப்போதெல்லாம் ரஞ்சனி அவள் கண்களில் படுவதேயில்லை.

சக்தி வரும் நேரமறிந்து, அவள் விலகிச் செல்வது போல் தோன்றியது.

அன்றிரவு அபி போன் செய்திருந்தாள்.

''சக்தி... ஒரு முறை மிஸ்டர். சிபிவர்மனை சென்னைக்கு 'செக்கப்'புக்கு அழைச்சிட்டு வர முடியுமா? அவரோட கேஸ் ஃபைலைப் பார்த்துட்டு அப்பாவோட நண்பர் அமெரிக்காவி லேருந்து வந்திருக்கற டாக்டர் ஒருத்தர், ஒரு ஆபரேஷன் பண்ணினா குணமாக சான்ஸ் இருக்குன்னு சொல்றாரு...

''அவரு இன்னும் பதினைஞ்சு நாளிலே திரும்பிப் போறாரு! இங்க உடனே சிபியை அழைச்சிட்டு வர முடியுமா..?'' என்றபோது, சக்தியின் மனதில் புதிதாய் ஒரு நம்பிக்கை ஒளி!

தன்னால்தான் சிபிக்கு இது போலாயிற்றோ என்று, மனம் முழுவதும் நெருஞ்சி முட்களாய் உறுத்திக் கொண்டிருந்த குற்ற உணர்ச்சிக்கு மருந்தாய், அபியின் வார்த்தைகள்!

நினைவுகளிலிருந்து கலைந்து, ''அபி! நிச்சயமா அவரை அங்க அனுப்பறதுக்கு இளங்கோ மூலமா உடனே நான் ஏற்பாடு பண்றேன்... நாளைக்கே கிளம்பச் சொல்லி, உன் அட்ரஸைக் குடுத்தனுப்பறேன்... உனக்குத்தான் இளங்



கோவைத் தெரியுமே... அவர் வந்து உன்னைப் பாப்பாரு! அப்புறம் அங்கிள்கிட்டச் சொல்லி, சிபியை நல்லாப் பாத்துக்கச் சொல்லு அபி!'' தன்னையறியாமல் கூறி விட்டாள்.

''சரிம்மா! என்ன... ஏதாவது கெமிக்கல் ரியாக்ஷன் மனசுல வந்துடுச்சா? சாரி.. சும்மா ஜோக்கடிச்சேன்... நான் எல்லாம் பாத்துக்கறேன் சக்தி'' கூறிவிட்டுப் போனை வைத்தாள்.

அபியின் கேள்வி பூதாகரமாக எழுந்து நின்று, அவளுடைய கண் முன்னால் பெரும் கேள்விக் குறியாய்!

முதன் முதலாக சிறு சலனம் ஒன்று சமீப நாட்களாகத் தனக்குள் எழுவதும், ஆனால் அர்த்தம் புரியாமலே மடிவதும், புதிராய்!

உடனே இளங்கோவின் செல்லுக்குத் தொடர்பு கொண்டு விபரம் கூறியவள், காலையில் அபியின் முகவரியும், ஒரு கடிதமும், தானே கொண்டு வந்து தருவதாகக் கூறினாள்.

மறுநாளே எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு, இளங்கோவும், மணிமேகலையும், வாசுவும், அவனைக் காரில் அழைத்துச் சென்றனர்.

அன்றிலிருந்து, சிபி குணமடைந்து திரும்ப வேண்டும் என்ற பிரார்த்தனை அவளுக்குள் அதிகமாய்...!

* * *

மறுநாளிலிருந்தே, மாலைப் பொழுதுகள் கடிகாரத்தின் சிறு முள்ளாய் வேகமாய் நகராமல் அடம் பிடிக்க, புதிதாய் ஒரு வெற்றிடம் மனதை வியாபிக்க ஆரம்பித்தது.

நான்கு வருடங்கள் தினமும் அவனைப் பார்த்திருந்த போதும் வராத நேசம், நான்கு மாதங்கள் அவனுடன் பழகியதில் வந்து விடுமா என்ற புதிருக்கு, விடை தான் தெரியவில்லை.

இரண்டு நாட்களில் இளங்கோ அவளிடம் பேசினான்.

''சக்தி.. ரொம்பத் தேங்க்ஸ்! ஆரம்ப கட்டப் பரிசோதனை எல்லாம் முடிஞ்சிடிச்சு! இந்த டாக்டர் ரொம்ப நம்பிக்கை கொடுத்திருக்காரு! அடுத்த வாரம் ஆபரேஷனுக்கு நாள் குறிச்சிட்டாரு... சிபி அப்படியே தான் இருக்கான்...

''நாங்க மூணு பேரும் கூடவே இருக்கோம். ஆபரேஷனுக்கு அப்புறம் நல்ல முன்னேற்றம் தெரியும்னு டாக்டர்ஸ் சொல்றாங்க.. நீங்க எப்படி இருக்கீங்க?''

''ம்.. நல்லாருக்கேன்! சாயந்தரம் உங்க வீட்டுக்கு வந்திடுவேனா? இப்ப அந்த நேரம் மட்டும் கொஞ்சம் போரடிக்குது! நான் அபிகிட்ட இன்னிக்கு நைட் பேசறேன்னு சொல்லுங்க.''

பேசிக்கொண்டிருக்கும்போதே, பாம்பு கடித்து விட்டதென்று சிலர் ஒரு நோயாளியைத் தூக்கி வரவும், மற்றதெல்லாம் மறந்து போக, அவருக்கு முதலுதவி செய்யத் தொடங்கினாள் அவள்.

அன்றிரவு அபியுடன் பேசிய பிறகு, சிபியின் நினைவுகள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டன.

நீண்ட நாட்களுக்கு முன்பு, மனதிலிருந்து விலகிப் போன ஞாபகங்களை, உணர்வுகள் இன்று வீணையாய் மீட்டின.



அன்றிரவு, வெகு நேரம் உறக்கம் தொலைத்த தருணங்களில், அந்த ஆழமான மௌனம் சுமந்த பொழுதில், ஏதோ ஒரு மெல்லிய ஓசை!

அது தன் ஆன்மாவின் மௌன விசும்பல்களோ என்று சக்திக்குத் தோன்றியது.

தான் இந்த ஊருக்கு வந்த புதிதிலிருந்தே, அவன் தன்னுள் மெல்ல மெல்ல நுழைந்து ஆக்கிரமித்திருப்பது, இன்று புரிவதாய்...!

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் சக்தி சோம்பலுடன் எழுந்தாள்.

கிணற்று மேடையிலமர்ந்து, பறவைகளையும், மலர்களையும் ரசித்தபோது, வானில் கலைந்து ஓடி இணையும் மேகங்கள், எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத ஓவியங்களாய்த் தோன்றின.

காலையில் எழுந்ததிலிருந்து, இதழ்களில் புன்னகையுடன், ஏதோ ஒரு பாடலையும் முணுமுணுத்தபடி வளைய வந்த சக்தியைப் பார்த்தபோது, விசாலத்தின் மனதில் பல யோசனைகள்!

* * *

**ம**றுநாள் மதியம், நோயாளிகளைப் பார்த்து அனுப்பி விட்டு, சாப்பிட அமர்ந்த சக்தியை, வாசலில் கார் ஒன்று வேகமாக வந்து நிற்கும் ஓசை அழைத்தது.

எழுந்து பார்த்தால், முதலில் பதட்டத்துடன் உள்ளே வந்த வீரபாண்டியனுக்குப் பின்னால், ரஞ்சனி அழுதபடி குழந்தை தனஞ்செயனுடன் வேகமாக வந்தாள்.

''குழந்தைக்கு ரொம்ப முடியலைம்மா... கொஞ்சம் என்னன்னு பாருங்க?'' என்று அவர் கூற, உடனே குழந்தையைப் பரிசோதித்தாள்.

உடல் முழுவதும் சிவப்புப் புள்ளிகள் லேசாகத் தெரிய, உதடுகள், கை, கால்கள் சிவந்து போய், அனலாய் கொதித்துத் துவண்ட குழந்தையைப் பார்த்தவுடனே, ''டெங்குக் காய்ச்சல்'' வந்திருப்பது தெரிந்தது.

உடனே, காய்ச்சல் குறைய ஒரு ஊசியைப் போட்டு விட்டு ஆனந்திற்குப் போன் செய்தாள்.

''டாக்டர்... நான் சக்தி... அபியோட ஃப்ரெண்ட் பேசறேன்.. போன மாசம் ஒரு நாள் போன் பண்ணி அறிமுகப் படுத்திகிட்டேனே? இங்கே ஒரு அஞ்சு மாசக் குழந்தை ''டெங்கு ஃபீவர்''னாலப் பாதிக்கப்பட்டிருக்கறதாத் தோணுது. நாங்க உடனே அங்கே அழைச்சிட்டு வரோம்!'' என்றவள் அவனுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகு வைத்தாள்.

வெளியே வந்து பார்த்தபோது, வெராந்தாவில் இருந்த பெஞ்சில் அமர்ந்து ரஞ்சனி அழுது கொண்டிருக்க, அவள் தந்தை சமாதானப்படுத்துவதைக் கண்டாள்.

''ஒரு நிமிஷம்! உள்ளே வர்றீங்களா?'' என்று அவரை அழைத்தாள் சக்தி.

''குழந்தைக்கு 'டெங்கு ஃபீவர்' வந்திருக்குன்னு நினைக்கிறேன். 'சிம்டம்ஸ்' எல்லாம் பாத்தா அப்படித்தான் தெரியுது. டவுன்ல இருக்கற டாக்டர் கிட்டப் பேசிட்டேன். நானும் வரேன்... உடனே அங்கு கொண்டு போய் குழந் தையை அட்மிட் பண்ணிடலாம்... பயப்படாதீங்க'' என்றாள்.



மருதுவையும், சாந்தியையும் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, ரஞ்சனியிடம் விஷயத்தைச் சொன்னவுடன், பொங்கி அழ ஆரம்பித்தாள் அவள்.

அவளைச் சமாதானப்படுத்தியவள், ''ஒண்ணும் பயப்பட வேணாம். அங்கே எனக்குத் தெரிஞ்ச டாக்டர் இருக்காரு... அவர்கிட்ட விஷயத்தைச் சொல்லிட்டேன்... ட்ரீட்மெண்ட் பண்ணினா சரியாயிடும்'' எனும்போதே, குழந்தை விடாமல் வாந்தியெடுக்க ஆரம்பித்தது.

அதை சுத்தம் செய்தவுடனே காரில் கிளம்பியபோது வழியில் அவளுடைய கைகளைப் பிடித்தபடி அழ ஆரம்பித்தாள் ரஞ்சனி.

''உங்களை நம்பித்தான் இவனை ஒப்படைச்சிருக்கேன்... ப்ளீஸ்... என் குழந்தையைக் காப்பாத்துங்க! நான் பேசின எதையும் மனசில வச்சிக்காதீங்க! என்னை மன்னிச்சிடுங்க டாக்டர்'' கண்ணீருடன் கதறினாள்.

குழந்தையை அட்மிட் செய்து ஆனந்திடம் பேசிவிட்டு இரவு வீட்டிற்கு வந்த பிறகு, அவள் இளங்கோவிடம் பேசினாள்.

அவனுக்கும், முன்பே விஷயம் தெரிவிக்கப்பட்டிருக்க, பதட்டத்திலிருந்தான்.

''இளங்கோ... கவலைப்படாதீங்க... அம்மாகிட்ட எதுவும் சொல்ல வேணாம்... பயந்துடப் போறாங்க! நீங்க வந்தீங்கன்னா நல்லாருக்கும்... ரஞ்சனி ரொம்ப அழறாங்க! அதோட ப்ளேட்லெட்ஸ் குறைஞ்சா.. தேவைன்னா ரத்தம் குடுக்கற மாதிரி இருந்தாலும் இருக்கும்.. உங்களுக்கும் அதே ப்ளட் குரூப் இருந்தா, நீங்க இங்க இருக்கறது நல்லது! அங்க யாரையாவது துணைக்கு வச்சிட்டு நீங்க வந்துடுங்க...''

''ஒண்ணும் பயமில்லையே சக்தி... நான் உடனே கிளம்பி வரேன். இங்க சிபியோட சித்தப்பாவைத் துணைக்கு இருக்கச் சொல்லிட்டு வந்திடறேன்'' என்றான் அவன்.

பிறகு இளங்கோவும் வந்துவிட ட்ரிப்ஸிலேயே மருந்துகள் செலுத்தப்பட்டன.

தினமும் இரவில் டவுனுக்குச் சென்று குழந்தையைப் பார்த்து வந்தாள் சக்தி.

இளங்கோவும், ரஞ்சனியுடன் உடனிருக்க, இப்போது குழந்தை இயல்பாகி இருந்தான்.

ரத்தம் கொடுக்கத் தேவையில்லாமல், காய்ச்சல் இறங்கி உடல் தேறியது.

ஆனால், ரஞ்சனிதான் ஐந்து நாட்களில் பெரிதும் ஓய்ந்து போயிருந்தாள்.

* * *

அன்று தனஞ்செயன் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்து விட்டதால், மாலையில் சக்தி குழந்தையைப் பார்க்க சிபியின் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

இதழ்களில் நலிந்த புன்னகையுடன் அவளை வரவேற்றாள் ரஞ்சனி.

''என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்க! உங்க நல்ல மனசைப் புரிஞ்சுக்காம, நான் தப்பாப் பேசிட்டேன்... சாரி!'' கெஞ்சுகின்ற குரலில் கூறியபோது, அவளைச் சமாதானப் படுத்தினாள் சக்தி.

''நான் தப்பா எதுவும் நினைக்கலை ரஞ்சனி... நீங்க ஆனந்துக்கு தான் நன்றி சொல்லணும்! ஒரு டாக்டருங்கிற முறையில, என்ன செய்யணுமோ அதத் தான் நானும் செஞ்சேன்... பழசை எல்லாம் மனசுலப் போட்டுக் குழப்பிக்காம, தனாவைக் கவனிங்க'' என்றவள் குழந்தையைப் பார்த்துவிட்டு, இளங்கோவிடம் வந்தாள்.



''ரொம்பத் தேங்க்ஸ் சக்தி... குழந்தைக்கு என்னன்னு உடனே கண்டு பிடிச்சி ட்ரீட்மெண்ட் பண்ணி தனாவைக் காப்பாத்துனதுக்கு! பர்சனலா தேங்க்ஸ் சொல்லணும்னு நினைச்சிட்டே இருந்தேன்...'' அவன் குரல் பிசிறு தட்டியது.

''தேங்க்ஸ் எல்லாம் சொல்லி என்னை அந்நியமாக் கிடாதீங்க... நான் உங்க ஃப்ரெண்ட்தானே... இதக்கூட செய்யலைன்னா எப்படி? நன்றி சொல்ற அளவு நான் எதுவும் செய்திடலை! இனிமே ஒண்ணும் ப்ரச்னை இருக்காது... பயப்பட வேண்டாம்! அப்ப நான் கிளம்பறேன்.''

''சக்தி! நான் இன்னிக்கு நைட் கிளம்பறேன். மாமா மதியமே கிளம்பிப் போயிட்டாங்க... நாளைக்கு மதியம் சிபிக்கு சர்ஜரி... ஞாபகம் இருக்கில்லே?''

''ம்... இருக்கு! நான் நைட் அங்கிள் கிட்டயும் அபிகிட்டயும் பேசிடறேன்... வரேன் இளங்கோ.''

விடைபெற்றுக் கிளம்பியபோது, முதன் முறையாக வாசலுக்கு வந்து வழியனுப்பிய ரஞ்சனியின் முகத்தில், பெரும் சோகம் தெரிந்தது.

சிபியின் நினைவுகள், சக்தியை மௌனமாக்கின.

## 11

இரவு, அபியின் தந்தையிடம் பேசியபோது, அவர் சிபியின் கேஸில், தொண்ணூறு சதவிகிதம் வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கூறினார்.

தனிமையில் சிபியைப் பற்றி யோசித்தபோது, பெரிய நீர்த்தேக்கத்தைப் பயமின்றிக்

கடக்கும் பறவை ஒன்று, சில மழைத் துளிகளுக்கு நடுங்கிக் குறுகிச் சிலிர்ப்பது போல், நெஞ்சம் அவன் நினைவில் குலுங்கியது.

மறுநாள் காலையிலேயே, வாந்தி பேதி என்று சில குழந்தைகள் வந்துவிட்டனர்.

உடனே ட்ரிப்ஸ் ஏற்றி சரி செய்து மாலையில் அனுப்பியபோது இளங்கோவிடமிருந்து போன் வந்தது.

சிபிக்கு ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்ததாக அவன் கூறியவுடனே மனதில் மகிழ்ச்சிப் பூக்கள் இதழ் விரித்தன.

தெய்வத்திடம் நன்றி கூறினாள் சக்தி!

மறுநாளிலிருந்து, தினமும் அபியும் இளங்கோவும் போனில் பேசினாலும், சிபியின் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தது, மனது!

மெல்ல, மெல்ல சிபியிடம் தெரிந்த மாற்றங்களைக் கூறினான் இளங்கோ.

அன்று, ''சக்தி! இன்னிக்கு சிபி எங்க எல்லாரையும் புரிஞ்சிட்ட மாதிரி, லேசா சிரிக்க ஆரம்பிச்சிருக்கான்... ஆனா இன்னும் யார்கிட்டயும் பேசலை! இதுவே பெரிய முன்னேற்றம்தானே? உங்களைப் பாத்தவுடனே எப்படி ரியாக்ட் பண்றான்னு பாக்கணும்... இன்னும் பதினைஞ்சு இருபது நாளிலே அங்கே அழைச்சிட்டு வந்திடுவோம்! நான் மட்டும் ரெண்டு நாளிலே அங்கே வந்திடுவேன்'' என்று வைத்தான்.

காற்றில் பறக்கும் சிறு சிறகாய், சக்தியின் மனம் அலை பாய்ந்தது.



வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்டு வாசலுக்குச் சென்றால், ரஞ்சனி மலர்ந்த முகத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

சக்தியைக் கண்டதும், ''அண்ணாவுக்கு எல்லாரையும் அடையாளம் தெரிஞ்சுதாம்! எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா சக்தி! தேங்க் யூ!'' என்றாள் பரவசத்துடன்.

''ரஞ்சனி!... எனக்கு சொல்லாதீங்க! ஆபரேஷன் பண்ணின அந்த டாக்டருக்கு.. அப்புறம் கடவுளுக்கு...! நம்ம பிரார்த்தனைக்கு செவி சாய்ச்சாரே, அதுக்கு முதல்லே நன்றி சொல்லணும்'' என்றாள் மென் குரலில்.

''ஆனா நீங்கதானே எல்லா ஏற்பாடும் செஞ்சது? இதுக்கு மூல காரணம் நீங்கதானே..?''

''ஆமாம் ரஞ்சனி... நான்தானே எல்லாத்துக்கும்... உங்க அண்ணாவுக்கு ஆக்சிடெண்ட் நடந்ததுக்கும், மூல காரணமா இருந்தவ! அதை நான்தானே சரி செஞ்சாகணும்... அதான் அபியோட அப்பா மூலமா இதெல்லாம் செஞ்சேன்! உங்கண்ணா சரியாகணும்... அதுதான் எனக்கு வேணும்!'' வறண்ட குரலில் கூறினாள்.

உடனே முகம் சுருங்கிவிட, ''நான் பேசினதை மறந்திட்டேன்னு சொன்னீங்க... ஆனா மறக்கலை இல்லை...?'' தவிப்புடன் வந்தது அவள் குரல்.

''ரஞ்சனி... நான் அந்த அர்த்தத்துல சொல்லலை... உண்மையாவே நான் அதெல்லாம் நினைக்கறதேயில்லை.. நம்புங்க! உங்கண்ணா முழுசா சரியாகணும்னு மட்டும் வேண்டிக்கங்க!''

அப்போது விசாலம் அங்கு வர, ரஞ்சனியை அறிமுகப் படுத்தினாள்.

குழந்தையைப் பற்றி விசாரித்தவர், சிபியைப் பற்றி அவள் கூறவும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

''உள்ளே வாம்மா... எல்லார் ப்ரார்த்தனையும் வீண் போகலை.. அந்த ஆண்டவன் தான் உங்கண்ணனை முழுசா குணப்படுத்தணும்'' என்றபடி ரஞ்சனியை அழைத்துச் சென்றார்.

அவர் பால், பழம் கொடுத்து அவளை உபசரித்த போதுதான், சக்திக்கு தனாவின் ஞாபகம் வந்தது.

''குழந்தை எங்கே ரஞ்சனி? யார்கிட்ட விட்டுட்டு வந்திருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''எங்க மாமனார், மாமியார் வந்திருக்காங்க... அவங்க கிட்டே விட்டுட்டு வந்திருக்கேன்... அப்பதான் தூங்க ஆரம்பிச்சான்... முழிக்கறதுக்கு எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும்... அதான் வந்தேன் சக்தி! எனக்கென் னவோ, உடனே அண்ணாவைப் பத்தி உங்ககிட்ட சொல்லணும்னு தோணிச்சி'' கண்களில் ஆர்வ மின்னலுடன் கூறினாள்.

''சரி... குழந்தை அழப் போறான்... நீங்க கிளம்புங்க ரஞ்சனி.''

சக்தி கூறியவுடனே கிளம்பியவள், ''நீங்க ஒரு நாள் சக்தியோட நம்ம வீட்டுக்குக் கட்டாயம் வாங்கம்மா'' என்றபடி விசாலத்திடம் விடைபெற்றாள்.

பிறகு, காரில் ஏறும்போது, ஒரு கணம் தயங்கி நின்றாள்.

''நான் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன் சக்தி... ஆனா, என் அண்ணியா நீங்க எங்களோட வீட்டுக்கு வந்தா, நான் இன்னும் சந்தோஷப்படுவேன்..'' மெல்லிய



குரலில் கூறியபடி, அவளுடைய கைகளைப் பிடித்து அழுத்திவிட்டுக் கிளம்பினாள் ரஞ்சனி.

திடீரென்று, உணர்வுகள் அவளுக்குள்ளேயே பதறி ஓடும் பறவையாய் சடசடத்தன.

அந்தக் கிராமத்தை சுகமாய் சுவாசித்த மனது, இப்போது காதலையும் மூச்சுக் காற்றாய் நெஞ்சுக்குள் நிரப்ப ஆரம்பித்திருப்பது, சக்திக்கு புரிந்தது.

* * *

**நா**ட்கள் கடுகிச் செல்ல, 'நீ விட்டுச் சென்ற சோகச் சுமைகளுடன், தனிமையையும் சுமந்தபடி என் மனம் உனக்காகக் காத்திருக்கிறது' என்று சிபியிடம் மானசீகமாகக் கூறியது நெஞ்சம்!

நாளை சிபியுடன் கிளம்பி ஊருக்கு வரப் போவதாக, இளங்கோ போன் செய்திருந்ததால், அபியிடம் பேசினாள் சக்தி.

''அபி! அங்கே சிபி எப்படி இருக்காரு...? இம்ப்ரூவ் மெண்ட் ஏதும் இருக்கா? ட்ரெய்ன்லே வரதினாலே எதுவும் ப்ராப்ளம் இல்லையே?''

''இப்போ சிபி நல்லாருக்கார் சக்தி! முன்னே மாதிரி இல்லாம கண்கள்லேயே ஒரு தெளிவு இருக்கு... பாத்தவுடனே யாருன்னு உணர்ந்து சிலரை அடையாளம் கண்டுக்கற அளவு மாறியிருக்கார்... மெடிசன்ஸ் குடுத் திருக்காங்க! பதினைஞ்சு நாளுக்கு ஒரு தடவை இன் ஜெக்‌ஷன் ஒண்ணு போடச் சொல்லி இருக்காங்க... சில நினைவுகள் உடனே வரலாமாம்... சிலது மெதுவாகத்தான் வரும்னு சொல்றாங்க... பாப்போம்..

''எப்படியும் கூடிய சீக்கிரம் நல்ல ரிசல்ட் கிடைக்கும்... கொஞ்ச நாளிலே தன் வேலையைத் தானே பாத்துக்கற அளவுக்கு மாறிடுவாருன்னு அப்பா சொன்னாங்க... பாசிடிவ்வாகவே திங்க் பண்ணலாமே... நல்லதே நடக்கும்னு எதிர்பார்த்து வெயிட் பண்ணுவோம்! ஏன்டி குரல் ஒரு மாதிரி இருக்கு?'' என்று விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லை... சும்மா கோல்ட் பிடிச்சிருக்கு... அங்கிள் கிட்ட நான் ரொம்பத் தேங்க்ஸ் சொன்னேன்னு சொல்லுடி... பை அபி!'' வைத்தபோது, நாளை சிபி வருகிறானென்ற விஷயமே இனிமையாய்!

மழையரசனின் வருகைக்காக விழி விரித்துக் காத்திருக்கும் மயிலரசியைப் போல், மனம் உற்சாகமாய் தோகை விரித்தது.

அவன் வருகின்ற வழியிலேயே விழி வைத்து ஒரு தேடலுடன் காத்திருப்பது கூட, பெரும் சுகமாய்!!

பிரிவு, அவன் நேசத்தை வலிமையுடன் உணர்த்த, காதலின் அருமை தாமதமாகப் புரிந்து, அவள் தன் உயிரின் வேரினைத் தொலைத்துத் தேட ஆரம்பித்தாள்.

◆ ◆ ◆

மறுநாள் காலையிலேயே எழுந்து, தலை குளித்துவிட்டு, கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து விட்டுத் திரும்பி வந்தபோது, வாசலில் காருடன் இளங்கோ காத்திருந்தான்.

''சக்தி! ஒரு பத்து நிமிஷம் வீட்டுக்கு வந்திட்டுப் போக முடியுமா? மாமா, அத்தை, ரஞ்சனி எல்லாரும் உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்காங்க.''



''உள்ளே வாங்க இளங்கோ... டிபன் சாப்பிட்டுட்டுப் போகலாம்'' என்று அவள் அழைத்தபோது, ''இன்னிக்கு உங்களுக்கும் அங்கேதான் டிபன்... வாங்க!'' என்று காத்திருந்து அழைத்துச் சென்றான்.

மனம் படபடக்க அவனுடன் கிளம்பியபோது, சிபி தன்னை அடையாளம் தெரிந்து கொள்வானா என்ற தவிப்பு மனம் முழுவதும் பரவி, ஆழமாய் இம்சை செய்தது.

டீன் ஏஜில் கூட இப்படி நெஞ்சம் படபடத்து, அடி வயிற்றில் பட்டாம்பூச்சிகள் சிறகடித்ததில்லையே... இருபத்து மூன்று வயதில் இதென்ன புதிதாய் ஒரு நரக வேதனை என்று செல்லமாய் முனகியது மனது!

வாசலில் இறங்கியதும், ஆழ்ந்த மூச்சுக்களை இழுத்து தன்னை அமைதிப்படுத்தி உள்ளே சென்றவளை, மூவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சிபியின் அறைக்குள் செல்லும்போதே, ஏனோ இதயம் பலமாய் முரசு கொட்ட ஆரம்பித்தது.

அறையின் ஜன்னலோரம் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி, தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தவனிடம் சென்ற இளங்கோ, ''சிபி! யார் வந்திருக்காங்க பாரு!'' என்றான் உற்சாகத்துடன்!

மறுகணமே உயர்ந்தவனின் விழிகள் சக்தியின் மீது பதிய உள்ளத்தில் உணர்வுகள் தளிர்களாகத் துளிர்த்து, நினைவுப் பூக்கள் மலர்ந்தன.

அந்த அனுபவத்தை உள் வாங்குவதற்காக அவன் கண்களை மூட, மெல்லத் திறக்க ஆரம்பித்த மனக் கதவின் முதல் பிரவேசமாக அவள் உருவம்!

''சக்தி...'' இதயம் மெலிதாக உச்சரித்தது அவள் பெயரை!

வண்ணக் கனவுகளாய், காட்சிகள் மனதில் தடம் பதித்தன.

முதன் முதலில், ஒரு மழை நாளின் மாலை நேரத்தில், அழகிய பட்டுப் பாவாடை தாவணியணிந்து காதில் ஊஞ்சலாடிய தங்க வளையங்களுடன் ஒரு இளவரசியைப் போல், பூஜைக் கூடையுடன் அழகிய புன்னகையையும் சுமந்து, கால் கொலுசுகள் மெலிதாய்த் தாளமிட, கோவிலுக்குச் செல்வதற்காக அவள் தன் வீட்டு வாசலைக் கடந்தபோது... அவளை தரிசித்த அந்த முதல் நிமிடம்!

இவள் எனக்கெனவே பிறந்தவள் என்ற ஆத்மார்த்த உணர்வை ஏற்படுத்திய அந்த இனிய தருணம், இன்று நிகழ்ந்தது போல்..!

எந்தப் பெண்ணும் இதுவரை அவனை சலனப்படுத்தியதில்லை... கவர்ந்து ஈர்த்ததில்லை... இமை கொட்டாமல் பார்க்க வைத்ததுமில்லை!

முதல் பார்வையிலேயே அவள், காதலையும், கவிதையையும் தன்னுள் அறிமுகப்படுத்தியதை, சிலிர்ப்புடன் நினைவு கூர்ந்தது மனது!

***என் சக்கரவர்த்தினியே...***
***இன்று...***
***நீ நடந்து சென்றது***
***அந்தக் காதல் பாதையில்!***
***ஆனால்...***
***கடத்திச் சென்றதோ***
***என் இதயத்தை!***

அவன் கண் மூடி ஞாபகங்களை வரிசைப்படுத்த, ஒரு யோகியைப் போல விழி மூடி இருந்தவனையே பார்த்து



நின்ற சக்திக்கோ, மனம் உடைந்து முகம் வெளிறிப் போனது.

அவன் மீண்டும் கண்களைத் திறந்தான்.

எதிரில் நின்ற சக்தியின் உருவம், முன்பு அவளின் புறக்கணிப்பை நினைவுக்குத் தர, உடனே திரும்பித் தோட்டத்தில் தன் பார்வையைப் பதித்தான் சிபி!

* * *

**ஐ**ந்து பேரும் அதிர்ச்சியின் பிடியில் உறைந்து நிற்க, முதலில் தெளிந்தான் இளங்கோ!

''சக்தி! பழைய மாதிரியே இனிமேயும் நீங்க தினமும் சாயந்திரத்திலே வந்து சிபியப் பாத்துட்டுப் போகணும்'' என்றான் யோசனையுடன்!

''ம்... வரேன் இளங்கோ... நான் கிளம்பறேன்மா.''

கம்மிய குரலில் கூறிவிட்டு வேகமாக அவள் வெளியேற, ''சாப்பிட்டுட்டுப் போம்மா!'' என்றார் மணிமேகலை.

மறுக்க முடியாமல், பெயருக்குக் கொறித்து விட்டு விடைபெற்றபோது, அவள் சென்றவுடனே ரஞ்சனியின் குரல் தழுதழுத்தது.

''ஏங்க.. சக்தியத்தான் அண்ணாவுக்கு நல்லாத் தெரியுமே... அவங்களை அடையாளம் தெரிஞ்சுட்டு, கொஞ்சம் கொஞ்சமா மாறுவாருன்னு நான் ஆசையோட எதிர்பாத்துட்டிருந்தேன்... ஏன் இப்படி?'' அழ ஆரம்பித்தாள்.

இளங்கோவுக்குள்ளும் பெரும் குழப்பம்!

''சரி! அழாதே ரஞ்சனி... உடனே உணர்ச்சி வசப்படாதே... பாப்போம்'' அவளைச் சமாதானப்படுத்தினான்.

மணிமேகலையும் தன் கணவரிடம் இதைப் பற்றியே தான் புலம்பிக் கொண்டிருந்தார்!

மனைவிக்கு ஆறுதல் கூறினார் வீரபாண்டியன்.

''எது நடந்ததோ அது நல்லாவே நடந்தது இல்லையா? அது போல எது நடக்கப் போகுதோ, அதுவும் கீதையோட மொழிகள் மாதிரி நல்லாவே நடக்கும்...

''இந்த அளவுக்கு அவன் மாறி இருக்கானேன்னு சந்தோஷப்படணும் மணி! இதென்ன மேஜிக்கா... ஒரு நிமிஷத்திலே எல்லாமே மாறிடறதுக்கு..! இத்தனை நாள் பொறுத்தே... இன்னும் கொஞ்ச நாள் அமைதியா இருக்கணும்'' என்றார்.

ஆனாலும் அவர் மனதிலும் பெரும் எதிர்பார்ப்புகளும், சஞ்சலங்களும் புதிதாய் குடி வந்திருந்தன.

## 12

சிபியைப் பார்த்துவிட்டுத் திரும்பிய சக்திக்குத் தான், எப்படி உணர்கிறோமென்றே புரியாத ஒரு தவிப்பு நிலை!

இந்த நிமிடம் அவன் கேட்டால், தன் உயிரைக் கூடத் தரத் தயாராக மனம் மாறியிருந்த நிலையில், அவன் புறக்கணிப்பு பேதலிக்கச் செய்வதாய்...!

தீர்ப்புகள் திருத்தப்படுமோவெனக் காத்திருக்கும் நிரபராதியாய், அவள்!

வீட்டிற்கு வந்தவுடனே, சிபியைப் பற்றி அவளிடம் ஆர்வத்துடன் விசாரித்தார் விசாலம்.



''எப்படிம்மா இருக்கு அந்தப் பையனுக்கு? சரியாயிடுமா சக்தி... பாவம் அவரைப் பெத்தவங்க... ஒரே பையன் வேற... எப்படித் தவிச்சிட்டிருப்பாங்க!'' என்றபடி டிபனை எடுத்து வைக்கச் சென்றார்.

நெருஞ்சி முள்ளாய்க் கீறிய அவன் நினைவுகள், மனதில் ரணங்களை ஏற்படுத்த, சாப்பிட்டு விட்டதாகக் கூறிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

அன்று மருத்துவமனையில் நிறைய நோயாளிகள் காத்திருக்க, ஒவ்வொருவராகப் பார்த்து அனுப்பிய பிறகும், ஏனோ சாப்பிடவே மனமில்லை.

சிபி, ஏன் இப்படி நடந்து கொண்டான் என்ற கேள்விக்கு, விடை தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

முன்பு தன்னை உயிராய் விரும்பியவனுக்கு, இப்போது தன் நினைவே இல்லாதிருப்பது, உயிர் வலியாய்...!

இப்படித்தானே, அவனும் தன் பாராமுகத்தினால் தவித்திருப்பான் என்ற உண்மை, சிலுவையாய் மனதிலறையத் துவண்டு போனாள் அவள்.

மாலையில், வீட்டிற்கு வந்து காற்றாட வெளியே ஊஞ்சலில் அமர்ந்து கண்மூடி இருந்தபோது, வாசலில் வேலிப் படல் திறக்கப்படும் சப்தம் கேட்டது.

யாரென்று நிமிர்ந்தால், அங்கு செவந்தி வந்து கொண்டிருந்தாள்.

சக்தியினருகில் வந்ததும், வாயை மூடிக் கொண்டு செவந்தி அழ ஆரம்பிக்கவும், அவள் பதட்டத்துடன் எழுந்தாள்.

''என்ன செவந்தி... ஏன் அழறே...? அதுவும் இந்த மாதிரி நேரத்திலே...!'' எனும் போதே விசாலமும் வந்துவிட்டார்.

சிறிது நேரம் எந்த பதிலும் பேசாமல் அழுதவள், ''அம்மா... என் புருஷனுக்கு, வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் செய்யறதுக்கு அவங்க வீட்டில ஏற்பாடு பண்றாங்க'' கூறிவிட்டு அவள் குமுறியபோது, மனம் ஒரு கணம் ஆடிப்போனது.

''என்ன சொல்றே செவந்தி? நீ இப்படி ப்ரெக்னென்டா இருக்கறப்போ... ஏன் இப்படி?'' அவளுடைய மனக் குமுறல்கள் வார்த்தைகளாயின.

''எங்க பக்கம் இது வழக்கம்தான்னு சொல்றாங்க... அண்ணன் செத்துட்டா தம்பிக்கே அந்தப் பொண்ணை கல்யாணம் செஞ்சி வச்சிடறது... ஏன்னா குழந்தை இருக்கே... சொத்து வேறப் பக்கம் போயிடக் கூடாதுன்னு...

''அப்புறமா, அந்தாளுக்கும் வேற கல்யாணம் செஞ்சிடு வாங்க... இரண்டு குடும்பத்தையும் அவருதான் பாத்துக் கணும்... இப்ப அது மாதிரி ஆயிடுச்சி என் வாழ்க்கையும்!'' கண்ணீருடன் கூறினாள்.

''செவந்தி! முதல்லே கண்ணைத் துடை! இது மாதிரி முழுகாம இருக்கறப்ப, இப்படி எல்லாம் அழக்கூடாது... அது குழந்தையைத்தான் பாதிக்கும்! தைரியமா இரு! நான் சக்தியை விட்டு உன் புருஷன்கிட்டப் பேசச் சொல்றேன்'' விசாலம் ஆறுதல் கூறி அவளை அனுப்பி வைத்தார்.

சக்தியின் மனம் கனத்துப் போனது.

மருதுவை ஒரு உயர்ந்த மனிதனாய், ஒரு விதவைக்கு வாழ்வளித்த நல்லவனாய் உருவகப்படுத்தியிருந்த மனது, அந்தப் பொய்ப்பூச்சு உதிர்ந்து சிதறிவிடக் கோபத்தில் தத்தளித்தது.



பொதுவாகக் கணவன் உயிரோடு இருந்தவரை சபையில் முன் நிறுத்தப்படுபவர்கள், அவன் இறந்தபிறகு, சபை யோரங்களில் சங்கடப்படுத்தப்படுவதைத் தன் தாயின் விஷயத்திலேயே அவள் பார்த்திருக்கிறாள்.

சமூகத்தில், இவர்கள் நன்றாக வாழ்ந்து, பிறகு வீழ்ந்த வெண்ணிற விரக்திப் பூக்களோ என்றும், நெருடலாய் மனதின் மையத்தில் ஒரு கேள்வி எழும்.

ஏன் இப்படி...? ஒரு பெண்ணின் உணர்வுகளுக்கு இந்தச் சமுதாயம் என்றுமே மதிப்புக் கொடுப்பதில்லையே...? ஆண் மட்டும், மனைவி இறந்த உடனே புது மாப்பிள்ளையாய் விசுவரூபமெடுக்கிறான்... பெண்கள் தனிமைச் சிறைக்குள் ஏன் அடைக்கப்படுகிறார்கள்...?''

மனதில் பல கேள்விகள் எழ, இந்த விஷயத்தில் செவந்திக்கு எந்த வகையிலாவது தான் உதவ வேண்டும் என்ற உறுதியுடன் சென்று படுக்கையில் சாய்ந்தாள்.

உறக்கம் வராமல் அருகிலிருந்த புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தபோது, சிறிது நேரத்திலேயே தூக்கம் வந்துவிட்டது.

ஆழ்ந்த உறக்கத்தில் நெஞ்சின் மேல் கவிழ்ந்து அமர்ந் திருந்த புத்தகமும், அவளுடைய இதயத் துடிப்பால் அதிர்ந்து, மூச்சு விட்டுக் கொண்டிருந்தது.

விளக்கெரிவது கண்டு அறைக்குள் வந்த விசாலம், புன்னகையுடன் அந்தப் புத்தகத்தை எடுத்து வைத்துவிட்டு, இதமாகப் போர்த்திய பிறகு, சக்தியின் முன் நெற்றியில் மெதுவாக முத்தமிட்டார்.

அன்றுதான், முதன் முதலாக சக்தியின் கனவுகளில் சிபியின் வரவு தெரிய ஆரம்பித்திருந்தது.

அவனுடன் இணைந்து மலர்கள் மலர்கின்ற அழகையும், புற்களில் சிந்தும் பனித்துளிகளின் ஓசையையும், பறவை களின் கச்சேரியையும், மரங்களின் சுவாசச் சீறலையும் ரசிக்க ஆரம்பித்திருந்தபோதுதான், சில்லென்று நெற்றியில் பதிந்த ஒரு உணர்வு அவளைப் பதறி விழிக்கச் செய்து, அந்தக் கனவினைக் கலைத்தது.

''சிபி...''

செல்லச் சிலுங்கலுடன், கண் விழித்தாள் சக்தி.

தன்னைக் கண்டதும் வேகமாக எழுந்தவளிடம், ''என் னம்மா... ஏதாவது கெட்ட கனவு கண்டியா?'' யோசனை யாகக் கேட்டார் விசாலம்.

''இல்லம்மா... நல்ல கனவு தான்!'' உதடுகளில் உறைந்த உறக்கப் புன்னகையுடன் கூறிவிட்டு, திரும்பவும் படுத்து உறக்கத்தைத் தழுவினாள் அவள்.

அதற்குப் பிறகு விசாலத்திற்குத்தான் உறக்கம் தொலைந்து போனது.

* * *

மறுநாள், மதியம் நோயாளிகள் இல்லாத நேரமாகப் பார்த்து சக்தி மருதுவை அழைத்தாள்.

''மருது... ஒரு டாக்டரா இல்லாம, ஒரு சாதாரணப் பெண்ணா, இப்ப நான் உங்களோடப் பேசறேன்... கேப்பீங்களா?''

''செவந்தி தன்னோட வாழ்க்கையைப் பத்தி சொன்னப்ப, நான் உங்களை நினைச்சி ரொம்பப் பெருமைப்பட்டேன். ஆனா இப்ப ரொம்பக் கஷ்டமா இருக்கு... இதுக்கு நீங்க



அவளுக்கு வாழ்க்கை கொடுக்காமலேயே இருந்திருக் கலாம்...

''சில பெரியவங்க, தங்களுக்குள்ளேயே ஒரு சமூகக் கட்டுப்பாடு... மூட நம்பிக்கை இப்படின்னு சிலதை வகுத்துக்கிட்டு, அதிலே இருந்து வெளிவர முடியாம தான் செய்யறதெல்லாம் நியாயப்படுத்தற மாதிரி, நீங்களும் செய்யப் போறீங்களா?

''இதிலே உங்களுக்கு சம்மதமான்னு எனக்குத் தெரியாது... ஆனா, உங்க குடும்பத்தில பண்ணப் போற காரியம் தப்புன்னு மட்டும் தெரியுது! நான் யாரு இதக் கேக்கறதுக் குன்னு நீங்க நினைக்கலாம்...

''நான் யாரோ ஒருத்திதான்! ஆனா, கண்ணெதிரே நடக்கிற அநியாயத்தைத் தட்டிக் கேக்காம என்னால இருக்க முடியலை... ஏன்னா, எனக்கு உங்க ரெண்டு பேரையுமே நல்லாத் தெரியும்! அவ கர்ப்பமா வேற இருக்கா! யோசிச்சு நல்ல முடிவா எடுங்க... உங்க அப்பா அம்மாவோடப் பேசுங்க'' என்றாள்.

தர்மசங்கடமான முகத்துடன், மௌனமாக விடைபெற்றுச் சென்றான் மருது.

அன்று சிபியின் வீட்டிற்குச் சென்றபோது, இளங்கோ அப்போதுதான் வந்திருந்தான்.

அவளிடம், ''சக்தி... சிபி இன்னிக்குக் காலையில, தனா விளையாடறதையே ரசிச்சுப் பாத்துட்டிருந்தான்... கொஞ்சம் கொஞ்சமா, நார்மலாயிடுவான்னு நினைக்கிறேன். நேத்து நீங்க வந்துட்டுப் போனதிலிருந்து, அவன்கிட்டே ஏதோ ஒரு மாற்றம்...

''அந்தக் கண்கள்லே பழைய ஒளி திரும்பின மாதிரி எனக்குத் தோணுது... வந்து பாருங்களேன்'' உற்சாகத்துடன் அழைத்தான்.

செல்லும்போதே அவனிடம் செவந்தியின் பிரச்னையைப் பற்றிக் கூறினாள் சக்தி.

''இதிலே தலையிட்டு நீங்க ஏதாவது செய்ய முடியுமா?'' என்றபோது வருத்தத்துடன் வந்தது அவள் குரல்.

ஒரு நிமிடம் யோசனையுடன் நின்றவன். ''ம்... அவங்க அப்பா, நம்ம பேக்டரியிலதான் வேலை செய்யறாரு... அவர்கிட்ட வேணும்னா இதப் பத்திப் பேசித் தடுத்து நிறுத்தலாம்... இல்லை! நான் மாமாவை விட்டுப் பேசச் சொல்றேன்'' என்றபடி சிபியின் அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே, மென்மையான பழைய தமிழ்ப் பாடலொன்று மெல்லக் கசிந்து கொண்டிருந்தது.

சக்தி நுழைந்ததுமே, அவளையே கூர்ந்த சிபியின் விழிகளில் அசாத்தியக் கூர்மை!

ஆனால் அவனுடைய இதயம் மட்டும் பேசியது!

***என்னை சரிப்பதற்கு***
***உன் பார்வை மட்டும்***
***போதும் பெண்ணே!***
***அதில் ஏன்...***
***மையெனும்***
***விஷம் தடவிக்***
***கொல்கிறாய்...?***



அவனருகில் அமர்ந்தவள், ''ஹாய் சிபி... எப்படி இருக்கீங்க?'' என்றபடி அவனுடைய நாடித்துடிப்பைப் பரிசோதித்தாள்.

அந்த முதல் தீண்டல், சிபியின் இதய ஆழம் வரை சென்று பதிந்தது.

அவளை யாரென்றே அறியாதவன் போல், இமைக்காமல் பார்த்திருந்தவனிடம், என்ன பேசுவதென்றே புரியவில்லை.

தொண்டைக்குள் வார்த்தைகள் அனிச்சையாய் சிக்கித் தடை பெற, மௌனமாய் அவள் அமர்ந்திருந்தபோது, அவன் பார்வை எங்கோ பதிந்து மனதில் காட்சிகள் விரிந்தன.

தான் அவளுக்காகவே தினமும் காத்திருந்ததும், பதிலுக்கு அவளுடைய அலட்சியமும் பாராமுகமும் நெஞ்சுக்குள் படர, ஒரு வேதனைப் புன்னகை உதடுகளில் நெளிந்தது.

அவன் பார்வை எங்கோ பதிந்ததையும், பிறகு கசப்பான முறுவலொன்று முகத்தில் வந்ததையும் கண்டதும், மனம் வறண்டுவிட உடனே எழுந்து வேகமாக வெளியே வந்தாள் சக்தி.

காலடியோசையில் கலைந்து திரும்பியவனின் மனதில், இனம் புரியா சோகம் தெரிய, விழிகள் ஏக்கத்துடன் அவளைத் தொடர்ந்தன.

தலை விண்ணென்று தெறிக்க சிபி கண்களை மூடி அப்படியே சாய்ந்து கொண்டான்.

ஆனால், அவனுடைய புறக்கணிப்பு, தீப்பொறியாய் உள்ளிறங்கி சக்தியின் மனக்காட்டில் உரச மூங்கில் காடாய் பற்றியெரிந்தன உணர்வுகள்.

## 13

**ச**க்தி வெளியே வந்தபோது, முன்னறையில் இளங்கோவும் ரஞ்சனியும் பேசிக் கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் ஆவலுடன் எழுந்து வந்தாள் ரஞ்சனி.

''சக்தி... அண்ணாவுக்கு இன்னைக்காவது உங்களை அடையாளம் தெரிஞ்சுதா?'' தணிந்த குரலில் கேட்டாள்.

''ம்.. தெரியலைன்னுதான் நினைக்கிறேன்... ஆனா உங்க எல்லாரையும் நல்லா அடையாளம் தெரிஞ்சிக்கிட்டதா அம்மா சொன்னாங்க... ரொம்ப சந்தோஷமா இருந்தது...!'' என்றவள், சிறிது நேரம் தனாவைக் கொஞ்சி விளையாடி விட்டுக் கிளம்பியபோது, சுய பச்சாதாபத்தில் தவித்தது நெஞ்சம்!

அந்த ஞாயிறன்று, செவந்தியும் மருதுவும் அவளைத் தேடி வீட்டிற்கே வந்திருந்தனர்.

அவளை வணங்கிய மருது, ''நீங்க சொன்னப்புறம், நானும் யோசிச்சிப் பாத்தேம்மா... பெரியய்யாவும் எங்கப்பாவைக் கூப்பிட்டுப் பேசினாங்களாம்... அரசாங்க வேலையில இருக்கறவங்க இரு தாரம் பண்ணிக்கறது தப்புன்னும் சொன்னாங்க...

''எங்க பக்கத்துல இது சகஜம்கிறதால, அப்ப தப்பாத் தெரியலை... ஆனா ஒரு பெண்ணோட வாழ்க்கையைக் கெடுத்துட்டு, இன்னொரு பெண்ணோட நிம்மதியா வாழ்ந்துட முடியாதுன்னும் அய்யா சொன்னாங்களாம்!

''உடனே அப்பா இந்த ஏற்பாட்டை நிறுத்திட்டாங்க... அம்மாவுக்குத் தான் கொஞ்சம் வருத்தம்... ஆனா ஒரு



பாவம் பண்ண இருந்த என்னைத் தடுத்திட்டீங்க... அதுக்கு நன்றி சொல்லிட்டுப் போகலாமின்னுதான் வந்தேன்...''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவன் கூற, செவந்தி கண்ணீருடன் கை கூப்பினாள்.

அவளுடைய கைகளைப் பிடித்த சக்தி, ''உடம்பைப் பாத்துக்க செவந்தி. கரெக்டா செக்கப்புக்கு வந்திடணும்! வேற ஒரு பொண்ணை வேலைக்கு ஏற்பாடு பண்ணிடு... நீ ரெஸ்ட் எடுத்துக்க!'' பரிவுடன் கூறினாள்.

விசாலம் இருவருக்கும் காபியும் டிபனும் கொடுக்க, சாப்பிட்டுவிட்டு அவர்கள் கிளம்பினர்.

''சக்தி எனக்கு இன்னிக்கு சந்துருவோட பேசணும் போல இருக்கு... பூத்தில போய் பேசிட்டு வரலாமா?'' என்று விசாலம் கேட்கவும் இருவரும் கிளம்பினர்.

சந்துரு அம்மாவிடம் பேசிவிட்டு அவளிடம் பேசும் போது,''சக்தி நான் ஆறு மாசத்தில அங்கே வருவேம்மா... நம்ம குலதெய்வம் கோவில்லே, வர்ஷினிக்கு மொட்டையடிச்சிக் காது குத்தணும்... உனக்கு ஏதாவது வேணும்னா சொல்லு... வாங்கி அனுப்பறேன்'' என்றான்.

''எனக்கு ஒண்ணும் வேண்டாண்ணா! அண்ணியையும், வர்ஷினியையும் விசாரிச்சேன்னு சொல்லு'' என்று கூறி வைத்தாள் அவள்.

பிறகு வந்த நாட்களில், எப்போதாவது சிபியின் வீட்டிற்குச் சென்றாலும் அவனுடைய உணர்ச்சிகளைத் துடைத்த ஊடுருவும் பார்வை மட்டும் அவளுக்கு பதிலாய்...!

பழைய விஷயங்களைப் பற்றி, இளங்கோவும் அவளும் பேசிக் கொள்ளும் நேரத்தில், அமைதியாக அமர்ந்திருந்தாலும், சிபியின் பார்வை அவளிடமே பதிந்திருக்கும்.

ஆனால் மனம் மட்டும் மௌனக் கவிதை சொல்லும்!

*மணலைக் குடையும்*
*மண் புழுவாய்...*
*என் மனதைக் குடைகிறது*
*உன் நினைவு!*
*உனைப் பார்த்த அந்த*
*மணித் துளிகள் மட்டும்*
*மறந்துவிட்டால்...*
*ஒரு வேளை...*
*என் மனச் சிறகின்*
*மௌன ஆர்ப்பரிப்பும்*
*மரித்து விடலாம்!*

சக்தி இயல்பாகத் திரும்பும்போது, சில சமயங்களில், குறும்பும், குறுகுறுப்பும், கேலியும் அவன் கண்களில் தெரிவதுபோலத் தோன்றினாலும், உடனே அது பொய்யோ என்பதுபோல் மறைந்தும் போகும்!

தன்னுடைய ஆழ் மனதின் ஏக்கங்களும், எதிர்பார்ப்புகளும், அதுபோன்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிறதோ என்று மனம், விரக்தியாய் அமைதியடையும்.

* * *

மூன்று மாதங்கள் காற்றைப் போல் விரைந்து செல்ல, சிபி இப்போதெல்லாம் தன் வேலைகளைத் தானே செய்து கொள்ளப் பழகி இருந்தான்.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, அவனுக்கு ஊசி போடச் செல்லும்போதெல்லாம் இன்றுவரை அவளைத் தெரிந்ததுபோல் அவன் நடந்து கொள்ளவும் இல்லை.. அவளிடம் பேசுவதும் இல்லை!



சக்திக்குத்தான், மனதிற்குள் பெரும் வேதனையாய்!

இந்த சமயத்தில்தான் அந்த ஊரில் அம்மன் கோவில் திருவிழா வந்தது.

திருவிழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்பே, பெரியவர் வீரபாண்டியனிடம், கமிட்டிக் குழுவினர், தர்மகர்த்தா என்ற முறையில் கலந்தாலோசித்தனர்.

''காப்பு கட்டுவது, யாகசாலை அமைப்பது, பந்தல் போடுவது, அம்மன் திருவீதியுலா புறப்படுவது, பூ அலங்காரம் என்று எல்லா விஷயங்களும் கலந்து பேசி முடிவெடுக்கப்பட்டன.

திருவிழாவிற்கென, இரு நாட்கள் பள்ளிவிடுமுறை விடத் திட்டமிடப்பட்டது.

சக்திக்கு இதெல்லாம் புதிதென்பதால், வியப்பாகவும் வித்தியாசமான ஒரு அனுபவமாகவும் இருந்தன.

ஆனால் மருதுவும் சாந்தியும் மட்டும் கவலையுடன் இருந்தனர்.

அவள் என்னவென்று விசாரித்தாள்.

திருவிழா சமயங்களில் இங்கு பரவும் வியாதிகளைப் பற்றியும் ப்ரச்னைகளையும் அவர்கள் பட்டியலிட, உடனே ஆனந்திற்குத் தொடர்பு கொண்டாள் சக்தி.

இதைப்பற்றி அவனிடம் பேசியபோது ''நானும் ஆரம்பத்தில் இந்த மாதிரி ஏரியாவுல வேலை பாத்திருக்கேன் சக்தி... சாதாரணமாவே இங்கே சுத்தம், சுகாதாரம் இதிலெல்லாம் இந்த மக்களுக்கு அவ்வளவா அக்கறை கிடையாது...

''அதுவும் திருவிழான்னு வந்துட்டா, உற்சாகத்துல கண்டதையும் சாப்பிட்டுட்டு கிடைச்ச தண்ணியக் குடிச்சி,

அப்புறம் எல்லா இன்ஃபெக்‌ஷனும் வந்து ஊரே வியாதிகள் பரவிடும்''. ஆனந்த் கவலையுடன் கூறினான்.

''ஒண்ணு வேணும்னா செய்யலாமா? இளங்கோ கிட்ட சொல்லி மினரல் வாட்டர் பாக்கெட்டுகளை, அங்கங்கே பூத் மாதிரி வைச்சு விநியோகிக்கச் சொல்லலாமா?''

''அது சரி! கண்ட எண்ணெயில் சுட்ட பலகாரங்கள்... ஈ மொய்த்த தின்பண்டங்கள், கலர் கலரா குளிர் பானங்கள்... அதுக்கெல்லாம் என்ன மாற்று ஏற்பாடு செய்ய முடியும்?'' ஆனந்த் கேட்டான்.

''அப்போ என்னதான் செய்யலாம் டாக்டர்?'' சக்தி ஆவலுடன் கேட்டாள்.

''ஒண்ணு செய்யலாம்... உங்க ஊரில இருந்து பெரிய மனுஷங்க யாராவது 'பப்ளிக் ஹெல்த் சர்வீஸஸ்'க்கு எழுதிக் கொடுத்தா, காலரா தடுப்பூசி முகாம் ஒண்ணு நடத்த ஏற்பாடு பண்ணலாம்...

''எங்களுக்கு ஆர்டர் வந்ததுன்னா, எங்க டீம் வந்து உங்களுக்கு உதவுவாங்க! இங்கே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தறது ரொம்பக் கஷ்டம் சக்தி! மக்கள் வாந்தி பேதியால பாதிக்கப்படும்போது, உப்பும் சக்கரையும் கலந்து காய்ச்சின தண்ணீரைக் குடிச்சா நல்லதுன்னா கேக்கமாட்டாங்க...

''கடைசியில, உடம்பில இருக்கிற தண்ணி சத்தெல்லாம் போய், சீரியஸானவுடனே தூக்கிட்டு வருவாங்க... எத்தனை பேருக்கு உங்க சென்டர்லே டிரிப்ஸ் ஏத்தி ட்ரீட்மெண்ட் பண்ண முடியும்... ஊர்ப் பெரியவங்களோடப் பேசிஏற்பாடு செய்ங்க... பை சக்தி!'' என்று வைத்தான்.



சாந்தியும் ''ஆமாம் டாக்டர்! சின்னப் பசங்கதான் இதிலே அதிகமா பாதிக்கப்படுவாங்க... ஏதாவது செய்யணும் மேடம்!'' கவலையுடன் கூறினாள்.

''சரி... நான் இதைப் பத்தி இன்னிக்கே பெரியவர்கிட்டே பேசிடறேன்'' சக்தி யோசனையுடன் கூறினாள்.

## 14

அன்று பெரியவரைச் சந்தித்து காலரா தடுப்பூசி முகாமைப் பற்றிப் பேசும்போது, அவரும் எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்வதாகக் கூறினார்.

''தேங்க்ஸ் டாக்டர்! எங்க ஊர் மக்கள் மேல இத்தனை அக்கறை எடுத்துக்கிட்டு என்னோட வந்து பேசினதுக்கு! நானும் ஒவ்வொரு முறையும் நினைப்பேன்... இந்த தடவை கட்டாயம் செஞ்சிடலாம்'' என்றார்.

அருகிலிருந்த மணிமேகலை, பொருள் விளங்காத ஒரு பார்வையுடன் அவளையே பார்த்திருக்க, ரஞ்சனி உள்ளிருந்து வந்தாள்.

''வாங்க சக்தி!'' என்றபடி, தனாவைப் பார்க்க உள்ளே அழைத்துச் சென்றாள்.

அப்போதுதான் எதிரே கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்த சிபியைப் பார்த்தாள் அவள்.

ஒரு கணம் சிலையெனச் சமைந்து நின்றவளின் மனதிற்குள், ஒரு சிறிய தேன் சிட்டு தன் சிறகுகளை விரித்துச் சடசடத்தது.

அவன் பார்வை அவள் மீதே நிலைத்திருக்க, மனம் மட்டும் பழைய ஞாபகங்களை மீட்டின.

*உன்னை நினைத்து*
*என்னை இழந்து...*
*சந்தோஷித்த*
*அந்த*
*தேவ நாட்களில்...*
*வேதனைகள் மட்டுமே*
*எனக்குள் அறிமுகம்!*
*தொலைந்து போனது...*
*என் இதயமும்...*
*உன் நேசமும்!*

ஒரு நொடியில் உலகையே சுற்றிவந்து, ஆயிரம் எண்ணங்களை சுமக்கும் வல்லமை படைத்த மனதின் நினைவுகள், சட்டெனத் தடை பெற்றன.

சக்தி மூச்செடுக்காமல் நின்று, அவனையே ஒரு எதிர் பார்ப்புடன் நோக்க, கூடவே வந்த ரஞ்சனியிடம் திரும்பியவன், அவள் யாரென்பது போல் கேள்வியுடன் பார்த்தான்.

''அண்ணா! இவங்கதான் டாக்டர் சக்தி! உங்களுக்கு ஞாபகமில்லை...? நீங்க குணமாகறதுக்குக் காரணமே இவங்கதான்!''

'இல்லை' என்பதுபோல மெலிதாகத் தலையசைத்தவன், ''சக்தி?'' புருவம் கேள்வியாக உயரக் கேட்டபோதுதான், அவளுடைய பெயருக்கே புது அர்த்தம் தொனித்தாற் போல்!

அவன் ''ஹலோ!'' என்றபோது, ஒருவரிடம் புதிதாய் அறிமுகம் செய்து கொள்ளும் விதமாக வருகின்ற சிறு முறுவல், அவன் உதடுகளிலும் இடம் பதித்தது.



ரஞ்சனிக்கு முதன் முதலாக அவன் பேசியது, பெரும் வரமாய்!

''அண்ணா! நீங்க பேசிட்டீங்க... சக்தி நீங்க பாத்துக்கங்க! நான் போய் அப்பாவையும், அம்மாவையும்...'' முடிக்காமலேயே உற்சாகத்துடன் ஓடிய ரஞ்சனியைப் பார்த்தபோது சக்திக்கும் பரவசமாய்...!

அவன் 'சக்தி!' என்றதுமே, என்ன செய்வதென்று புரியவில்லை.

சிறிதாய் உருமாறிப் பக்கத்திலிருந்த மீன் தொட்டிக்குள் அமிழ்ந்து உடனே அந்தத் தங்க மீன்களை மெல்ல முத்தமிட வேண்டும் போல் ஒரு ஆர்வம் எழுந்தது.

மகிழ்ச்சித் துள்ளலுடன் நிமிர்ந்தபோது, அவன் பார்வை கல்லூரி நாட்களை நினைவுபடுத்தின.

அதன் ஊடுருவும் தன்மையைத் தாங்க முடியாமல், தலைகுனிந்தாள் அவள்.

''வர்மா...!'' என்றபடி வேகமாக வந்து வீரபாண்டியன் அவனை அணைத்துக் கொள்ள, மணிமேகலை கண்ணீருடன் அவன் தோள்களில் சாய்ந்து கொண்டார்.

உடனே அவர்களிடம் விடைபெற்று வீட்டிற்கு வந்த போது, முதலில் சிபி தன்னைத் தெரியவில்லையெனத் தலையசைத்ததும், பிறகு அவளைத் திணறடித்த புன்னகையும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாய்...!

* * *

**பி**றகு எதைப் பற்றியும் யோசிக்கவிடாமல், திருவிழாவும் நெருங்கியது.

காலரா தடுப்பு முகாம் ஒன்று அமைக்கப்பட்டு, ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் தடுப்பூசிகள் போடப்பட்டன.

மூன்று நாட்களுக்கு முன்பே காப்பு கட்டி, ஊரே திருவிழா களை கட்ட ஆரம்பித்தது.

எங்கு திரும்பினாலும், கடைகள், குடை ராட்டினம், கரகாட்டம் என்று ஊரே அமர்க்களப்பட்டது.

திருவிழாவிற்கு முதல் நாள் அங்கங்கு பூத் அமைக்கப் பட்டு, தண்ணீர் பாக்கெட்டுகளும் சாப்பாட்டுப் பொட்ட லங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

அன்று மாலை யாகசாலையில் ஹோமம் நடக்க, விசாலமும் சக்தியும் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

ஊர்ப் பெரிய மனிதரென்பதால், முதல் மரியாதை செய்யப்பட்டு, வீரபாண்டியனின் குடும்பத்தினர் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர்.

சக்தியைக் கண்டதும், மணிமேகலை அவர்களைத் தன் அருகில் அமர அழைத்தபோதுதான், இருவருக்கும் நடுவில் பட்டு ஜிப்பா குர்தாவுடன், ஒரு ராஜகுமாரனைப் போல் கம்பீரத்துடன் அமர்ந்திருந்த சிபியைப் பார்த்தாள் சக்தி.

அந்த நிமிடம் அவன் பார்வையும் உயர, அவளிடம் எந்த உணர்ச்சியுமின்றிக் குவிந்த விழிகள், உடனே விலகின.

ரஞ்சனியின் அருகில் அமர்ந்து கொண்டவளுக்கு, பூஜை முடிந்து வீடு செல்லும்போது மனதில் எதுவோ ஒரு இனம்புரியாத நிறைவு!

மறுநாள் காலையில் ஊர் மக்கள் அனைவரும் பால் குடம் எடுத்து, பொங்கல் வைத்து வழிபட, எல்லாவற்றை யும் புது அனுபவமாய் ரசித்துக் கொண்டிருந்தாள் சக்தி.



பூஜைக்கு முன்பு பூரண கும்பமும் முதல் மரியாதையும் எப்போதும் போல் வீரபாண்டியனுக்குச் செய்வதற்காகப் பூசாரி வந்தபோது, அவர் தன் மகனை முன் நிறுத்தினார்.

அதை மென்மையாக மறுத்து, தன் தந்தைக்கே செய்யும்படிக் கூறிவிட்டு அவன் இயல்பாக ஒதுங்கினான்.

அவனுடைய பாசாங்கற்ற அந்த விலை மதிப்பில்லாத எளிமை, அவள் மனதைக் கவர்ந்திழுத்து, அவனிடம் அந்த நொடியே தஞ்சம் புகுந்தது மனது.

அன்று அவர்களுடன் சென்று அம்மனை மிக அருகில் தரிசித்தபோது, சக்திக்கு ஒரு வித சிலிர்ப்பும், இனிமையும் மனதில் இதமாய் கை கோர்த்தன.

அவனுடைய அருகாமை, காதலோடு கூடிய ஒரு விதப் பரசவத்தை அவளை சுற்றிப் பரவச் செய்தது.

## 15

**ச**ரிகைக் கரையிட்ட அழகிய சில்க் காட்டன் புடவையில், சக்தி உயிரோவியமாய் ரஞ்சனி யருகில் நிற்க, சிபி அவளிருந்த பக்கம் கூடத் திரும்பவில்லை.

கடமையே கண்ணாக, பூஜைகளில் தன் கவனத்தைச் செலுத்தியபடி ஒருவித மோன நிலையிலிருந்தான்.

மணிமேகலை பனித்த விழிகளுடன் சிபியையும் சக்தியை யும் மாறி மாறி நோக்கியபடி மனதிற்குள்ளாகவே இருவரின் ஜோடிப் பொருத்தத்தையும் ரசித்துக் கொண்டிருந்தார்.

பூஜை முடிந்து, பிரகாரத்தைச் சுற்றி வரும் போது, சிபி அவள் பக்கம் திரும்பியபோதும், அவனுடைய வெற்றுப் பார்வையே அவளை உரசியது.

பட்டு வேஷ்டி சட்டையுடன் மணமகனைப் போல் நின்றிருந்தவனைக் கண்டதும், ஒரு கணம் சக்தி விழியெடுக்க முடியாமல் நின்றாள்.

ஆனால், அவன் மனதிலோ விரக்தியும், விடை தெரியாக் கேள்வியும்!

***உன்***
***அக்னிப் பார்வைகளைக் கூட....***
***பொக்கிஷமாய் என்னுள்***
***சேமித்து வைத்திருக்கிறேனே!***
***நீ...***
***புதையலாய்***
***பாதுகாக்க வேண்டிய...***
***என்***
***மனதை மட்டும்...***
***வீதியோரம்***
***வீசிப் போனது***
***ஏன்...?***

அவனுடைய பார்வையின் பொருளறியாமல் தலை குனிந்து கொண்டாள் அவள்.

அன்று மாலை அம்மன் வீதியுலா நடக்க, மறுநாளும் பலவிதமான கலை நிகழ்ச்சிகளுடன், திருவிழா இனிதே முடிவடைந்தது.

ஊரில் ஒன்றிரண்டு பேர், அஜீரணம், வாந்தி, வயிற்றுப் போக்கு என்று வர, அவர்களுக்கு முதலுதவி செய்து நோய் பரவாமல் ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டது.

நாட்கள், பறவையாய் தன் சிறகு விரிக்க,சிபி இப்போது முழுதும் நார்மலாகி இருந்தான்.



இளங்கோவுடன் ஃபேக்டரிக்கும் சென்றுவர, ஆரம்பித்திருந்தான்.

சக்தியின் மனதிலோ, பெரும் மாற்றங்கள்!

எப்போதாவது, இளங்கோவுடன் சிபியைப் பார்க்கின்ற தருணங்களில் எல்லாம், மனம் கட்டவிழ்த்து அவனிடம் ஓடிச் செல்லும்.

'அவனிடமிருந்து குறுகுறுப்பாய் ஒரு பார்வை... இதமாய் ஒரு புன்னகை... சிலிர்ப்பாய் ஒரு அணைப்பு... மென்மையாய் ஒரு ரசனை' என்று மனம் எதிர்பார்ப்புடன் பட்டியலிட ஆரம்பித்து, தன் அன்பை அவனிடம் தெரிவிக்கச் சொல்லி, சில நேசக் கவிதைகளைக் கூடக் காற்றலைகளில் மிதக்க விடும்.

ஆனால், அதன் எதிரொலி சிறிதுகூட அவனிடம் தெரியாததால் நெஞ்சம் வாடிப் போய்விட, தீராத ஊடலாய் மனது ஏக்கத்தில் தவிக்க ஆரம்பிக்கும்.

நேராகவே அவனிடம் சென்று, 'நான் உன்னை விரும்புகிறேன்...' என்று கூற வேண்டும் போல் பரிதவிக்க ஆரம்பித்தாள் அவள்.

✱ ✱ ✱

அந்த வாரத்தில் ஒரு நாள் வீட்டிற்கு வரும் போதே, விசாலம் மகிழ்ச்சியுடன் அவளை வரவேற்றார்.

"சந்துரு கிட்டே இருந்து லெட்டர் வந்திருக்கு... சக்தி... அடுத்த வாரம் இந்தியாவுக்கு வரானாம்! நம்ம குல தெய்வம் கோவில்லே வர்ஷினிக்கு மொட்டையடிச்சிக் காது குத்த நல்ல நாள் பார்க்க சொல்லி எழுதியிருக்கான்" ஆர்வத்துடன் கூறினார்.

கடிதத்தைப் படித்துவிட்டு ''நாம ஏதாவது வாங்கணு மாம்மா?'' ஆவலுடன் கேட்டாள் சக்தி.

''ஆமாம்மா... நானே உன்னோட அதப்பத்திப் பேச ணும்னு நினைச்சேன்! பிறந்ததிலேருந்து அந்தக் குழந்தைக்கு நாம எதுவுமே செய்யலை... பட்டுப் பாவாடை, செயின், தோடு எல்லாம் வாங்கணும்... இங்கேயே வாங்கிடுவோமா?''

''வேணாம்மா... சென்னையிலேயே வாங்கிடலாம்... அங்க பேன்ஸியா இருக்கும்.''

அவரிடம் கூறிவிட்டு உள்ளே செல்லும்போதே, வெகு நாட்கள் கழித்து சந்துருவைப் பார்க்கப் போகிறொமென்ற பரவசம், மனதில் வந்தது.

ஒரு வாரம் வேகத்துடன் விரைய, காதணி விழாவிற்கு இரு தினங்கள் முன்பாகவே, விடுப்பு எடுத்துக் கொண்டு சக்தியும் விசாலமும் கிளம்பிச் சென்றனர்.

ரயிலில் சென்று சென்னையில் இறங்கியபோது, தான் இங்கு வந்து எத்தனை மாதங்களாகிவிட்டன என்ற உணர்வு சக்தியினுள் நிறைந்தது.

பல வருடங்களுக்குப் பிறகு சந்துருவைப் பார்க்கப் போகும் பரபரப்பு இருவரையும் தொற்றிக் கொள்ள, அவ ளுடைய சித்தப்பா மனோகரனின் வீட்டிற்குச் சென்றனர்.

பிறகு கடைக்குப் போய்விட்டு வந்து மதியம் சாப் பிட்டுவிட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

சித்தி அவளிடம் ''சக்தி... அதான் படிப்பை முடிச்சி நீ வேலைக்கும் போயாச்சு... அப்புறமென்ன... நிறைய வரன் வருது! இப்பவாவது கல்யாணத்துக்கு ஒத்துப்பியா?'' என்றார்.



''ம்... இப்ப வேணாம் சித்தி... கொஞ்ச நாள் போகட்டும்'' மெதுவாக அவள் கூறியபோது, வாசலில் கார் சப்தம் கேட்க, சந்துருவும் அவன் குடும்பமும் வருவது தெரிந்தது.

மனதில் அடக்கி வைத்திருந்த பாசம் பொங்கிப் பிரவகிக்க, அவனை ஓடிச் சென்று அணைத்துக் கொண்டார் விசாலம்.

அதுவரையில் புகைப்படத்தில் மட்டுமே பார்த்திருந்த சுகந்தியை ஆவலுடன் வரவேற்ற சக்தி, அவளிடமிருந்து வர்ஷினியைப் பாசத்துடன் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

''ஏய்... குட்டி வர்ஷினி எப்படி இருக்கே? நான் யார் தெரியுமா உனக்கு?''

அவளுடைய கன்னக் கதுப்பில் தன் மூக்கால் உரசிய படிக் கொஞ்சலாகக் கேட்ட சக்தியிடம், ''அத்தை!'' என்றாள் வர்ஷினி மழலையில்!

விழிகள் ஆச்சர்யத்தில் மின்ன, ''அண்ணா... இவளுக்கு என்னை அடையாளம் தெரியுது!'' வியப்புடன் கூறியவளை, அருகில் வந்து செல்லமாக அணைத்து கொண்டான் சந்துரு.

''உன்னையும் அம்மாவையும் போட்டோவுலக் காண்பிச்சு சொல்லிக் குடுத்திருக்கோமே! ம்... சாரி சக்தி... நான் சுயநலமா இருந்துட்டேன்னு நினைச்சிடாதே! அப்பா வோட கோபம்தான் என்னை உங்ககிட்டயிருந்து எல்லாம் விலக்கி வச்சிடுச்சி!

''எப்பவுமே அப்பாவுக்கும் எனக்கும் அவ்வளவா ஒத்துப் போனதில்லை இல்லையா...? அவர் இறந்தப்புறமும், அவரோட அலட்சியமும் கோபமும் ஆறாத வடுவா மனசிலப் பதிஞ்சிடுச்சு... அதான்!'' தர்மசங்கடத்துடன் மெல்லிய குரலில் கூறினான்.

''அண்ணா... எப்பவுமே ஒரே விஷயத்தில, ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு விதமான அபிப்பிராயம் இருக்கும்! அதே மாதிரிதான் உன் கல்யாண முடிவும்! உனக்கு அது சரியாப் பட்டுச்சு... ஆனா அப்பாவுக்கு அது தப்பாத் தோணியிருக்கு...

''ஆனா, வேற ஜாதிப் பொண்ணை நீ விரும்பிட்டேன்னு அப்பா ஒரு நாள் கூட ஜாதிப் ப்ரச்னைய இதுலே கொண்டு வந்ததில்லை... ஒரே பையனா இருந்து, அதுவும் படிச்சிட்டிருக்கும்போது, தங்கையும் வீட்டில் இருக்க, திடீர்னு எதைப்பத்தியும் கவலைப்படாம கல்யாணம் செஞ்சுக்கிட்டு மாமனார் வீட்டோடப் போய்த் தங்கினதுதான் தனக்கு ரொம்ப வருத்தம்னு, அப்பா என்கிட்டச் சொன்னாங்க...'' மெல்லிய குரலில் கூறினாள்.

''சாரி சக்தி.. நானும் இப்ப வாழ்க்கையப் புரிஞ்சிக்கிட்டேன். எனக்கும் ஒரு குழந்தை பிறந்து, அது நாம சொல்றதை எல்லாம் கேக்கணும்... அதோட வாழ்க்கையை, எதிர்காலத்தை நான்தான் தீர்மானிக்கணும்கற ஒரு ஆளுமை உணர்வு வரப்பத்தான், அப்பாவோட உணர்வுகள் புரிஞ்சுது.''

கம்மிய குரலில் அவன் வருந்தியபோது, ஆதரவுடன் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள் சக்தி.

வர்ஷினி இப்போது பாட்டியின் கையிலிருந்தாள்.

''சக்தி... இந்த தடவை ஒரு முடிவோடுதான் நான் வந்திருக்கேன்... உன் கல்யாணத்தை முடிச்சிட்டு, அம்மாவை நான் என்னோடவே அழைச்சிட்டுப் போகலாம்னு நினைக்கிறேன்... என்ன... மாப்பிள்ளை பாக்கலாமா?'' குறும்புடன் கேட்டான்.

''எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாண்ணா! நீ அம்மாவை அழைச்சிட்டுப் போ! அவங்களுக்கும் வர்ஷினியோட இருந்த மாதிரியும் இருக்கும்.''



''என்னம்மா... சக்தி சொல்றதைக் கேட்டீங்களா? எங்களோட வந்திடறீங்களா?'' எனும்போதே, சுகந்தியும், ''எங்க கூட வந்து இருங்கத்தை'' என்று அழைத்தாள்.

''இல்லம்மா... இப்ப வர முடியாது! சக்திக்குக் கல்யாணம் முடிஞ்சிடுச்சின்னா, அப்புறம் நான் நிம்மதியாக வருவேன்...''

''சரி! பாப்போம்... நான் ரெண்டு மாசம் இங்கேதானே இருக்கப் போறேன். அப்புறமா முடிவு பண்ணலாம்'' என்று முடித்தவன், அவர்களுக்கும், சித்தப்பா வீட்டிற்கும், வாங்கி வந்திருந்த பொருட்களையெல்லாம் எடுத்துக் கொடுத்தான்.

விசாலமும் தாங்கள் வாங்கியதை எல்லாம் காண்பிக்க, அங்கு மீண்டும் ஒரு இனிய உறவு மென் துளிர்விட்டு மலர்ந்தது.

சுகந்தி, அவளுக்கும், விசாலத்திற்கும் பட்டுப் புடவைகள் எடுத்திருந்தாள்.

எல்லோரும் பேசிக் கொண்டிருக்க, சக்தி யோசனையுடன் பின்புறம் சென்றபோது, ''நீ யாரையாவது விரும்பறியா சக்திம்மா...?'' திடீரென்று அருகில் சந்துருவின் குரல் கேட்க, ஒரு கணம் அவள் திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தாள்.

''ஏண்ணா... இப்படி திடீருன்னு கேக்கறே?'' குழப்பத்துடன் வந்தது அவள் குரல்.

''இல்லம்மா... காதலிக்கறது தப்பில்லை... அப்படி ஏதும் எண்ணம் மனசில இருந்தா பயப்படாம சொல்லு! அது யாரா இருந்தாலும், எவ்வளவு செலவானாலும் நான் முடிச்சி வைக்கிறேன்...'' கரிசனத்துடன் கேட்டான்.

உடனே நெகிழ்ந்து போனவளை சிபியின் நினைவுகள் தடுமாறச் செய்ய, 'இல்லை'யெனத் தலையசைத்து விட்டுக் கொல்லைப்புறம் சென்றாள்.

குளியலறைக்குள் நுழைந்து தனிமையை நாடியபோது, இன்று தன் விழி போடும் கடிதங்கள், சிபியுடைய மனத் தபால் பெட்டிக்குள் விழும் முன்பே நிராகரிக்கப்படுவதை எண்ணி, பிரளயம் மையம் கொண்டது மனதில்!

விழியோரங்கள் கசியத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு, முகத்தில் நீரடித்துக் கழுவிவிட்டு வெளியே வந்தாள்.

மறுநாள் காலையில் வர்ஷினியின் காதணிவிழா நிகழ்ச்சி இனிதாய் முடிவடைந்தது.

அன்று முழுவதும் வர்ஷினியுடனே சுற்றிக் கொண் டிருந்தவளுக்கு, பொழுது சுகமாகச் சென்றது.

மனதில் திடீரென்று அபியின் நினைவு வர, சக்தி அன்றிரவு அவளை சந்திக்கச் சென்றாள்.

அவளுடைய வீட்டிற்குச் சென்று, அவள் பெற்றோரிடம் பேசிய பிறகு இருவரும் அபியின் அறைக்குள் சென்றனர்.

அதுவரை அடக்கி வைத்திருந்த சக்தியின் உணர்வுகள், மௌனக் கரை உடைத்து வேகமாய் வெளிவந்தன.

அந்த ஊமை நெஞ்சின் ஓசைகள் வார்த்தைகளாக மாறி விட முதன் முதலாக, தன் காதலை தோழியிடம் கூறினாள் அவள்.

## 16

**ச**க்தி கூறிய எல்லா விஷயங்களையும் அமைதியாகக் கேட்டாள் அபி.

கடைசியில், சிபியின் மேல் தான் கொண் டிருக்கும் காதலையும், சிபியின் புறக்கணிப்பையும் கூறி அவள் அழ ஆரம்பித்தபோது, மெதுவாக அவளைச் சமாதானப்படுத்தினாள்.



சக்தியின் மனதைப் புரிந்து கொண்டவளாக, ''ஏய்... அழக்கூடாது சக்தி! உன் மனசு எனக்கும் புரியுதுடி... ஆனா ஒரு விஷயம்தான் எனக்குப் புரியலை... முன்னாடி, நீ அவரை விரும்பலை... ஓகே!

''ஆனா இப்போ அவரை நேசிக்க ஆரம்பிச்சிட்டே இல்லை... அப்புறமா, எது உன்னைத் தடுக்குது? ஈகோவா... அப்படி இல்லைன்னா, அவர்கிட்ட நேராவே உன் காதலைச் சொல்லிட வேண்டியது தானே?'' அழுத்தமாகக் கேட்டாள்.

தவிப்புடன் நிமிர்ந்த சக்திக்கு, முதலில் என்ன சொல்வ தென்றே புரியவில்லை.

பிறகு மெலிந்த குரலில், ''இல்லைடி அபி! அவர் என்னைத் தெரிஞ்ச மாதிரி நடந்திருந்தார்னா, நிச்சயமா நான் என் மனசைப் பத்தி அவர்கிட்ட சொல்லி இருப்பேன்... ஆனா என்னைத்தான் அவர் புரிஞ்சிக்கலையே? நான் எப்படிச் சொல்றது... என்னன்னு சொல்லுவேன்...'' விழிகள் கண்ணீரில் மிதக்கக் கேட்டாள்.

''எல்லாரையும் அடையாளம் தெரிஞ்சிக்கிட்டவருக்கு, உன்னை மட்டும் எப்படித் தெரியாமப் போகும்?''

''அதான் எனக்கும் குழப்பமா இருக்கு அபி! நீதானே சொன்னே... சில ஞாபகங்கள் மெதுவாத்தான் வரும்னு...! ஒருவேளை அவர் என்னை யாருன்னு தெரிஞ்சிட்டே, வெளியே தெரியாத மாதிரி நடந்துக்கறாரோ? அப்படின்னா அவரு என்னை வெறுக்கறாருன்னுதானே அர்த்தம்...

''ஆனா இப்ப அவர் மனசுல நான் இல்லைங்கறது மட்டும் தெளிவாத் தெரியுது... ஒரு காலத்துல அவர் விடாம

என்னைத் தொடர்ந்து வந்தப்பல்லாம், அவரோட உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காம, நான் விலகிப் போனேன்...

''இப்போ, நான் அவரை மனசால நெருங்கிப் போறப்ப, அவர் என்னை விட்டு எங்கேயோ ரொம்ப தூரம் விலகிப் போற மாதிரித் தோணுது... என்னால அதத் தாங்க முடியலை அபி!'' குமுறலுடன் கூறிவிட்டு, முகத்தை மூடி அழ ஆரம்பித்தாள் சக்தி.

எவ்வளவு படித்திருந்தாலும், பெரிய பதவிகளில் இருந்தாலும், காதல் மட்டும் மனிதர்களை உருக்கிப் புரட்டிப் போட்டுவிடுவது புரிய, மெதுவாக வருடி அவளைத் தேற்றினாள் அபி.

''சக்தி... கொஞ்ச நாள் போகட்டும் பார்ப்போம்... நீ கொஞ்சம் பொறுமையா இரு!'' என்று கூறி அவளை யோசனையுடன் அனுப்பி வைத்தாள்.

மறுநாளிரவு ஊருக்குக் கிளம்பியபோது, பதினைந்து நாட்களில் அங்கு அவர்களின் கிராமத்திற்கு வருவதாகக் கூறினான் சந்துரு.

வர்ஷினியிடம் உச்சி முகர்ந்து பிரியாவிடை பெற்ற போது அவள் நெஞ்சம் பாறையாய் கனத்திருந்தது.

காலையில் வேலைக்கு வந்திருந்த புதுப் பெண்ணுடன் செவந்தியும் வந்திருந்தாள்.

விசாலத்திடம், ''அம்மா... நம்ம பெரியய்யா வீட்டிலக் கல்யாண ஏற்பாடு நடக்குதாம்... சின்னய்யாவுக்கு நேத்து பொண்ணெல்லாம் பேசி முடிவாயிடுச்சின்னு, எங்க சித்தப்பா அங்கு தோட்ட வேலை பாக்குறாருல்லே... அவரு காலையிலதான் சொன்னாரு. நேத்திக்கு எல்லாருக்கும் இனிப்பெல்லாம் குடுத்தாங்களாம்'' உற்சாகத்துடன் கூறிக் கொண்டிருந்தாள்.



சக்தியின் மனதில், சாட்டை கொண்டு அடித்தாற்போல் சுரீரென்று ஒரு வலி!

மருத்துவ மனைக்குச் சென்று நோயாளிகளைப் பரி சோதித்த போதெல்லாம், மனம் ஒரு நிலையில் இல்லாமல் தத்தளித்துத் தவித்தது.

* * *

**மா**லையில் ரஞ்சனி குழந்தை தனாவிற்குத் தடுப்பூசி போடுவதற்காக இளங்கோவுடன் வந்திருந்தாள். இரு வருமே மிகுந்த மகிழ்ச்சியுடனிருந்தனர்.

''என்ன சக்தி... நீங்க போன ஃபங்ஷன் நல்லா நடந்துதா? ரொம்ப டல்லாத் தெரியறீங்க... அலைச்சலா?'' ஆர்வத் துடன் விசாரித்தாள் அவள்.

''ஆமாம்... பங்ஷன் கிராண்டா நடந்து முடிஞ்சுது ரஞ்சனி... அம்மா, அப்பா எல்லோரும் நல்லாருக்காங்களா?''

''எல்லாரும் நல்லாருக்கோம்... ஏன், அண்ணாவைப் பத்தி விசாரிக்கமாட்டீங்களா? உங்களுக்கு ஒரு குட் நியூஸ்... அண்ணா கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்க! அப்பா அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்! அண்ணி அவருக்குன்னே பிறந்த மாதிரி இருக்காங்க... ரொம்ப அழகு! நேத்துதான் பொண்ணு வீட்டிலயிருந்து பேசி னாங்க... அப்புறம்தான் எல்லாரும் கலந்து பேசி முடிவு செஞ்சோம்... ஒரு வழியா அண்ணனை சம்மதிக்க வச்சாச்சு...

''எங்களுக்கு முன்னாடியே தெரிஞ்சவங்கதான்... அதனால இன்னிக்கு காலையில சம்பிரதாயப்படி அவங்க

வீட்டுக்குப் போய் பேசி முடிச்சிட்டோம்... பொண்ணு தேவதையாட்டம் இருக்காங்க... சக்தி! நீங்க பாத்துட்டு சொல்லணும்...

''நீங்கதான் என் அண்ணியா வரணும்னு நான் ரொம்ப ஆசைப்பட்டேன். ஆனா நீங்கதான் பிடி குடுக்க மாட்டேன்னுட்டீங்க... மறுத்திட்டீங்க...! பரவாயில்லை. இன்னும் ரெண்டு வாரத்துல அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அறுபதாம் கல்யாணம்... நம்ம வீட்டுலயே பண்ணலா மின்னு இருக்கோம்...

''அன்னிக்கு சாயந்தரமே, அண்ணாவோட நிச்சயதார்த் தத்தையும் வச்சுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கோம் சக்தி... நீங்க கட்டாயம் வரணும்'' என்றழைத்தாள்.

இளங்கோவும் அவளிடம், ''நாம முதல்லே ஒண்ணு நினைக்கிறோம்... ஆனா காலம் வேற /மாதிரித் தீர்மானிச்சிடுது... இல்லை, சக்தி!'' என்றபடி சிறு முறு வலுடன் விடைபெற்றான்.

மனம் எரிமலையாகக் குமுற, அதை முகத்தில் காட்டாமல் மறைத்தாள் அவள்.

இதயத்துக்குள் வழிந்த கண்ணீரைக் கண்களுக்கு அறிமுகப்படுத்தாமல், காத்திருந்த நோயாளிகளைப் பார்வையிட்டு முடித்தபோது, தலைக்குள் ஏதோ ஒருவித இறுக்கம் பரவி தலை விண்ணென்று தெரித்தது.

வீட்டிற்குச் சென்றபோது, செவந்தியும் விசாலமும் வெராந்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் புன்னகையுடன் எழுந்தவர், ''நம்ம பெரியவரோட பையனுக்கு கல்யாணம் முடிவாயிடுச்சாம் சக்தி... ரஞ்சனியும், இளங்கோ தம்பியும் வந்து சொல்லிட்டுப் போனாங்க... செவந்தி காலையில சொன்னப்ப நான் நம்பலை! ஏன் சக்தி... என்னவோ போல இருக்கே?'' என்று கேட்டார்.



''எனக்கு ரொம்பத் தலை வலிக்குதும்மா... நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கறேன்... என்னைத் தொந்தரவு பண்ணா தீங்க'' என்றபடி வேகமாக உள்ளே சென்றாள் அவள்.

தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தியதுமே, கண்ணீர் மடைதிறந்த வெள்ளமாய் பெருக ஆரம்பித்தது.

வெகு நேரம் கழித்து முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்து, இரவுச் சாப்பாடு வேண்டாம் என்று கூறிவிட்டு, ஒரு டம்ளர் பாலுடன் படுத்தாள் சக்தி.

சக்தியின் சிவந்த முகத்தைப் பார்த்த விசாலத்திற்கோ, மனதில் ஆயிரம் யோசனைகள்!

* * *

**வெ**குநேரம் கழித்து, அந்த இரவு நேர மௌனத்தின் அடர்த்தியை சிதறடித்தது, திடீரென்று ஒலித்த ஒற்றைப் பறவையின் குரலோசை!

தன்னைப் போலவே, அதுவும் இந்த இரவில் தவித்த படித் தனித்திருக்கிறதோ என்ற புரியாத உணர்வில் தத்தளித்தாள் சக்தி.

இரவும் சாப்பிடாமல், உறக்கத்தையும் தொலைத்து விழித்திருந்ததில், மனமும் உடலும் சோர்வடைந்துவிட, விடியும் போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள்.

என்றுமே எட்டு மணிவரை அவள் உறங்கியதில்லை என்பதால், கதவைத் தட்டி அவளை எழுப்பிய விசாலத் துக்கோ, அவள் முகமே பல கதைகள் கூறுவதாய்!

முன் நெற்றியில் விரல்களைப் பதித்தவர், காய்ச்சல் வந்தது போல் கணகணத்த உடம்பும், சிவந்திருந்த முகமும் கண்டு பதறிப்போனார்.

''சக்தி! இன்னைக்கு லீவு போட்டுடேன். முகமே என்னவோ போல இருக்கு... உடம்பு கொதிக்குது... அலைச்சல் ஒத்துக்கலையாடா?'' பரிவுடன் கேட்டார்.

''இல்லம்மா... இப்பதானே லீவு போட்டுட்டு ஜாயின் பண்ணியிருக்கேன். உடனே எப்படி லீவு போடறது? வெந்நீர் எடுத்து வைங்க... நான் குளிச்சிட்டுக் கிளம்பணும்.''

சுரத்தின்றிக் கூறியபடிச் சென்றவளை, வியப்புடன் பார்த்தார் விசாலம்.

மருத்துவமனைக்குச் சென்றபோது, ஒரே நாளில் ஒய்ந்து போயிருந்தவளை, சாந்திகூட உடம்புக்கு என்னவென்று விசாரித்தாள்.

பிறகு நோயாளிகளின் வருகை மற்றதை மறக்கடிக்க, திடீரென்று வெளியே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

பதட்டத்துடன் நிமிர்ந்தால், இளங்கோவுடன் வந்த சிபியைப் பார்த்த சக்தியின் மனதில் ஒரு பூ மலரத் தொடங்கியது.

அவன் விழிகள், அறிமுகமில்லாத ஒருவரைப் பார்ப்பது போன்று, அவளை அளவெடுத்து, இதழ்களில் ஒரு செயற்கையான புன்னகையைத் தேக்கின.

மனம் மட்டும் சிணுங்கலாய் முனகியது!

*''அன்று...*
*உன் புறக்கணிப்பால்*
*நீ கசக்கிப் போட்ட*



*என் மனதில்தான்...*
*எத்தனை காதல் சுருக்கங்கள்!*
*இன்று...*
*உன் இதழ்களால் மட்டுமே*
*நீவி அவற்றை...*
*செப்பனிட முடியுமென்று*
*நினைக்கிறேன் நான்!*
*நீ...?''*

இளங்கோ தான் அவளிடம் பேசினான்.

''எப்படி இருக்கீங்க சக்தி? இந்தப் பக்கம் பத்திரிகை குடுக்க வந்தோம். அப்படியே உங்களைப் பாத்துட்டுப் போகலாம்னுதான்! உங்களுக்கு அத்தையும் மாமாவும் வீட்டுக்கே வந்து தரேன்னாங்க... அப்ப நாங்க கிளம்பறோம்!''

சிறுமுறுவலுடன் விடை பெற்றான்.

## 17

**சி**பியின் பார்வை, ஒரு கணம் அதிகமாகவே, சோர்ந்திருந்த சக்தியின் முகத்தில் பதிந்து விலக, சிறிய தலையசைப்புடன் அவனும் விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்ற பிறகு, அந்த இடமே வெற்றிடமாய்!

தன் இதயமே தன்னைவிட்டு நீங்கிச் செல்வது போலிருந்தது அவளுக்கு!

அன்று மாலையே வீரபாண்டியனும் மணிமேகலையும் அவளுடைய வீட்டிற்கு வந்தனர்.

வெற்றிலை, பாக்கு, பூ, பழம் எல்லாம் வைத்து, பத்திரிகையையும் வைத்துக் கொடுத்தனர்.

''சக்தி! நீ எங்க வீட்டுப் பொன்னு மாதிரி! ரஞ்சனி போலதான் எங்களுக்கு நீயும்... காலையிலேயே சீக்கிரமா வந்துடணும்! சிபிக்கும் அன்னிக்கு சாயந்தரம் சிம்பிளா நிச்சயம் பண்ணலாம்னு இருக்கோம்! அம்மா நீங்களும் கட்டாயம் வந்துடுங்க!'' என்றபடிக் கிளம்பினார் மணி மேகலை.

இப்போதெல்லாம் ஏனோ காதலெனும் வார்த்தையின் மீதே சக்திக்குக் கோபம் வந்தது.

யார் கையிலிருந்தாலும் சிரித்துக் கொண்டிருக்கும் மரப் பாச்சி பொம்மையாய் இருக்க, மனம் சம்மதிக்கவில்லை.

சிடுசிடுப்பும், கோபமும் ஆட்படுத்திக் கொள்ள, தன் இயல்பைத் தொலைத்துவிடுவோமோ என்ற பயம் கூட வர ஆரம்பித்தது.

* * *

பிறகு வந்த நாட்கள் எப்படிச் சென்றதென்றே தெரியாமல் விரைந்தன. அவளுக்குள்ளும் ஆயிரம் கேள்விகள்!

''ஒரு ஓரவிழிப் பார்வை, ஒரு பெண்ணை இந்த அளவுக்கு சரிக்க முடியுமா? தன் விருப்பங்களை எல்லாம் விட்டுவிட்டு இப்படி ஒருத்தி சலனப்பட்டு நிற்க முடியுமா?''

மதியம், தென்றல் வருடாத அந்தத் தருணங்களில், அவன் நினைவுகள் மட்டும் துணையிருக்க, ஒரு புறா மட்டுமிருந்தால் போதுமென்று தோன்றியது... காற்றில் சேதி சொல்லியனுப்ப...!

அந்த வாரக் கடைசியில், சந்துருவும் தன் குடும்பத்துடன், காரிலேயே ஊரிலிருந்து வந்துவிட்டான்.



வர்ஷனி வந்தது, அவளுக்குப் பெரும் நிம்மதியும் மாற்றமுமாய்...!

அவளுடன் விளையாடியபடியே, மழலையாகப் பேசி ஒட்டிக் கொள்ளும் அவளை ரசித்தபடியே, பொழுது வேகமாகச் சென்றது.

ஆனாலும், மனதின் ஓரம் தன் இயல்பையும் இனிமையை யும் தான் தொலைத்திருப்பது மட்டும் புரிவதாய்...!

ஒரு நாள் சாயந்திரம் அவளும் வர்ஷினியுமாகத் தோட்டத்தில் அங்குமிங்கும் ஓடிப்பிடித்து விளையாடினர்.

அவள் குறும்பை சக்தி ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்த போது தான் வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

திரும்பினால், இளங்கோவும் சிபியும் வந்து கொண் டிருக்க, சிபியின் விழிகள் சோம்பலுடன் அவளை வருடின.

விழியகற்ற முடியாமல், ஒரு கணம் அவனையே பார்த்தபடி நின்றாள் சக்தி!

பிறகுதான், தான் நைட்டி அணிந்திருப்பதையே உணர்ந் தாள்.

தர்மசங்கடத்துடன் ''வாங்க'' என்று பொதுவாக அழைத்தபடி, வர்ஷினியைத் தூக்கிக் கொண்டு விரைந்து உள்ளே சென்றாள்.

சந்துருவும், விசாலமும் அவர்களை வரவேற்று அமரச் செய்து, டிபன் காபி கொடுத்தனர்.

அவசரமாக ஒரு சுரிதாரை எடுத்து அணிந்து கொண்டு வெளியே வந்து, சுகந்தியினருகில் மௌனமாக நின்று கொண்டாள் சக்தி.

சந்துரு, இருவரிடமும் உற்சாகத்துடன் பேசிக் கொண் டிருந்தான்.

இடையிடையே ஒலித்த சிபியின் குரல், ஆழமாய் பிசிறின்றி ஒலித்து, அவள் இதயத்தில் கனமாகப் பதிந்தது.

பிறகு அவர்கள் விடைபெற்றுக் கிளம்பியபோது, "தனா எப்படி இருக்கான்... நல்லாருக்கானா?" இளங்கோவிடம் மெல்லிய குரலில் விசாரித்தாள் அவள்.

"ம்... நல்லாருக்கான் சக்தி! உங்கண்ணன் ஊரில இருந்து வந்திருக்காருன்னு தெரிஞ்சுது... அத்தையும் மாமாவும் அவருக்கும் ஒரு பத்திரிகைய நேராவே பாத்து கொடுத் திடுங்கன்னு சொன்னாங்க... அதான் வந்தோம்!" என்றபடிக் கிளம்பினான்.

சிபி விடைபெறும் விதமாகப் புன்னகைத்துத் திரும்பியபோது, வாட்களாய் இரு விழிகளும் சந்தித்துக் கொண்டன.

***அவன் இதயம் மட்டும் கேள்வி கேட்டது!***
***இமைப் போர்வையில்***
***குளிர் காயும்***
***நம் ஈரவிழிகள்...***
***மொழி ஆடையின்றி***
***மௌனமாய் சந்தித்தபோது...***
***பரிசாய் நீ அளித்தது...***
***காதலெனும்***
***பெரும் வரமோ...?***

பிறகு, நாட்கள் நெருங்க, நெருங்க சக்தியால் இயல் பாகவே இருக்க முடியவில்லை.



சிபி மணந்து கொள்ளப் போகும் பெண், எப்படி இருப்பாள்... ஃபங்ஷனுக்கு வருவாளா...? என்ற கேள்விகள் சரங்களாய்!

அக்னி வளையத்திற்குள் நிற்பது போல், மனம் உலைக் களமாய் கொதித்தது.

சரியாகச் சாப்பிடாமல், மனது முழுவதும் கவலைகளைத் தேக்கியதில், உள்ளத்தை உருக்கிய வேதனை, உடலையும் மெலியச் செய்தது.

ஆனால், அவன் மேல் கொண்ட காதலை யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்று அடம் பிடித்தது, நெஞ்சம்!

அவள் மனதை வேறு எதிலும் அலைபாய விடாதபடி, தினமும் கோவில், சினிமா, டவுனில் ஷாப்பிங் என்று எங்காவது காரில் அழைத்துச் சென்று கொண்டிருந்தான் சந்துரு.

* * *

**வீ**ரபாண்டியனின் அறுபதாம் கல்யாண நாளும் வந்தது.

அன்று விடிகாலையிலேயே எழுந்து எல்லோரையும் எழுப்பினார் விசாலம்.

தலைக்குக் குளித்துவிட்டு, தளரப் பின்னலிட்டு, சுகந்தி வாங்கித் தந்திருந்த இள நீலப் பட்டணிந்து, முத்து செட்டையும் போட்டுக் கொண்டு கண்ணாடியில் பார்த்த போது, சக்தி ரவிவர்மாவின் ஓவியப் பாவை போலிருந்தாள்.

வர்ஷினியும் அவள் வாங்கிக் கொடுத்தப் பட்டுப் பாவாடையில், குட்டி ராணியைப் போல் வர, சந்துருவின் காரில் அனைவரும் கிளம்பிச் சென்றனர்.

வாசலிலேயே நின்று வரவேற்றுக் கொண்டிருந்த இளங்கோவும், ரஞ்சனியும் அவர்களைக் கண்டதும் புன்னகையுடன் முன்னால் வந்து வரவேற்றனர்.

சிபியைத் தேடி அவள் விழிகள் தவிக்க, அவனை மட்டும் எங்குமே காண முடியவில்லை.

ஹாலுக்குள் நுழைந்ததுமே, மணிமேகலை அவர்களை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தார்.

முதலில் ஹோமம் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

சிறிது நேரக் காத்திருப்பிற்குப் பிறகு, சந்தன நிற ஷெர்வாணியும், குங்கும நிறச் சால்வையும் அணிந்து கம்பீரமாக நடந்து வந்த சிபி, வீரபாண்டியனுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

சக்தியின் விழிகள், அங்கு வந்திருந்த உறவுப் பெண் களிடம் அலை பாய்ந்து, சிபியின் மணப்பெண் யாராக இருக்கும் என்று தேடி, ஒரு அழகிய பெண்ணிடம் நிலைத்தன.

பிறகு, சஷ்டியப்த பூர்த்திக்கான சடங்குகள் முடிந்து, திரு மாங்கல்யம் அணிவித்துத் திருமணமும் இனிது முடிந்தது.

இளங்கோவின் பெற்றோரையும் நெருங்கின உறவினர் களையும் சக்தியின் குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத் தினாள் ரஞ்சனி.

அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, திருமணம் முடிந்த தம்பதியிடம் ஆசீர்வாதம் வாங்குவதற்காக ஒவ்வொருவராகச் செல்ல ஆரம்பித்தனர்.

முதலில், இளங்கோவும், ரஞ்சனியும் தனாவுடன் நமஸ்கரித்து எழ, சிபி முன்னால் வந்தான்.



''ஒரு நிமிஷம்ப்பா!'' என்ற வீரபாண்டியன் ''என் மகன் சிபிக்கு இன்னிக்கு சாயந்தரம் திருமண நிச்சயம் பண்ணலாமின்னு இருக்கோம்! நீங்க எல்லாரும், இருந்து அதிலே கலந்துட்டுதான் போகணும்... மணப் பொண்ணு கூட இங்கே வந்திருக்காங்க'' என்று அறிவித்தபோது, உறவினர்களிடையே பெரும் சலசலப்பு!

சக்தியின் விழிகள் அந்த இடத்தையே சுழன்று, மணப் பெண் யாரென்று தேடின.

மனதிற்குள் புதிதாய் பயச் சிறகுகள் முளைத்துத் தடதடக்க ஆரம்பிக்க, வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறியவளை, சிபியின் ஓரப் பார்வை மட்டும் விடாமல் தொடர்ந்தது.

விழிகளில் நீர் துளிர்த்து பாதையை மறைத்துவிட, உயிரையே பிடுங்கி யாரோ வெளியே வீசியதுபோல் ஒரு வலி எழப் பின்புறம் சென்றாள் சக்தி.

* * *

திடீரென்று அழுத்தமான காலடியோசை ஒன்று அருகில் வருவது புரிந்தது.

அவள் அவசரமாகக் கண்களைத் துடைத்துத் திரும்பிய போது அங்கு ஆழமான பார்வையுடன் சிபி நின்றிருந்தான்.

ஒரு கணம் அவளுடைய விழிக் கதவுகளை உடைப் பதுபோல் ஊடுருவியவன், ''சக்தி.. மைலவ்! உனக்கு சம்மதம்தானே? என் அன்புத் தோழியா, மனைவியா... என் உயிரா என்னோடக் கடைசி வரைக்கும் வரதுக்கு?'' மென்மையாக அவன் கேட்டபோது, இதயம் ஒரு கணம் நின்று துடிக்க, சட்டென்று அவள் கணகள் பனித்தன.

தலை குனிந்திருந்தவள், ''ம்... நிச்சயமா வருவேன் சிபி'' என்றாள் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்!

உடலெங்கும் பரவிய தவிப்புடன், உயிரை அசைத்துப் பார்த்து, சந்தோஷத்தின் உச்ச நிமிடங்களை அறிமுகப் படுத்தின... அவன் வார்த்தைகள்!

அவள் நிமிர்ந்தபோது, நாணத்தின் முகவரியை உடனே அவள் கன்னத்தில் வரவழைத்தது அவன் பார்வை!

அவன் விழிகளிரண்டும், ஆயிரம் நேசச் சந்தங்களை அறிமுகப்படுத்த உணர்வுகளின் தாக்கத்தில், நாபியெங்கும் ஒரு சிலிர்ப்பு வந்தது.

நம்ப முடியாத கனவொன்று நிஜமானது போல் மனம் பட படக்க, அவளுடைய கைப்பற்றி அவன் அழைத்துச் சென்ற போது, அனைவரும் அவர்களுக்காகக் காத்திருந்தனர்.

* * *

**வி**ழியோரங்கள் கசிய, சிபியுடன் சேர்ந்து நமஸ்கரித்து எழுந்த சக்தியைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார் மணிமேகலை.

அவள் தவிப்புடன் நிமிர்ந்தபோது, எல்லோருடைய முகங்களிலும் பொருள் பொதிந்த புன்னகை!

அதுவரை மனதை அழுத்தியிருந்த கனமான எதுவோ ஒன்று விடைபெற்றுச் சென்றது போல், மனம் லேசானது.

அனைவரும், இருவருக்கும் கைகொடுத்து வாழ்த்துக் களைத் தெரிவிக்க, தான் மட்டுமே இந்த ஏற்பாட்டைப் பற்றி அறியாமலிருந்தது பெரிதும் வெட்கம் தருவதாய்...!

அவளருகில் வந்த ரஞ்சனி, ''சரியான அழுத்தம் அண்ணி நீங்க! எவ்வளவோ பேசிப் பார்த்தும், ஒத்துக்கவே இல்லையே... நீங்க அண்ணனை விரும்பறேன்னு...! ஒரு நிமிஷம் என் கூட வாங்க...!'' என்று அழைத்துச் சென்றாள்.



அப்போது அருகில் வந்த சந்துருவிடம், ''அண்ணா...! உங்களுக்கும் முன்னாடியே தெரியுமா?'' செல்லக் கோபத்துடன் கேட்டாள் சக்தி.

''ஆமாம்... நீ அழுத்தக்காரி! ஒண்ணுமே சொல்லலை... ஆனா மாப்பிள்ளை என்கிட்ட, நீ ஊரில இருந்து கிளம் பறதுக்கு முன்னாடியே எல்லாத்தையும் சொல்லிட்டாரு'' என்றான் குறும்புடன்.

''அம்மா... நீங்களுமா...?'' என்பது போலப் பார்த்த வளை ஆனந்தக் கண்ணீருடன் அணைத்துக் கொண்டார் விசாலம்.

ஒரு அறைக்குள் அவளை அழைத்துச் சென்ற ரஞ்சனி குறும்புடன் ''ஆல்தி பெஸ்ட் அண்ணி'' என்றபடித் திரும்பி கதவைச் சாத்திவிட்டு வெளியே சென்றாள்.

நிலவைப்பிடிக்க, மேகப் பாதையில் நடந்து செல்வதைப் போல் சிலிர்த்தது, சக்தியின் மனம்!

அந்த நிமிடம், வாசலில் கட்டியிருந்த ஒலிபெருக்கியி லிருந்து கசிந்த பாடல் வரிகள், அவளுடைய இதயத்தில் சுகமாய் பரவின.

***''இமையாக நானுமிருப்பேன்...
இமைக்காமல் பார்த்து ரசிப்பேன்...
பல ஜென்மம் நான் எடுப்பேன்...
உனக்காக காத்திருப்பேன்!
காதல் வெண்ணிலா... கையில் சேருமா...
சொல்லு பூங்காற்றே...''***

## 18

சிபி அங்கு ஜன்னலோரம் நின்று அவளுக்காகக் காத்திருந்தான்.

பூமி பிளந்து தன்னை உள்வாங்கி விடாதா என்ற அச்சமும், சிபி என்ன சொல்லப் போகிறானோவென்ற தவிப்பும், அவளை அசையவிடாமல் சிலையாக்கின.

கைகளைக் கட்டியபடி, ஜன்னல் வழியே வெளியே பார்த்திருந்தவன் திடீரென்று திரும்ப, அவன் முகத்திலிருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

***ஆனால் அவன் இதயம் கோரியது!***
***என்***
***இதய வீணை நீ மீட்ட....***
***பார்வைத் தந்திகளை***
***பரிசாய் தருகிறேன்!***
***'எனக்கு... நீ வேண்டும்...***
***நீ மட்டுமே வேண்டும்!***
***வரும் என் பொழுதுகள்***
***ஒளிபெற...***
***என்***
***உயிர்ப்பூ மலர!***

மௌனமாக அவன் நின்றிருக்க, ஒரு கணம் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து நின்றவள், மறுகணம் துணிவை வரவழைத்தபடி, மெதுவாக அவனருகில் சென்றாள்.

அசையாமல் நின்று அவளை இமைக்காமல் நோக்கியவனிடம், ''சிபி, நான் உங்களை உயிரா விரும்பறேன்... ஐ லவ் யூ! உங்களை ரொம்ப நாள் காத்திருக்க வெச்சிட்டேன்... இல்லை! சாரி சிபி... லட்சம், கோடி சாரி!'' என்று உருகியபோதும் அவனிடம் எந்த அசைவுமில்லை.



''என்னை விருட்சமாக்கிய என் தந்தை இறந்தபோது, என் வேரினில் பாதியைத் தொலைத்தேன்... இன்று என் வேரென நீயிருக்கிறாய்... இனி நான் வீழ்ந்து விடாதிருப்பேன்'' என்று அவனிடம் கூற வேண்டும் போல்!

ஆனால் அவனுடைய மௌனமே... பெரும் போர்க் கருவியாய்...!

தான் என்ன செய்தால், அவன் தன்னிடம் பேசுவான்... அவன் புன்னகை மலரும் என்ற தவிப்புடன் யோசித்தவள், மெதுவாக நுனிக் கால்களில் உயர்ந்து அவனுடைய கன்னக் கதுப்பில் மென்மையாக இதழ் பதித்தாள்.

அனிச்சை செயலாய் உடனே அவன் விழிகள் கிறங்கி விட, இமைச் சிப்பிக்குள் கருப்பு முத்துக்கள் ஒரு கணம் காணாமல் போயின.

வெகு நாட்களாய் அவள் நினைவுகளுடன் ஏக்கம் சுமந்து காத்திருந்து காயப்பட்ட அவன் உள்ளத்தை மருந்து கொண்டு மயிலறகாய் வருடியது, அவளின் முதல் முத்தம்!

மறு கணமே சக்தியின் பாதங்கள் மண்ணை விட்டு விண்ணில் பறந்தன.

அவளைத் தன்னுடன் சேர்த்துத் தூக்கிச் சுழற்றியவனின் விழிகளில் காதலின் சுவடுகள், முழு அர்த்தத்துடன் தெரிந்தன.

''சிபி'' ஒரு விதச் சிலிர்ப்புடன் சக்தி முணுமுணுக்க, ஒரு வித ஆளுமை உணர்வுடன், ஏக்கம் கலந்த தாபத்துடனும் அவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன்.

பிறகு, அவளைத் தரையிறக்கியவன் ''என்னை எவ்வளவு நாள் காக்க வச்சிட்டே சக்தி? ஒரு வருஷம்

ரெண்டு வருஷம் இல்லை... ஆறு வருஷம்!'' என்றபோது அவனிடமிருந்து விலகி வியப்புடன பார்த்தாள் அவள்.

''எப்படி சிபி...?'' என்றபோது, அவளைத் திரும்பவும் தன் அணைப்பிலேயே நிறுத்தினான் அவன்.

''நீ ப்ளஸ் டூ முடிச்சிருந்தபோது, ஒரு நாள் நீ கோவிலுக்குப் போறப்பதான் முதன் முதலா நான் உன்னைப் பார்த்தேன் சக்தி... அன்னிக்கு என் மனசுலப் பதிஞ்சவ தான்... அப்புறம் விலகவேயில்லை...

'சக்திவாசினி'ன்னா என்ன அர்த்தம் தெரியுமா? எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவள்னு! அதுமாதிரிதான், பார்த்த அந்த முதல் நொடியிலேயே என் மனசுல நீங்காம நிறைஞ்சவ நீ!'' என்றான் விழிகளில் குறும்புடன்.

''அப்போ... என்னைத் தெரியாத மாதிரிப் பார்த்ததெல்லாம் வெறும் நடிப்பா சிபி...! நான் எவ்வளவு தவிச்சிப் போயிட்டேன் தெரியுமா? ஏளோ செத்துப் போயிடலாமான்னு இருந்தது.''

விழியோரங்களில் துளிர்த்த கண்ணீருடன், செல்லமாகக் கோபித்தாள்.

''ஒரு ஆறு மாசம் இப்படி இருநததுக்கே, உனக்கு இவ்வளவு கஷ்டமா இருக்கே! ஆறு வருஷமாக் காத்திருந்த எனக்கு எப்படி இருக்கும்னு உனக்குப் புரிய வேணாமா...? அதான்!'' சீண்டலுடன் கூறினான்.

''எப்பதான் என்னைத் தெரிஞ்சிட்டீங்க?'' சிணுங்கலாக கேட்டாள் அவள்.

''நான் சென்னையிலிருந்து ஆபரேஷன் முடிஞ்சு வந்தவுடனே, என்னை பார்க்க ஒரு பீஜ் கலர் புடவையில்



தேவதை மாதிரி வந்தியே, அன்னிக்கே!'' மௌனச் சிரிப்புடன் கூறினான் சிபி.

''நான் உங்களை விரும்பறது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

அவள் ஆவலுடன் கேட்டபோது, ''ம்... உன் ஃப்ரெண்ட் அபிநயாகிட்ட எல்லாம் சொல்லி அழுதியாமே, அன்னிக்கு நைட்டே, அவங்க என்னோடயும் இளங்கோவோடயும் எல்லாம் பேசிட்டாங்க...

''உடனே உங்கண்ணாகிட்டயும் பேசினப்புறம்தான், கொஞ்சம் உன் கூட விளையாடலாம்னு தோணிச்சு! அதனால எனக்கு கல்யாணத்துக்குப் பொண்ணு பார்த்திருக்கறதா, ரஞ்சனியும் இளாவும் உன்கிட்டச் சொன்னாங்க...

''ஆனா அதுக்கு முன்னாடியே, காலையிலேயே உங்கம்மாகிட்டே நேரிலயே போய் எல்லாரும் பேசி முடிச்சிட்டாங்க!'' என்றான் சிபி.

ஆச்சர்யத்துடன் விழி விரித்தவள், ''எனக்குத் தெரியாம எல்லா ஏற்பாடும் நடந்திருக்கு... நீங்க எல்லோரும் ஒண்ணா சேந்துட்டீங்க!'' குறையுடன் கூறினாள்.

''ஏய்... நாம ரெண்டு பேரும் இணையணும்கிறதுக்காகத் தானே எல்லோரும் சேர்ந்து பிளான் பண்ணினாங்க... ஆனா உன்னை யாருன்னே தெரியாத மாதிரி உணர்ச்சிகளைத் தொலைச்ச பார்வையை வரவழைக்க, நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?''

''ஒவ்வொரு தடவையும் என்னையறியாமல் ஒரு சின்ன உணர்வாவது வெளிப்பட்டுடும். பார்வையிலேயே இப்படின்னா, அப்புறம் பேச ஆரம்பிச்சா, நிச்சயமா என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க முடியாதுன்னுதான், உன்

கூடப் பேசவே இல்லை... அபிகூட இப்பக் கிளம்பி வந்துட்டேயிருக்காங்க...

''சாயந்தரம், நம்ம நிச்சயத்துக்குக் கரெக்டா வந்திடு வாங்க! ஆமாம்... யாரோ ஒரு பொண்ணு, என்னைக் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு முதல்லே மறுத்துட்டு, எனக்கு வேற பொண்ணோடக் கல்யாணம்னு சொன்ன வுடனே, ராத்திரி எல்லாம் அழுதாங்களாம்...

''அப்புறமும், நான் மறுநாள் ஹாஸ்பிடலுக்கு வந்தப்போ, ஒரே அழுமூஞ்சியா நின்னுட்டிருந்தாங்க... நான் கூட பயந்துபோய், பேசாம வேற பொண்ணை செலக்ட் பண்ணிடலா மான்னு யோசிச்சேன்!'' குறும்புடன் கண் சிமிட்டினான்.

''போங்க...'' என்றபடிப் பொய்க் கோபத்துடன் விலகிய வளை வேகமாக அணைத்து, சிபி அவள் இதழ்களைச் சிறை செய்ய, இதழும் இதழும் இணைந்து புதுக் கவிதைகள் எழுத ஆரம்பித்தன.

பல யுகங்களாய், அவள் இதயம் தேடிய உயிர் ஒன்று அவனிடம் இதமாகச் சரண் புகுந்தது போல்!

''சக்தி! இதுக்கெல்லாம் முக்கியக் காரணம் யாரு தெரியுமா? என் நண்பன் இளாதான்! நீயும் அவனும் எனக்குக் கிடைச்சது, பெரிய வரம் மாதிரித் தோணுது! என்ன ஒரு அற்புதமான மனுஷன் அவன்... எனக்காகவே யோசிச்சு... என் நன்மையையே மனசில நினைச்சி... நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி சக்தி!

பாரதியோட வரிகள் தான் நினைவுக்கு வருது... 'எங் கிருந்தோ வந்தான்... இடைச்சாதி நானென்றான் இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்'னு பாடணும் போலருக்கு.''



''உறவுகள்ங்கறது தானா அமையறது... ஆனா நட்பும், காதலும் நாம அமைச்சிக்கறது... அந்த ரெண்டு விஷயத்திலயுமே நான் ரொம்பக் குடுத்து வச்சிருக்கேன்'' என்று சிபி கூறியபோது, அவளுக்கு மிகவும் பெருமையாய்!

''சக்தி! அப்புறம்... உனக்காகவே இங்கே ஒரு ஹாஸ்பிடல் கட்டப் போறேன். நீ அதிலே இலவசமா இந்த கிராமத்து மக்களுக்கு சர்வீஸ் பண்ணலாம்... உன் அப்பாவோட விருப்பமும் அதுதானே? அப்படியே உன் பேஷண்ட்களோட சேர்த்து, என்னையும் ஒரு ஓரமாக் கவனிச்சிப்பே... இல்லை?''

ஆழ்ந்த குரலில் அவன் கேட்டபோது, தன் விருப் பங்களுக்கு எல்லாம் மதிப்புக் கொடுத்து, தன்னை உயிராய் நேசித்து, தனக்காக நெடுங்காலம் காத்திருந்தவனுக்கு, பதிலுக்குத் தான் என்ன செய்யப் போகிறோம் என்ற பரிதவிப்பில் மனம் உருகியது.

பொங்கிப் பெருகிய ஆனந்தக் கண்ணீருடன் அவன் முகத்தை இரு கரங்களால் ஏந்தி, பதிலுக்கு முத்த அருவியைப் பொழிய ஆரம்பித்தாள் சக்தி!

## 19

மறு நிமிடமே, அவனுக்குள் உறங்கி யிருந்த ஆண்மை விழிக்க ஆரம்பிக்க, அவளை சட்டென்று இழுத்து, தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டான் சிபி.

சிறிது நேரம் கழித்து, சக்தியின் காதருகில் அவன் குரல் குறும்புடன் மென்மையாய்ச் சீண்டியது.

''இன்னிக்குப் பாரேன்... நீ போதும் போதும்னு கெஞ்சினாலும், உன்னை நான் விடப் போறதில்லை...''

''சசீ...'' செல்லச் சிணுங்கலுடன் முனகிய சக்தியின் முகம் வெட்கத்தில் குங்குமமாய்...!

''ஏய்... என்ன சீ..! இத்தனை வருஷமா நான் தவிச்ச தவிப்பு எனக்குத்தான் தெரியும்... எனக்கு நீ வேணும்... இன்னிக்கே... இப்பவே... ஐ மிஸ்ட் யூ எ லாட் டியர்...''

அவள் காதருகில் கொஞ்சலும் தவிப்புமாக கிசுகிசுத்தான் அவன்.

இத்தனை வருடங்கள் தனக்காகக் காத்திருந்து... இந்த அளவிற்கு தன்னை உயிராய் நேசிக்கும் ஒருவனை அடைய, தான் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டுமென்று எண்ணும்போதே, அவள் உதடுகளிலிருந்து, ''கடவுளே...'' என்ற ஒற்றைச் சொல் முணுமுணுப்பாய் வெளிவந்தது.

''கடவுளை எதுக்கு இப்போ கூப்பிடறே...? இன்னிக்கு இங்கே அவருக்கு இடமில்லை... ஏய்... என்ன என் கேள்விக்கு இன்னும் பதிலே வரலே... உனக்கு சம்மத மில்லையா...?'' இறுக்கத்துடன் கேட்டான் சிபி.

உடனே இளம்பிறையாய் தன் இமைகளை மூடியவள், ''ம்...'' கூச்சத்துடன் தலையசைத்து சம்மதம் கூறினாள்.

தவிப்புடன் இதழ்களைப் பற்களால் கடித்தபடி அவள் நின்றிருக்க, ரோஜா மொட்டின் மேல் அழகுற ஜனித்த பனித் துளிகளைப் போலிருந்த அவளுடைய உதடுகளையே ரசனையுடன் அளவிட்டன, சிபியின் விழிகள்!

சிறிது நேரம் உலகின் இயக்கமே நின்று அசைவின்றிப் போனதைப் போல் அமைதியாக இருக்க, குழப்பத்துடன் அவள் கண் விழித்தபோது, அவளையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்த சிபியின் விழிகளில், ஏக்கமும் குறும்பும் கசிந்தன.



இனி, 'உன் இமையாக நானிருப்பேன்' என்ற மௌனச் செய்தி, அவன் விழிகளில்!

மறு நொடியே, ''வேண்டாம் சக்தி... இத்தனை வருஷம் காத்திருந்தாச்சு... இன்னும் கொஞ்ச நாள்தானே...! ஆனா, என்னை நம்பி... எனக்காக சம்மதம் சொன்னதுக்கு ரொம்ப தேங்க்ஸ் டார்லிங்...'' மென்மையாகக் கூறினான் அவன்.

மனதில் தேக்கி வைத்திருந்த காதலை... ஏக்கத்தை... தாபத்தை... அந்த நொடியே மடைதிறந்த வெள்ளமாக வெளிப்படுத்தி, அந்த சங்கமத்தில் மூழ்க நினைத்தாலும், அவளுக்காகவே யோசித்து... அதற்கு அணை போட்டுத் தடுத்துக் காத்திருக்க எண்ணிய அவனுடைய கம்பீரமும் நிமிர்வும், அவளை மெய் மறக்க வைத்தன.

''சிபி... ஐ லவ் யூ ஸோ மச்...'' ஆத்மார்த்தமாய் உயிரின் ஆழத்திலிருந்து வந்த வார்த்தைகள், அவனைப் பெரிதும் நெகிழச் செய்தன.

அவளுடைய முன்னுச்சி முடியைச் செல்லமாகக் கோதியபடி, ''தேங்க்யூ ஹனி...'' என்றான் சிபி, உணர்ச்சிகள் நிறைந்த குரலில்...!

வெளியே அவர்களுக்காகக் காத்திருந்த இளங்கோவின் இதயத்தில், எதையோ சாதித்து விட்ட பெரும் வெற்றி உணர்வு!

பகல், வெப்பத்துடன் தன் விழி திறக்க, வீட்டின் பின்புறம் ஓடிய நதி ஓர மலர்களின் மீது, சாமரம் வீசி வெம்மையைத் தணித்தது... மெதுவாக ஜதிபாடியபடி வீசிய தென்றல் காற்று.

